©
GOVERNMENT OF TAMIL NADU
2024

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 37.60 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 54A] சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 21, 2024
மாசி 9, சோபகிருது, திருவள்ளுவர் ஆண்டு-2055

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

| | பக்கங்கள் |
|---|---|
| சட்டமுன்வடிவுகள்: | |
| எண். 6/2024—தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டம் .. | 2–8 |
| எண். 7/2024—தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டம் .. | 9–12 |
| எண். 8/2024—தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் (திருத்தச்) சட்டம் | 13–14 |
| எண். 9/2024—தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையச் சட்டம் | 15–32 |
| எண். 10/2024—தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டம் | 33–36 |
| எண். 11/2024—தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியத் (திருத்தச்) சட்டம் | 37–38 |
| எண். 12/2024—தமிழ்நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமை (திருத்தச்) சட்டம் | 39–40 |
| எண். 13/2024—சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்புச் (திருத்த) சட்டம் | 41–52 |
| எண். 14/2024—தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் | 53–56 |
| எண். 15/2024—தமிழ்நாடு மாநில மருத்துவ மன்றச் சட்டம் | 57–73 |
| எண். 16/2024—தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டம் | 74–76 |
| எண். 17/2024—தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல் திட்ட சட்டம் | 77–88 |
| எண். 18/2024—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டம் .. .. .. | 89–94 |

**2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 6/2024

## 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கை வாயிலாகக் குறிப்பிடும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

144–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

தமிழ்நாடு சட்டம் 21/1994.

2. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 144 ஆம் பிரிவுக்குப் பிறகு பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"144–A. மலக்கசடு மற்றும் கழிவுநீர் மேலாண்மை.— (1) நபரெவரும், 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் 9/1999) வழங்கப்பட்ட செல்லுபடியாகக்கூடிய உரிமமின்றி, ஊராட்சி எல்லைகளுக்குள் குடியிருப்பு அல்லது வணிக அல்லது நிறுவன நோக்கங்களுக்காக, பயன்படுத்தப்படும் கட்டடம் எதிலுமிருந்து மலக்கசடு அல்லது கழிவுநீரைச் சேகரித்தல், கொண்டு செல்லுதல், அல்லது அகற்றுதல் கூடாது:

வரம்புரையாக, அரசின் உள்ளாட்சி அமைப்பு அல்லது சட்டப்பூர்வமான வாரியம் எதனினாலும், மலக்கசடு அல்லது கழிவுநீரைச் சேகரித்தல், கொண்டு செல்லுதல், மற்றும் அகற்றுதலுக்காக அத்தகைய உரிமம் எதுவும் தேவையானதாகாது.

(2) ஊராட்சி எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் கட்டடம் அல்லது அதன் பகுதியொன்றின், நேர்விற்கேற்ப, உரிமையாளர் அல்லது அனுபவத்தில் இருப்பவர்,—

(a) 2016 ஆம் ஆண்டு தேசிய கட்டட நெறி தொகுப்பின் தேவைகளுக்கு இணங்க கழிவுநீர்த் தொட்டி அல்லது அத்தகைய அமைவிட துப்புரவு அமைப்பின் கட்டமைப்பினை உறுதி செய்தல் வேண்டும்;

(b) 2016 ஆம் ஆண்டு தேசிய கட்டட நெறி தொகுப்பின்படி கழிவுநீர்த் தொட்டி அல்லது அமைவிட துப்புரவு அமைப்பின் வடிவ மற்றும் இயக்குமுறை தேவைகளின்படி முறையான கசடகற்றுதலை நடத்துதல் வேண்டும்;

(c) அவரது கட்டடத்திலிருந்து மலக்கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டுசெல்லுதல் அல்லது அகற்றுதலுக்காக உரிமதாரர் ஒருவரைத் தவிர நபரெவரும் ஈடுபடுத்தப்படவில்லை அல்லது ஈடுபடுத்துமாறு செய்யப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்;

(d) 2013 ஆம் ஆண்டு கைகளால் துப்புரவுசெய்யும் பணியாளர்களாக வேலையமர்த்தம் செய்வதைத் தடை செய்தல் மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வளித்தல் சட்டத்தில் (மையச் சட்டம் 25/2013) தடை செய்யப்பட்டவாறான, கழிவுநீர்த் தொட்டியில் அல்லது அமைவிட துப்புரவு அமைப்பில் அபாயகரமாக சுத்தம் செய்தலில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நபரெவரும் ஈடுபடவில்லை அல்லது பணியமர்த்தப்படவில்லை என்பதை உறுதி செய்தல் வேண்டும்;

(3) ஒவ்வொரு உரிமதாரரும்—

(a) 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1999) 179–D ஆம் பிரிவின் வகைமுறைகள் மற்றும் அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளுக்கு இணங்கலாகவும் (4) ஆம் உட்பிரிவின்கீழ் ஆய்வாளரால் அறிவிக்கப்படலாகிறவாறான நேரம், வழித்தடம் மற்றும் வடிகட்டப்படும் இடத்திற்கு உட்பட்டும் உரிமத்தின் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை பின்பற்றுதல் வேண்டும்;

(b) அகற்றுதல் வசதி அல்லது வடிகட்டப்படும் இடத்தைப் பயன்படுத்துவதற்கு வகுத்துரைக்கப்படலாகும் முறை ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய்க்கு மிகாமல் வடிகட்டப்படும் கட்டணம் செலுத்துதல் வேண்டும்;

(c) மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை சேகரித்தல் கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றிற்காக மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முறையையும் பதிவு செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் ஊர்திக் குறிப்பேட்டை பராமரித்தல் மற்றும் ஓர் ஆண்டில், ஒவ்வொரு காலாண்டின் 10 ஆம் நாளுக்கு முன்னர் ஆய்வாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்;

(4) (a) ஆய்வாளரானவர்,,–

(i) மலக்கசடு அல்லது கழிவுநீரை வடிகட்டுவதற்கான இடம், நேரம் மற்றும் வழித்தடம்;

(ii) உரிமதாரர்களின் புதுப்பிக்கப்பட்ட பட்டியல்; மற்றும்

(iii) உரிமதாரர்களுக்கு எதிராக புகார்களை பதிவு செய்தல் அல்லது விதிமீறல்களை தெரியப்படுத்துவதற்கான ஒரு வழிமுறை

ஆகியவற்றை மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்தல் அல்லது வலைதளம் அல்லது வலைவாயிலில் பதிவேற்றம் செய்தலும் வேண்டும்.

(b) கழிவுநீரை சிந்துதல் நிகழ்வின் தகவலினைப் பெறுவதன் பேரில், உரிமம் வழங்கும் அதிகார அமைப்பானது உடனடியாக உரிமதாரர் அல்லது குறிப்பிட்ட ஊர்தியின் பொறுப்பிலுள்ள நபரை, கழிவு நீரை கட்டுப்படுத்த, சுற்றுச்சூழல் மீதான தாக்கத்தினை குறைக்க மற்றும் சிந்திய இடத்திலிருந்து உடனடியாக கழிவுநீர் முழுவதையும் அகற்ற பணிப்புரையிடுதல் வேண்டும்.

(c) வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய அலுவலர்களை உள்ளடக்கிய மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுவானது, வடிகட்டுதலுக்காக அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர பிற இடங்களில் மலக்கசடு மற்றும் கழிவுநீர் அகற்றுதலைத் தடுக்க, குறிப்பிட்ட ஊர்திகளில் பொறுத்தப்பட்ட புவி இடங்காட்டி அல்லது ஆய்வுசெய்தல் போன்றவை மூலம் ஊராட்சி எல்லைக்குள் குறிப்பிட்ட ஊர்திகளின் இயக்கத்தைக் கண்காணித்தல் வேண்டும்.

(5) நபரெவரும், இந்தப் பிரிவை மீறினால் அல்லது அதனுடன் இணங்கத் தவறினால், அவரின் முதல் குற்றத்திற்காக இருப்பதைந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் மற்றும் இரண்டாவது அல்லது தொடர்ச்சியான குற்றங்களுக்காக ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படலாகும் தண்டத் தொகையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(6) (a) உரிமதாரர், இந்தப் பிரிவின் வகைமுறைகள் எதையும் அல்லது உரிமத்தின் வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் எதையும் மீறினால், மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுவானது, உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் உரிமத்தை இடைநீக்கம் செய்யுமாறு கோரலாம்.

(b) உரிமதாரர், இந்தப் பிரிவின்கீழ் இரண்டாவது குற்றத்திற்கான தண்டனை விதிக்கப்பட்டால் மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுவானது, உரிமம் வழங்கும் அதிகார அமைப்பிடம் உரிமத்தை ரத்து செய்யுமாறு கோரலாம்.

(7) (a) இந்தச் சட்டத்தில் அல்லது தற்போது நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தப் பிரிவின் படியான குற்றமொன்று செய்யப்பட்டுள்ளதாக அல்லது செய்யப்படுவதாக நம்பப்படுமிடத்தில், வட்டார வளர்ச்சி அலுவலரின் (கிராம ஊராட்சிகள்) படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவரும், அத்தகைய குற்றம் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட ஊர்தி அல்லது மோட்டார், குழாய், குழல், கருவி அல்லது உபகரணங்கள் உள்ளடங்கலாக பிற பொருள்கள் எதையும் கைப்பற்றலாம் மற்றும் காரணமற்ற தாமதம் எதுவுமின்றி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) முன்பு அதனை முன்வைத்தல் வேண்டும்.

(b) உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) முன்பு அத்தகைய ஊர்தி அல்லது பிற பொருள் எதுவும் முன்வைக்கப்படுமிடத்து, மற்றும் இந்தப் பிரிவின் கீழ் குற்றம் ஒன்று செய்யப்பட்டுள்ளதாக அவர் மனநிறைவடைந்தால் அத்தகைய குற்றத்திற்காக வழக்கு தொடரப்பட்டாலும், இல்லாவிட்டாலும் இந்தப் பிரிவின்கீழ் அக்குற்றவாளி பொறுப்பாகும் பிற தண்டணை எதற்கும் குந்தகமின்றி அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஊர்தி அல்லது பிற பொருள்களை பறிமுதல் செய்ய உதவி இயக்குநரானவர் (ஊராட்சிகள்) ஆணையிடலாம்:

வரம்புரையாக, பறிமுதல் செய்வதற்கான ஆணை ஒன்றை பிறப்பிப்பதற்கு முன்பு கைப்பற்றப்பட்ட அத்தகைய ஊர்தி அல்லது பொருளின் உரிமையாளர் அல்லது அவை, எவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதோ அந்த நபருக்கு,—

(i) பறிமுதல் செய்வதற்கு முன்மொழியப்பட்ட காரணங்களை அவருக்குத் தெரிவிக்கும் எழுத்து வடிவிலான அறிவிப்பு; மற்றும்

(ii) பொருட்பாட்டில் எழுத்து வடிவிலான அவரது முறையீடு ஒன்றினை செய்வதற்கான வாய்ப்பொன்று மற்றும் கேட்பதற்கான வாய்பொன்று

வழங்கப்படுதல் வேண்டும்.

(c) உதவி இயக்குநரானவர் (ஊராட்சிகள்) (b) கூறின்கீழ் பறிமுதல் செய்வதற்கான ஆணையை பிறப்பித்த பின்பு, பொதுநலன் கருதி அவ்வாறு செய்வது உகந்தது என்று கருதினால், பறிமுதல் செய்யப்பட்ட ஊர்தி அல்லது பொருட்களை பொது ஏலத்தில் விற்பதற்கு அவர் ஆணையிடலாம்.

(d) (c) கூறின்கீழ் பறிமுதல் செய்யப்பட்ட சொத்து எதுவும் விற்கப்படுமிடத்து மற்றும் (b) கூறின்கீழ் செய்யப்பட்ட பறிமுதல் செய்வதற்கான ஆணையானது (8) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையொன்றின் மூலம் தள்ளுபடி அல்லது நீக்கம் செய்யப்படுமிடத்து அத்தகைய ஏலத்தின் செலவுகளை கழித்த பின்பு, அல்லது அதற்கு தற்செயலான அத்தகைய விற்பனையின் வருமானமானது, அத்தகைய ஆணையில் குறிப்பிட்டவாறான அதன் உரிமையாளர் அல்லது பறிமுதல் செய்யப்பட்ட நபருக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

(8) (a) (7) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஆணை ஒன்றினால் பாதிக்கப்பட்ட நபரெவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் முப்பது நாள்களுக்குள் ஆய்வாளரிடம் மேல்முறையீடு செய்யலாம்.

(b) மேல்முறையீட்டை தீர்மானிக்கையில், ஆய்வாளர் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும் மற்றும் அத்தகைய மேல்முறையீடு மீது ஆய்வாளரின் முடிவு இறுதியானதாகும்

**விளக்கம்.—** இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, "அகற்றும் வசதி", "உரிமம் வழங்கும் அதிகார அமைப்பு", "மலக்கசடு", "உரிமதாரர்", "கழிவுநீர்" மற்றும் "குறிப்பிட்ட ஊர்தி" ஆகிய சொற்கள் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1999) 179—A ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.".

**நோக்கக் காரண விளக்கவுரை**

திறந்தவெளி சுற்றுச்சூழல் மற்றும் நீர் நிலைகளில் பொறுப்பற்றவாறு மலக்கசடு மற்றும் கழிவுநீரை அகற்றுவது சுற்றுச்சூழலுக்கு பெரும் ஆபத்தை முன்வைக்கிறது. எனவே, கழிவு நீர்த்தொட்டியை வடிகட்டுவதற்கு மற்றும் மலக்கசடு மற்றும் கழிவுநீரை கொண்டு செல்வதற்கு பயன்படும் சரக்குந்துகள், இழுவை வண்டிகள் அல்லது ஏதேனும் பிற ஊர்திகளின் இயக்கம் மற்றும் ஓட்டத்தை ஒழுங்குபடுத்துவது, ஊராட்சிப் பகுதிகளில் மலக்கசடு மற்றும் கழிவுநீரை பாதுகாப்பாக அகற்றுவதை உறுதி செய்வது கட்டாயமாகும்.

2. அதற்கிணங்க, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 21/1994) மேற்கூறிய நோக்கத்திற்காக தகுந்தவாறு திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**இ. பெரியசாமி,**
*ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்டமுன்வடிவின் 2–ஆம் பிரிவினால், உட்புகுத்த முன்மொழியப்பட்டுள்ள புதிய பிரிவான 144–A ஆனது, அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, விதிகளை செய்வதற்கு, அரசுக்கு அதிகாரமளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையே மற்றும் தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**இ. பெரியசாமி,**
*ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2024 பிப்ரவரி 21.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

**2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 7/2024

## 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கை வாயிலாகக் குறிப்பிடும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/1994.

110—A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 110 ஆம் பிரிவுக்குப் பிறகு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

“**110—A திடக்கழிவு மேலாண்மை.—** (1) ஊராட்சியால், இந்த நோக்கத்திற்காக, ஊராட்சி எல்லைக்கு உள்ளே அல்லது வெளியே குறிப்பிட்டு ஒதுக்கப்படும் ஓரிடத்தில் மூலத்திலிருந்து பிரிக்கப்பட்ட கழிவுகளை சேகரித்தல், கொண்டு செல்லுதல், பதப்படுத்துதல் மற்றும் அறிவியல் பூர்வமாக திடக்கழிவுகளை அகற்றுதல் போன்ற முறையினை ஏற்றுக் கொள்வதன் மூலம் பொது இடம் எதனையும் தூய்மையாக வைத்துதிருக்கும் வகையில் திடக்கழிவுகளை மேலாண்மை செய்வது ஊராட்சியின் கடமையாக இருத்தல் வேண்டும்.

(2) பொதுமக்கள், வீடுகள், வணிக நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களால் உண்டாக்கப்படும் திடக்கழிவுகளை பிரித்து வைத்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் அதை அப்புறப்படுத்துதல் வேண்டும் அல்லது ஊராட்சியிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

136 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 136 ஆம் பிரிவில், ‘‘கழிவு பொருட்கள்’’ எனும் சொல்லுக்காக, ‘‘கழிவு பொருட்கள், திடக்கழிவு" எனும் சொற்களானது மாற்றாக அமைக்கப்படுத்தல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

1986–ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்புச்) சட்டத்தின் (மையச் சட்டம் 29/1986) கீழ் செய்யப்பட்ட, 2016–ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி, உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளுக்குள் உண்டாக்கப்படும் திடக்கழிவுகளை அறிவியல் சார்ந்த முறையில் மேலாண்மை செய்வது அதன் பொறுப்புடைமை ஆகும். எனவே, திடக்கழிவை திறம்பட சேகரிப்பதற்கும் அறிவியல் சார்ந்த முறையில் அதனை அகற்றுவதற்கும் ஊராட்சிகள் மீது கடமை ஒன்றை ஏற்படுத்துவது அவசியமாகும். அதற்கிணங்க, அரசு, 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 21/1994) தக்கவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்ட முன்வடிவானது மேற்கண்ட முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**இ. பெரியசாமி,**
*ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்டமுன்வடிவின் 2 ஆம் பிரிவானது, அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, விதிகளை செய்வதற்கு, அரசுக்கு அதிகாரமளிக்கின்றது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையே மற்றும் தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**இ. பெரியசாமி,**
*ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 8/2024

## 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2024–ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் (திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 34/2002.

2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டத்தின், 2 ஆம் பிரிவில்,–

(1) (13) ஆம் கூறிற்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''(13) ''நிர்வாகி'' என்பது, 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி நியமிக்கப்பட்டுள்ள அலுவலர் என்று பொருள்படும்;'';

(2) (21) ஆம் கூறிற்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:––

''(21) ''மாநிலத் தலைமை நிர்வாகி'' என்பது, 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி நியமிக்கப்பட்டுள்ள அலுவலர் என்று பொருள்படும்;''.

''மாநில நெடுஞ்சாலைகள் அதிகார அமைப்பு'' ''நெடுஞ்சாலைகள் அதிகார அமைப்பு'' மற்றும் ''நெடுஞ்சாலைகள் அதிகார அமைப்புகள்'' என்னும் சொற்றொடர்களுக்கான மாற்றீடு

3. முதன்மைச் சட்டம் முழுமைக்கும், ''மாநில நெடுஞ்சாலைகள் அதிகார அமைப்பு'' ''நெடுஞ்சாலைகள் அதிகார அமைப்பு'' மற்றும் ''நெடுஞ்சாலைகள் அதிகார அமைப்புகள்'' என்னும் சொற்றொடர்களுக்காக, அவை காணப்படுகின்ற இடங்களிலெல்லாம், முறையே, ''மாநிலத் தலைமை நிர்வாகி'' ''நிர்வாகி'' மற்றும் ''நிர்வாகிகள்'' என்னும் சொற்றொடர்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை**

2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 34/2002) உள்ள, ''மாநில நெடுஞ்சாலைகள் அதிகார அமைப்பு'' மற்றும் ''நெடுஞ்சாலைகள் அதிகார அமைப்பு'' என்னும் பதவிப் பெயர்களை முறையே, ''மாநிலத் தலைமை நிர்வாகி'' மற்றும் ''நிர்வாகி'' என மாற்றம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. கூறப்பட்ட முடிவிற்கு செயல்விளைவை கொடுப்பதற்கு, கூறப்பட்ட தமிழ்நாடு சட்ட எண்.34/2002 ஐ தகுந்தவாறு திருத்தம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எ.வ. வேலு,**
*பொதுப்பணித் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2024 பிப்ரவரி 21.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

**2024–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 9/2024

**ஓர் ஆணையத்திடம் அதிகாரம் அளிக்கப்பெற்ற அல்லது ஒப்படைக்கப்பட்ட நெடுஞ்சாலைகளின் கட்டுமானம், மேம்பாடு, பராமரிப்பு மற்றும் மேலாண்மை ஆகியவற்றிற்காக அந்த ஆணையத்தை நிறுவுவதற்காகவும் மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்காகவும் வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஐந்தாம் ஆண்டில், தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

### அத்தியாயம் – I.
### முன்னுரை.

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது தமிழ்நாடு மாநிலம் முழுவதும் அளாவி நிற்கும்.

(3) இது மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தருவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,–

(a) ‘‘அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்’’ என்பது 26 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையத்தால் ஒரு நெடுஞ்சாலை ஒப்படைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்பு எதுவும் அல்லது பிற நிறுவனம் என்று பொருள்படும்;

(b) ‘‘ஆணையம்’’ என்பது 3 ஆம் பிரிவின்கீழ் நிறுவப்பெற்ற தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம் என்று பொருள்படும்;

(c) ‘‘தலைமையாளர்’’ என்பவர் ஆணையத்தின் தலைமையாளர் ஆவார்;

(d) ‘‘பணியாளர்’’ என்பவர் ஆணையத்தின் முழுநேர வழக்கமான பணியில் இருக்கும் நபர் ஆவார்;

(e) ‘‘நிதியம்’’ என்பது 15 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணைய நிதியம் என்று பொருள்படும்;

(f) ‘‘அரசு’’ என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(g) ‘‘நெடுஞ்சாலை’’ என்பது 9 ஆம் பிரிவின்கீழ் ஆணையத்திடம் அதிகாரம் அளிக்கப்பெற்ற, அல்லது ஒப்படைக்கப்பட்ட, நெடுஞ்சாலை எதுவும் அல்லது அதன் விரிவாக்கம் எதுவும் என்று பொருள்படும்;

(h) ‘‘அலுவலர்’’ என்பவர் ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணையத்தின் ஓர் அலுவலர் ஆவார்;

(i) ‘‘உறுப்பினர்’’ என்பவர் ஆணையத்தின் ஓர் உறுப்பினர் ஆவார், இதில் தலைவரும் உள்ளடங்குவார்;

(j) ‘‘வகுத்துரைக்கப்பட்டது’’ என்பது இந்தச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விதிகள் என்று பொருள்படும்;

(k) ''ஒழுங்குமுறை விதிகள்'' என்பது இந்தச் சட்டத்தின்கீழ் ஆணையத்தால் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை விதிகள் என்று பொருள்படும்;

(l) ''மாநிலம்'' என்பது தமிழ்நாடு மாநிலம் என்று பொருள்படும்;

(m) இதில் பயன்படுத்தப்பட்ட மற்றும் பொருள் வரையறை செய்யப்படாத, ஆனால் 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டத்தில் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ள சொற்கள் மற்றும் சொற்றொடர்கள், அந்தச் சட்டத்தில் முறையே குறித்தொதுக்கப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 34/2002.

## அத்தியாயம் – II.

## தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம்.

தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையத்தை நிறுவுதல்.

3. (1) அரசு, அறிவிக்கையின் வாயிலாக தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம் என்று அழைக்கப்படும் ஓர் ஆணையத்தை, இந்தச் சட்டத்தின்கீழ் அதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்துவதற்கும், அதற்கு குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளை புரிவதற்கும் நிறுவலாம்.

(2) ஆணையமானது, மேற்கூறப்பட்ட பெயரால், தொடர்ந்திருக்கும் வழியுரிமையையும், பொதுவான இலச்சினையையும் கொண்டிருக்கும் ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும். இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, ஆணையமானது அசையும் மற்றும் அசையாச் சொத்தினை கையகப்படுத்தவும், வைத்திருக்கவும், முடிவு செய்யவும் மற்றும் ஒப்பந்தம் செய்யவும் அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் கூறப்பட்ட பெயரால் வழக்கிட வேண்டும் அல்லது வழக்கிடப்படுதல் வேண்டும்.

(3) ஆணையமானது, ***தமிழ்நாடு அரசிதழில்*** அறிக்கையின் வாயிலாக, அரசால் நியமனம் செய்யப்படும்,——

(i) ஒரு தலைமையாளர்;

(ii) மூன்று முழுநேர உறுப்பினர்கள்; மற்றும்

(iii) மூன்று பகுதிநேர உறுப்பினர்கள்,

ஆகியோர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) தலைமையாளர் மற்றும் உறுப்பினர்கள், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய தகுதிகள் மற்றும் அனுபவம் ஆகியவற்றை பெற்றிருக்க வேண்டும்.

உறுப்பினர்களின் பதவிக்காலம் மற்றும் பணி நிபந்தனைகள்.

4. (1) உறுப்பினர்களின் பதவிக்காலம் மற்றும் பிற பணி நிபந்தனைகள் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் இருத்தல் வேண்டும்.

(2) நபர் எவரும் அறுபத்து இரண்டு வயதினை நிறைவெய்திய பிறகு உறுப்பினராக நியமனம் செய்யப்படுதல் கூடாது அல்லது அறுபத்தைந்து வயதினை நிறைவெய்திய பிறகு அத்தகைய திறனில் பணியாற்றுதல் கூடாது.

(3) அரசு, தன்விருப்புரிமையின் பேரில், எந்நேரத்திலும் மூன்று மாத அறிவிப்பு அல்லது அதற்குப் பதிலாக ஊதியம் மற்றும் படிகள் வழங்குவதன் மூலம் உறுப்பினர் எவரின் பதவிக்காலத்தையும் முடித்து வைக்கலாம்.

(4) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, ஓர் உறுப்பினராக இருப்பது அற்றுப்போன எந்தவொரு நபரும், ஓர் உறுப்பினராக மறுநியமனத்திற்கு தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

5. ஒரு நபர்,—— ஓர் உறுப்பினராக நியமனஞ்—செய்யப்படுவதற்கான தகுதிக் கேடுகள்.

(a) அரசின் கருத்தில், ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்கியதற்கான ஒரு குற்றத்திற்கு குற்றத்தீர்ப்பு அளிக்கப்பெற்று சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருப்பாராயின்;

(b) விடுவிப்புப் பெறாத நொடித்தநிலையராக இருப்பாராயின்;

(c) மனச்சீர்கேடு உடையவராகவும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் அவ்வாறு விளம்புகை செய்யப்பட்டிருப்பாராயின்;

(d) மைய அல்லது மாநில அரசு எதனின் அல்லது அத்தகைய அரசுக்கு சொந்தமான அல்லது அதனால் கட்டுப்படுத்தப்படும் ஒரு கழகம் அல்லது பொதுத்துறை நிறுவனத்திலிருந்து பணியறவு அல்லது பணிநீக்கம் செய்யப்பட்டிருப்பாராயின்; அல்லது

(e) அரசின் கருத்தின்படி, ஓர் உறுப்பினராக செயற்பணிகள் ஆற்றுவது குந்தகமாக பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவாறு, ஆணையத்தில் அத்தகைய நிதிசார் அல்லது பிற நலன் கொண்டிருப்பாராயின்,

அத்தகைய நபர், ஓர் உறுப்பினராக நியமனம் செய்யப்படுவதற்கு தகுதிக்கேடுடையவர் ஆவார்.

6. (1) ஆணையமானது, ஒழுங்குமுறை விதிகளில் குறித்துரைக்கப்படலாகிறவாறு, அத்தகைய நேரங்களிலும் இடங்களிலும் கூடுதல் வேண்டும் மற்றும் அதன் குறைவெண் உள்ளடங்கலாக, அதன் கூட்டங்களில் அதன் அலுவல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் அத்தகைய நெறிமுறை விதிகளைப் பின்பற்றுதலும் வேண்டும். ஆணையத்தின் கூட்டங்கள்.

(2) தலைமையாளர், ஏதேனும் காரணத்திற்காக, ஆணையத்தின் ஒரு கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாதிருப்பாராயின், கூட்டத்திற்கு வருகைபுரிந்துள்ள உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிற உறுப்பினர் எவரேனும் கூட்டத்திற்கு தலைமை வகித்தல் வேண்டும்.

(3) ஆணையத்தின் முடிவிற்காக அதன் கூட்டங்கள் எதனிலும் முன்வைக்கப்பட்ட அனைத்து பொருட்பாடுகளும், வருகைதந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் முடிவு செய்யப்படுதல் வேண்டும். வாக்குகள் சமமான எண்ணிக்கையில் இருக்கும் நேர்வில், தலைமையாளர் அல்லது அவரது வாராமையின் போது, கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் உறுப்பினர், இரண்டாவது அல்லது அறுதி செய்யும் வாக்கினைக் கொண்டிருத்தலும், செலுத்துதலும் வேண்டும்.

7. ஆணையத்தின் எந்தவொரு செயலும் அல்லது நடவடிக்கைகளும்,—— ஆணையத்திலுள்ள காலியிடம் எதுவும் நடவடிக்கைகளை செல்லத்—தகாததாக ஆக்குதல் கூடாது.

(a) ஆணையத்தின் கட்டமைப்பில் காலியிடம் எதனின் அல்லது குறைபாடு எதனின்;

(b) ஆணையத்தின் ஓர் உறுப்பினரின் நியமனத்தில் உள்ள குறைபாடு எதனின்;

(c) வழக்கின் தகுதிப்பாடுகளை பாதிக்காத வகையில், ஆணையத்தால் பின்பற்றப்படும் நெறிமுறையில் ஒழுங்கின்மை எதனின்,

காரணத்தினால் மட்டுமே ஆணையத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லத்தகாததாக ஆக்கப்படுதல் கூடாது.

8. (1) ஆணையம், அதன் செயற்பணிகளை ஆற்றும் நோக்கத்திற்காக, ஒழுங்குமுறை விதிகளில் குறித்துரைக்கப்படலாகிற அத்தகைய நெறிமுறைகள் மற்றும் வரையறைகளின் பேரில் அது தேவையெனக் கருதலாகிறவாறு அத்தகைய எண்ணிக்கையிலான அலுவலர்களையும், பிற பணியாளர்களையும் நியமனம் செய்யலாம். ஆணையத்தின் அலுவலர்கள், ஆலோசகர்கள் மற்றும் பிற பணியாளர்களின் நியமனம்.

(2) ஆணையம், ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்படலாகிற அத்தகைய நெறிமுறைகள் மற்றும் வரையறைகளின் பேரில் அது தேவையெனக் கருதலாகிறவாறு, அவ்வப்போது, எந்தவொரு நபரையும் ஆலோசகராக அல்லது அறிவுரையாளராக நியமனம் செய்யலாம்.

## அத்தியாயம் – III.

## சொத்து மற்றும் ஒப்பந்தங்கள்.

ஆணையத்திடம் எந்தவொரு நெடுஞ்சாலையையும் அதிகாரம் அளிக்க அல்லது ஒப்படைவு செய்வதற்கான அரசின் அதிகாரங்கள்.

9. அரசு, இந்தச் சட்டத்தின் அனைத்து அல்லது ஏதேனும் நோக்கங்களுக்காக, அவ்வப்போது, அறிவிக்கையின்வழி 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்படி அத்தகையவாறு விளம்புகை செய்யப்பட்ட எந்தவொரு நெடுஞ்சாலையையும் ஆணையத்திடம் அதிகாரம் அளிக்கலாம் அல்லது அதனிடம் ஒப்படைவு செய்யலாம். தமிழ்நாடு சட்டம் 34/2002.

அரசின் சொத்திருப்பு மற்றும் கடப்பாடுகளை ஆணையத்திற்கு உரிமை மாற்றம் செய்தல்.

10. (1) ஒரு நெடுஞ்சாலையைப் பொறுத்து, 9 ஆம் பிரிவின்கீழ் அறிவிக்கை வெளியிடப்பட்ட தேதியன்றும் அதுமுதலும்—

(a) அந்த நெடுஞ்சாலையின் நோக்கங்களுக்காக அல்லது அது தொடர்பாக அத்தகைய தேதிக்கு உடனடியாக முன்பு அரசால், அரசுடன் அல்லது அரசிற்கு நேர்ந்த அனைத்து கடன்கள், கடமைப் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள், மேற்கொள்ளப்பட்ட அனைத்து ஒப்பந்தங்கள் மற்றும் செய்வதற்காக ஈடுபட்ட அனைத்து பொருட்பாடுகள் மற்றும் செயல்களானது ஆணையத்தால், ஆணையத்துடன் அல்லது ஆணையத்திற்கு நேர்ந்ததாக, மேற்கொள்ளப்பட்டதாக அல்லது செய்யப்பட ஈடுபட்டதாக கருதப்படுதல் வேண்டும்;

(b) அத்தகைய தேதி வரை அந்த நெடுஞ்சாலைக்காக, அல்லது அதன் நோக்கங்கள் தொடர்பாகவும் மற்றும் அரசால் மூலதன செலவினமாக அறிவிக்கப்பட்டதுமான, அரசுக்கு நேர்ந்த அனைத்து தொடராத – செலவினங்களும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நெறிமுறைகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டு, ஆணையத்திற்கு அரசால் வழங்கப்பட்ட மூலதனமாக கருதப்படுதல் வேண்டும்;

(c) அத்தகைய தேதிக்கு உடனடியாக முன்பு அந்த நெடுஞ்சாலை தொடர்பாக அரசுக்கு நிலுவையாக உள்ள அனைத்து பணத்தொகைகளும் ஆணையத்திற்கு நிலுவையாக உள்ளதாக கருதப்படுதல் வேண்டும்;

(d) அத்தகைய தேதிக்கு உடனடியாக முன்பு அந்த நெடுஞ்சாலை தொடர்பான பொருட்பாடு எதற்காகவும் அரசால் அல்லது அதற்கெதிராக தொடுக்கப்பட்ட அல்லது தொடுக்கப்பட்டிருக்கக்கூடிய அனைத்து உரிமை வழக்குகளும் பிற சட்டமுறை நடவடிக்கைகளும் ஆணையத்தால் அல்லது அதற்கெதிராக தொடரப்படலாம் அல்லது தொடுக்கப்படலாம்.

(2) ஆணையத்திற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்ட அரசின் சொத்திருப்புகள், உரிமைகள் அல்லது கடப்பாடுகள் பொறுத்து ஏதேனும் பூசல் எழுமாயின், அத்தகைய பூசல் அரசால் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

ஆணையத்–திற்காக நிலத்தை கையகப்படுத்துதல்.

11. இந்தச் சட்டத்தின் படியான செயற்பணிகளை ஆற்றுவதற்கு ஆணையத்திற்கு தேவைப்படலாகும் எந்தவொரு நிலமும், 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கு தேவைப்படும் நிலமாக கருதப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய நிலமானது கூறப்பட்ட சட்டத்தின் வகைமுறைகளின்கீழ் ஆணையத்திற்காக கையகப்படுத்தப்படலாம். தமிழ்நாடு சட்டம் 34/2002

12. (1) (2) முதல் (4) ஆம் உட்பிரிவுகளுக்கு உட்பட்டு, ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்படலாகிற அத்தகைய படிவத்திலும் முறையிலும், இந்தச் சட்டத்தின் கீழான செயற்பணிகளை ஆற்றுவதற்கு தேவைப்படலாகும் எந்தவொரு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கும், புரிவதற்கும் ஆணையம் தகுதிறம் கொண்டிருத்தல் வேண்டும். ஆணையத்தால் செய்யப்படும் ஒப்பந்தங்கள்.

(2) ஆணையத்தால் இதன் பொருட்டு பொதுவாக அல்லது குறிப்பாக அதிகாரமளிக்கப்படலாகிறவாறு, ஆணையத்தின் தலைமையாளர் அல்லது அத்தகைய பிற உறுப்பினரால் அல்லது அத்தகைய அலுவலரால் ஆணையத்தின் சார்பாக ஒவ்வொரு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்படலாகிற அத்தகைய ஒப்பந்தங்கள் அல்லது ஒப்பந்தங்களின் வகைகள் ஆணையத்தின் பொது இலச்சினையால் இடப்படுதல் வேண்டும்.

(4) அரசு வகுத்துரைக்கலாகும் அத்தகைய மதிப்பு அல்லது தொகையை மிஞ்சும் எந்தவொரு ஒப்பந்தமும், அரசின் முன் ஒப்பளிப்பைப் பெற்ற பின்னரே செய்யப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் — IV.

## ஆணையத்தின் செயற்பணிகள்.

13. (1) இந்தச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு, 9 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறு, ஆணையமானது, ஒரு நெடுஞ்சாலையை நேர்விற்கேற்ப, கட்டுமானம், மேம்பாடு, பராமரிப்பு அல்லது மேலாண்மை போன்றவற்றை செய்தல் வேண்டும். ஆணையத்தின் செயற்பணிகள்.

(2) (1) ஆம் உட்பிரிவின் பொதுப்பங்கிற்கு குந்தகமின்றி, ஆணையமானது,——

(a) அதன் நோக்கங்களை எய்துவதற்காக மற்றவற்றிற்கிடையில்,——

(i) நெடுஞ்சாலையை பராமரிப்பதற்கும் தரம் உயர்த்துவதற்கும் உடனடியாக மற்றும் நீண்டகால திட்டங்களை தயாரிக்கலாம்;

(ii) பராமரிப்புச் செயல்பாடுகளை முறைப்படுத்துவதற்கு ஓர் அறவியல்சார் தள மேலாண்மை முறையை உருவாக்கலாம்;

(iii) நெடுஞ்சாலையின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்திற்கு தரநிலைகளை வகுக்கலாம்;

(iv) சாலைத் துறைக்கு பன்னாட்டு நிதியளிப்பு உள்ளடங்கலாக தனியார் மற்றும் நிறுவனம் சார்ந்த நிதியை கொண்டு வருதற்கு மாதிரிகளை உருவாக்கலாம்;

(v) தரமான தனியார் ஒப்பந்ததாரர்களால் நெடுஞ்சாலைகளின் பராமரிப்பிற்கு செயல்திறன் சார்ந்த பராமரிப்பு முறைகளுக்கு வழிமுறைகளை உருவாக்கலாம்;

(vi) நெடுஞ்சாலைகளின் பராமரிப்பு மற்றும் தரம் உயர்த்துதலை மேற்கொள்வதற்கு நிறுவனம் சார்ந்த வளங்களை திரட்டலாம்;

(vii) தனியார் கூட்டாண்மையையும் இந்த நோக்கங்களுக்கான வளங்களையும் ஊக்குவிப்பதன் மூலம் நெடுஞ்சாலையை பராமரித்து தரம் உயர்த்தலாம்;

(b) எந்தவொரு நெடுஞ்சாலையையும் அல்லது அதனை ஒட்டியவாறான நிலங்களையும் அளவீடு செய்யலாம்;

(c) அலுவலகங்கள், தொழிற்கூடங்கள், சாலையோர வசதிகள், நகரியங்கள், சரக்குப் போக்குவரத்து பூங்காக்கள் அல்லது பண்டகச் சாலைகளை கட்டுமானம் செய்யலாம் மற்றும் உணவகங்கள், பெருவழி சாலையோர உணவகங்கள், சிற்றுண்டிச் சாலைகள் முதலானவைகளை எந்தவொரு நெடுஞ்சாலையிலோ அல்லது அதன் அருகிலோ மற்றும் அரசின் முன் ஒப்புதலுடன் 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் அவ்வாறு விளம்புகை செய்யப்பட்ட பிற ஏதேனும் நெடுஞ்சாலையிலோ அல்லது அதன் அருகிலோ நிறுவலாம் மற்றும் பராமரிக்கலாம். தமிழ்நாடு சட்டம் 34/2002.

(d) அதன் பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டடங்கள், மற்றும் நகரியங்களை கட்டுமானம் செய்யலாம்;

(e) எந்தவொரு நெடுஞ்சாலையிலும் அதனின் முறையான மேலாண்மைக்காக ஊர்திகளை இயக்குவதை ஒழுங்குபடுத்தலாம் மற்றும் கட்டுப்படுத்தலாம்;

(f) இந்தியாவிலும் வெளிநாட்டிலும் ஆலோசனை மற்றும் கட்டுமான சேவைகளை உருவாக்கலாம் மற்றும் வழங்கலாம்;

(g) நெடுஞ்சாலைகள் அல்லது அதன் வசதிகள் எதனின் கட்டுமானம், பராமரிப்பு, மேம்பாடு மற்றும் மேலாண்மை தொடர்பாக ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்;

(h) ஆணையத்தின் கருத்தில் உள்ளவாறு, அத்தகைய நெடுஞ்சாலையில் போக்குவரத்து சீராக நடைபெறுவதற்குத் தேவையான வசதிகள் மற்றும் வாய்ப்பு நலங்களை நெடுஞ்சாலையை பயன்படுத்துபவர்களுக்கு வழங்கலாம்;

(i) அரசுக்கு சொந்தமான அல்லது அரசால் கட்டுப்படுத்தப்படும் எந்தவொரு கூட்டுருமக் குழுமத்திடம் அதன் எந்தவொரு செயற்பணிகளிலும் ஈடுபடுத்தலாம் அல்லது ஒப்படைவு செய்யலாம்;

(j) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வீதத்தில் ஒரு நெடுஞ்சாலையின் பயன்பாடு தொடர்புடையதான செய்யப்பட்ட சேவைகள் அல்லது வழங்கப்பட்ட நலன்களுக்கு வகுத்துரைக்கப்படலாகும் சுங்கவரி, மேம்பாட்டு கட்டணங்கள் மற்றும் பயன்பாட்டாளர் கட்டணங்கள் அல்லது பிற கட்டணங்கள் எதனையும் வசூலிக்கலாம்;

(k) 2013 ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின்கீழ் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிறுமங்களை உருவாக்கலாம்; மற்றும் மையச் சட்டம் 18/2013.

(l) இந்தச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட எந்தவொரு அதிகாரத்தைச் செலுத்துவதற்கும் அல்லது எந்தவொரு செயற்பணியை ஆற்றுவதற்கும் தேவைப்படலாகும் அல்லது ஏற்றதான அல்லது இடைநிகழ்வான அத்தகைய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கலாம்.

(3) இந்தச் சட்டத்தில் உள்ளடங்கியுள்ள எதுவும்—

(a) தற்போது நடைமுறையில் உள்ள எந்தவொரு சட்டத்தையும் ஆணையத்தால் புறக்கணிக்கப்பதை அங்கீகரிப்பதாகவோ; அல்லது

(b) ஆணையம் அல்லது அதன் அலுவலர்கள் அல்லது பிற பணியாளர்கள் இந்தச் சட்டத்தின்கீழ் பிறவாறு உட்பட்டிராத ஒரு கடமை அல்லது கடப்பாடு பொறுத்து நடவடிக்கை எதுவும் தொடர்வதற்கு நபர் எவருக்கும் அதிகாரம் அளிப்பதாகவோ,

பொருள் கொள்ளப்படுதல் கூடாது.

## அத்தியாயம் – V.

## நிதி, கணக்குகள் மற்றும் தணிக்கை.

14. சட்டத்தால், மாநில சட்டமன்றப் பேரவையின் மூலம் உரிய நிதி ஒதுக்கீட்டிற்குப் பின்பு அரசு இதன் பொருட்டு,–– ஆணையத்திற்கு அரசால் வழங்கப்படும் கூடுதல் மூலதனம் மற்றும் மானியங்கள்.

(a) அரசு தீர்மானிக்கலாகிற அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் இந்தச் சட்டத்தின்கீழ் அதன் செயற்பணிகளை ஆற்றுவதற்காக அல்லது அதனுடன் தொடர்புடைய நோக்கத்திற்காக ஆணையத்தால் வேண்டுறுத்தப்படலாகிறவாறு எந்தவொரு மூலதனத்தையும் வழங்கலாம்; மற்றும்

(b) இந்தச் சட்டத்தின்கீழ் அதன் செயற்பணிகளை திறம்பட நிறைவேற்றுவதற்காக, அரசு, தேவையெனக் கருதலாகும் அத்தகைய பணத்தொகைகளை கடன்கள் அல்லது மானியங்களின் வாயிலாக அரசு தீர்மானிக்கலாகிறவாறான அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் ஆணையத்திற்குச் செலுத்தலாம்;

15. (1) தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணைய நிதியம் என்று அழைக்கப்படும் ஒரு நிதியம் அமைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அதில்,–– ஆணையத்தின் நிதியம்.

(a) ஆணையத்தால் பெறப்படும் எந்தவொரு மானியம் அல்லது கொடையும்;

(b) ஆணையத்தால் பெறப்பட்ட எந்தவொரு கடன் அல்லது அதனால் செய்யப்பட்ட கடன் பெறுதல்களும்;

(c) ஆணையத்தால் வசூலிக்கப்பட்ட சுங்கவரி, மேம்பாட்டுக் கட்டணங்கள், பயன்பாட்டாளர் கட்டணங்கள் மற்றும் ஏதேனும் பிற கட்டணங்களும்;

(d) ஆணையத்தால் பெறப்படும் ஏதேனும் பிற கட்டணங்களும்;

வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) அந்த நிதியம்,––

(a) எந்த நோக்கங்களுக்காக அத்தகைய மானியங்கள், கடன்கள் அல்லது கடன் பெறுதல்கள் பெறப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக மற்றும் அதனோடு தொடர்புடைய அல்லது அதனுடன் இடைவிளைவான பொருட்பாடுகளை கவனத்தில் கொண்டும் அதன் செயற்பணிகளை ஆற்றுகையில் ஆணையத்திற்கு ஏற்பட்ட செலவினங்களையும்;

(b) ஆணையத்தின் உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம், படித்தொகைகள் மற்றும் மதிப்பூதியத்தின் செலுத்தத்தையும்;

(c) ஆணையத்தால் ஈடுபடுத்தப்பட்ட ஆலோசகர்களுக்கும், அறிவுரையாளர்களுக்கும் செய்யப்பட வேண்டிய செலுத்தங்களையும்; மற்றும்

(d) இந்தச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படும் குறிக்கோள்கள் மீதும் மற்றும் நோக்கங்களின் செலவினங்களையும்,

எதிர்கொள்வதற்கு பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

16. ஆணையமானது, ஆணையத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட வரவுகள் மற்றும் செலவினங்கள் கொண்ட, அதன் வரவு செலவுத் திட்டத்தை வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்திலும் அத்தகைய நேரத்திலும் ஒவ்வொரு நிதியாண்டிற்கும் தயார் செய்தலும் அதனை அரசுக்கு அனுப்புதலும் வேண்டும். வரவு செலவுத் திட்டம்.

நிதியங்களின் முதலீடு.

17. ஆணையம், ஏதேனும் இருப்பு நிதி உள்ளடங்கலான அதன் நிதிகளை அரசுப் பத்திரங்களில் அல்லது வகுத்துரைக்கப்படலாகிற அத்தகைய பிற முறையில் முதலீடு செய்யலாம்.

ஆணையத்தின் கடன் பெறுதலுக்கான அதிகாரம்.

18. (1) ஆணையம், அரசின் இசைவுடன் அல்லது அதற்கு அரசால் அளிக்கப்பட்டுள்ள ஏதேனும் பொது அல்லது சிறப்பு அதிகாரத்தின் வரையறைகளுக்கு இணங்க, இந்தச் சட்டத்தின் படியான அதன் அனைத்து அல்லது ஏதேனும் செயற்பணிகளை ஆற்றுவதற்கு அது தேவையெனக் கருதலாகிறவாறு, பத்திரங்கள், கடனீட்டுப் பத்திரங்கள் அல்லது அத்தகைய பிற முறையாவணங்கள் வழங்குவதன் மூலம் எந்தவொரு நிதி ஆதாரத்திலிருந்தும் பணம் கடன் பெறலாம்.

(2) ஆணையம், இந்தச் சட்டத்தின் கீழ் அதன் அனைத்து அல்லது ஏதேனும் செயற்பணிகளை ஆற்றுவதற்கு அரசு வகுத்துரைக்கலாகும் அத்தகைய வரம்புகளுக்கு உட்பட்டு, அதற்கு தேவைப்படலாகும் அத்தகைய தொகைகளை மிகைப்பற்றின் மூலம் அல்லது பிறவாறாக தற்காலிகமாக கடன் பெறலாம்.

(3) (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணையத்தால் செய்யப்பட்ட கடன் பெறுதல்களைப் பொறுத்து, அசல் தொகையின் திரும்பச் செலுத்தம் மற்றும் அதன் வட்டி செலுத்தத்திற்கு, அரசு, அது தக்கதெனக் கருதும் அத்தகைய முறையில், பொறுப்புறுதி அளிக்கலாம்.

ஆண்டறிக்கை.

19. ஆணையமானது, ஒவ்வொரு நிதியாண்டின் போதும், அதன் நடவடிக்கைகளின் முழு கணக்கு விபரம் அடங்கிய அதன் ஆண்டறிக்கையை வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்திலும் அத்தகைய காலத்திலும் தயார் செய்தல் வேண்டும் மற்றும் அதன் படியொன்று அரசிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

கணக்குகள் மற்றும் தணிக்கை.

20. ஆணையத்தின் கணக்குகளானது, மாநிலத் கணக்காய்வுத் தலைவருடன் கலந்தாலோசித்து தணிக்கை செய்யப்பட்டு பேணிவரப்படுதல் வேண்டும் மற்றும் தணிக்கையாளரின் அறிக்கையுடன் சேர்த்து தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் படியானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும் அத்தகைய தேதிக்கு முன்பும் அரசிடம் அளிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் — VI.

### பல்வகை

அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்.

21. ஆணையமானது, 30 ஆம் பிரிவின்கீழ் ஒழுங்குமுறை விதிகளைச் செய்வதற்கான அதன் அதிகாரங்களைத் தவிர, அது தேவையெனக் கருதலாகும் இந்தச் சட்டத்தின்படியான அதன் அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள் எதனையும், அந்த ஆணையில் குறித்துரைக்கப்படலாகும் நிபந்தனைகளுக்கும் வரம்புகளுக்கும் உட்பட்டு, ஆணையத்தின் தலைவருக்கு அல்லது பிற உறுப்பினர் எவருக்கும் அல்லது அலுவலர் எவருக்கும் எழுத்துருவிலான பொதுவான அல்லது சிறப்பு ஆணையின் மூலமாக ஒப்படைவு செய்யலாம்.

ஆணையத்தின் ஆணைகள் மற்றும் பிற முறையா வணங்களை சான்றளித்தல்.

22. ஆணையத்தின் ஆணைகள், முடிவுகள் மற்றும் பிற முறையாவணங்கள் அனைத்தும், தலைமையாளரின் அல்லது பிற உறுப்பினர் எவரின் அல்லது இதன்பொருட்டு ஆணையத்தால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அலுவலர் எவரின் கையொப்பம் மூலமாக சான்றளிக்கப்படுதல் வேண்டும்.

ஆணையத்தின் உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பொது ஊழியர்களாக இருத்தல்.

23. இந்தச் சட்டத்தின்படி, செயல்படுகின்ற அல்லது செயல்படுவதாகப் புலப்படுகின்ற ஆணையத்தின் உறுப்பினர், அலுவலர் மற்றும் பணியாளர் ஒவ்வொருவரும், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பொருளின்படி ஒரு பொது ஊழியராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

மையச் சட்டம் XLV/1860.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

24. இந்தச் சட்டம், விதிகள் அல்லது ஒழுங்குமுறை விதிகளின் கீழ் அலுவலக செயற்பணிகளை ஆற்றுகையில் அல்லது அதிகாரங்களைச் செலுத்துகையில், நல்லெண்ணத்தில் அவர்களால் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட செயல் எதையும் பொறுத்து, ஆணையத்தின் உறுப்பினர்கள், அலுவலர்கள் அல்லது பணியாளர்கள் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

குறித்த சில பணிகளை மேற்கொள்வதற்கு ஆணையத்திற்கான அதிகாரம்.

25. ஆணையமானது, ஆணையம் மற்றும் அரசு மற்றும் அத்தகைய குழுமத்தின் இடையே ஒப்புக்கொள்ளப்படலாகும் அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் அரசாலோ அல்லது பிற குழுமம் எதனாலுமோ வேண்டப்படலாகும் பிற பணி அல்லது சேவைகள் எதனின் அல்லது பிற பணிகள் அல்லது சேவைகளின் வகை எவற்றின் நிறைவேற்றத்தையும் மேற்கொள்ளலாம்.

நெடுஞ்சாலை எதனின் ஆணையத்தை தற்காலிகமாக நீக்குவதற்கு அரசிற்கான அதிகாரம்.

26. (1) அரசு, எந்நேரத்திலும், பொது நலனுக்காக அவ்வாறு செய்வது தேவையென அல்லது உகந்ததெனக் கருதுமாயின், எழுத்துருவில் ஆணை வாயிலாக, நெடுஞ்சாலை எதனின் கட்டுமானத்தை, மேம்பாட்டை, பராமரிப்பை மற்றும் மேலாண்மையை அந்த ஆணையில் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய தேதியிலிருந்தும் அத்தகைய காலஅளவிற்கும் உள்ளாட்சி அமைப்பு எதனிடமும் அல்லது அரசுக்கு சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டில் உள்ள பிற நிறுவனம் எதனிடமும் ஒப்படைக்குமாறு ஆணையத்தைப் பணிக்கலாம், மற்றும் ஆணையமானது, அத்தகைய பணிப்புரைக்கு இணங்கி நடக்க கட்டுப்பட்டதாகும்.

(2) நெடுஞ்சாலை எதனின் கட்டுமானத்தை, மேம்பாட்டை, பராமரிப்பை மற்றும் மேலாண்மையை (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனத்திடம் ஆணையத்தால் ஒப்படைக்கப்பட்டிருக்கையில், ஆணையமானது, அத்தகைய நெடுஞ்சாலையைப் பொறுத்து இந்தச் சட்டத்தின்படியான அதன் அனைத்து அதிகாரங்களையும் செயற்பணிகளையும் செலுத்துவதும் ஆற்றுவதும் அற்றுப்போதல் வேண்டும் மற்றும் அரசினால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு இணங்க அத்தகைய அதிகாரங்களும் செயற்பணிகளும், அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனத்தால் செலுத்தப்படுதலும் ஆற்றப்படுதலும் வேண்டும்:

வரம்புரையாக, அரசு, பொதுவான அல்லது சிறப்பு ஆணையின் வாயிலாக, அந்த ஆணையில் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகளை, அரசின் முன்ஒப்புதல் பெற்ற பின்பு மட்டுமே, அதிகாரம் அளிக்கப்பட்ட நிறுவனத்தால் செலுத்தப்படுதலோ ஆற்றப்படுதலோ வேண்டும்.

(3) அரசானது, எழுத்துருவில் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள காலஅளவை அது தேவையெனக் கருதுகிறவாறு குறைக்கலாம் அல்லது நீட்டிக்கலாம்.

(4) (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணை ஒன்று செயற்பாட்டில் இருக்கின்றபோது, அரசானது, நெடுஞ்சாலையின் கட்டுமானம், மேம்பாடு, பராமரிப்பு மற்றும் மேலாண்மைக்காக நிதியத்திலிருந்து அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனத்திற்கு பணத்தொகை எதனையும் மாற்றியளித்தல் உள்ளடங்கலாக, ஒரு நெடுஞ்சாலையைப் பொறுத்து இந்தச் சட்டத்தின்கீழ் ஆணையத்தின் அதிகாரங்களைச் செலுத்துவதற்கும், செயற்பணிகளை ஆற்றுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனத்தை இயல்விக்கத் தேவைப்படலாகும் அத்தகைய பணிப்புரைகளை ஆணையத்திற்கு அவ்வப்போது வழங்கலாம் மற்றும் அத்தகைய பணிப்புரை ஒவ்வொன்றையும் ஆணையமானது இணங்கி நடத்தல் வேண்டும்.

(5) நெடுஞ்சாலை எதனையும் பொறுத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஓர் ஆணை அற்றுப்போவதன் பேரில்,——

(a) அத்தகைய நெடுஞ்சாலை பொறுத்து, அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனமானது, இந்தச் சட்டத்தின்படியான ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகளை செலுத்துவதும் ஆற்றுவதும் அற்றுப்போதல் வேண்டும்;

(b) அத்தகைய நெடுஞ்சாலை தொடர்பாக அதனிடம் வழங்கப்பட்ட பாதுகாக்கும் பொறுப்பைக் கொண்டிருக்கும் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனமானது, பணத்தொகை எதனையும் அல்லது பிற சொத்திருப்புகள் உள்ளடங்கலான சொத்து எதனையும் ஆணையத்திடம் ஒப்படைத்துவிடுதல் வேண்டும்; மற்றும்

(c) அத்தகைய நெடுஞ்சாலை பொறுத்து, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுடன் இணங்கியவாறு, ஆணையமானது அத்தகைய அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகளை தொடர்ந்து செலுத்துதலும் ஆற்றுதலும் வேண்டும்.

ஆணையத்தை கலைத்துக் கைக்கொள்ள அரசிற்கான அதிகாரம்.

27. (1) அரசானது, எந்நேரத்திலும்,——

(a) இந்தச் சட்டத்தினாலோ அதன் வழியாலோ, ஆணையமானது அதன் மீது விதிக்கப்பட்ட செயற்பணிகள் மற்றும் கடமைகளை ஆற்றுவதற்கு கடுமையான நெருக்கடி நிலையின் காரணத்தால் இயலாதிருக்கிறது என்று கருதுமாயின்;

(b) இந்தச் சட்டத்தின்கீழ் அரசால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் எதற்கும் இணங்கி நடக்கவோ அல்லது இந்தச் சட்டத்தினாலோ அல்லது வழியாலோ விதிக்கப்பட்ட செயற்பணிகள் மற்றும் கடமைகளை ஆற்றுவதிலோ ஆணையம் தொடர்ந்து தவறுகை புரிந்துள்ளது எனக் கருதுமாயின்; அல்லது

(c) பொது நலனுக்காக அவ்வாறு செய்வது தேவையானதென சூழ்நிலை நிலவுவதாகக் கருதுமாயின், அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, அவ்வறிவிக்கையில் குறித்துரைக்கப்படலாகிறவாறு, ஓர் ஆண்டிற்கு மிகாமல், அத்தகைய காலஅளவிற்கு ஆணையத்தை கலைத்துக் கைக்கொள்ளலாம் மற்றும் அத்தகைய காலஅளவு முடிவுறுவதன் பேரில், அரசானது, ஓர் ஆண்டிற்கு மிகாத மற்றொரு காலஅளவிற்கு, கலைத்துக் கைக்கொள்ளும் காலஅளவை நீட்டிக்கலாம்:

வரம்புரையாக, (b) கூறில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக, இந்த உட்பிரிவின்கீழ் ஓர் அறிவிக்கையை வழங்குவதற்கு முன்பு, அரசானது, ஆணையத்தை ஏன் கலைத்துக் கைக்கொள்ளக் கூடாது என்பதற்கான காரணத்தை காட்டுமாறு தகுமான வாய்ப்பு ஒன்றினை வழங்குதல் வேண்டும் மற்றும் ஆணையத்தின் விளக்கங்கள் மற்றும் ஆட்சேபனைகள் எவையேனுமிருப்பின், அவற்றை பரிசீலனை செய்தல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையத்தை கலைத்துக் கைக்கொள்ளும் ஓர் அறிவிக்கையை வெளியிடுவதன் பேரில்,——

(a) கலைத்துக் கைக்கொள்ளப்படும் தேதியிலிருந்து அனைத்து உறுப்பினர்களும் அத்தகைய பதவி வகித்தலானது அற்றுபோதல் வேண்டும்;

(b) இந்தச் சட்டத்தின்கீழ் ஆணையத்தால் செலுத்தப்படக்கூடிய அல்லது ஆற்றப்படக்கூடிய அதிகாரங்கள், செயற்பணிகள் மற்றும் கடமைகளானது, அரசு பணிக்கலாகும் அத்தகைய நபர் அல்லது நபர்களால் செலுத்தப்படுதல் அல்லது ஆற்றப்படுதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்கீழ் ஆணையத்தால் செலுத்தப்படக்கூடிய அல்லது ஆற்றப்படக்கூடிய அதிகாரங்கள், செயற்பணிகள் மற்றும் கடமைகளானது, அரசு பணிக்கலாகும் அத்தகைய நபர் அல்லது நபர்களால் செலுத்தப்படுதல் அல்லது ஆற்றப்படுதல் வேண்டும்.

(c) ஆணையத்திற்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டில் உள்ள சொத்தானது, (3) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணையம் மறுஅமைப்பாக்கம் செய்யப்படும் வரை, அரசிடம் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(3) (1) ஆம் உட்பிரிவின் கீழ் கலைத்துக் கைக்கொள்ளப்படும் காலஅளவு அல்லது நீட்டிக்கப்பட்ட காலஅளவு முடிவுறும் தேதியன்றோ அதற்கு முன்னரோ அரசு, ஆணையத்தை மறுஅமைப்பாக்கம் செய்யலாம். (2) ஆம் உட்பிரிவின் (a) கூறின் கீழ் தமது பதவியைவிட்டகன்ற நபர் எவரும், உறுப்பினர்களாக மறுஅமர்த்தம் செய்யப்பட தகுதியுடையவர் ஆதலும் வேண்டும்.

(4) அரசானது, இந்தப் பிரிவின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனின் மற்றும் அத்தகைய நடவடிக்கைக்கு காரணமமான சூழ்நிலைகளின் விரிவான அறிக்கையுடன் (1) அல்லது (3) ஆம் உட்பிரிவுகளின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கையை, கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்படுதல் வேண்டும்.

பணிப்புரைகள் வழங்க அரசுக்கு உள்ள அதிகாரம்.

28. அரசானது, அவ்வப்பொழுது இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத கொள்கை முடிவுகளின் மீது ஆணையத்திற்கு தான் தக்கதெனக் கருதுகிற பணிப்புரைகளை வழங்கலாம் மற்றும் அத்தகைய பணிப்புரைகளுக்கு ஆணையமானது செயல்வடிவம் கொடுக்க வேண்டும்.

விதிகளைச் செய்வதற்கு அரசின் அதிகாரம்.

29. (1) அரசானது, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது எதனையும் நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும், முன் சென்ற அதிகாரத்தின் பொதுப்பங்கிற்கு குந்தகமின்றியும் அத்தகைய விதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்குமோ அல்லது அவற்றில் எவற்றிற்குமோ வகை செய்யலாம், அவையாவன:—

(a) இந்தச் சட்டத்தின்படி வெளிப்படையாக வேண்டுறுத்தப்படும் அல்லது அனுமதிக்கப்படும் அனைத்து பொருட்பாடுகளும் விதிகளில் வகுத்துரைக்கப்படுதல்;

(b) உறுப்பினர்களின் பணி நிபந்தனைகள்;

(c) தலைமையாளர் மற்றும் உறுப்பினர்களின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்;

(d) எந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நெடுஞ்சாலை எதனின் நோக்கங்களுடன் தொடர்பாக அல்லது அரசினால் அல்லது அரசிற்கு ஏற்பட்ட தொடரா செலவினமானது, 10—ஆம் பிரிவின் (1)—ஆம் உட்பிரிவின் (b) கூறின்படி மூலதன செலவினமாக கருதப்படுதல் வேண்டுமோ அந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகள்;

(e) ஆணையமானது, எந்தப் படிவத்தில் மற்றும் எந்த நேரத்தில் 16—ஆம் பிரிவின் கீழ் வரவு செலவுத் திட்டத்தையும், 19—ஆம் பிரிவின் கீழ் ஆண்டறிக்கையும் தயாரித்தல் வேண்டுமோ அந்தப் படிவம் மற்றும் நேரம்;

(f) 17—ஆம் பிரிவின் கீழ் ஆணையம் அதன் நிதிகளை முதலீடு செய்யும் முறை;

(g) ஆணையத்தின் கணக்குகளானது, பராமரிக்கப்படும் மற்றும் தணிக்கை செய்யப்படும் முறை மற்றும் 20–ஆம் பிரிவின் கீழ் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் படி மற்றும் தணிக்கையாளரின் அறிக்கையுடன் எந்தத் தேதிக்கு முன்னர் அரசிடம் அளிக்கப்பட வேண்டுமோ அந்த தேதி.

(3) இந்தச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது வழங்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின் கீழ், செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது அறிவிக்கை ஒவ்வொன்றும் அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர் கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு அத்தகைய விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கை ஏதொன்றிலும் மாறுதல் எதையும் சட்டமன்றப் பேரவை செய்யுமாயின் அந்த விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கையானது அதன் பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும் அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் எதுவும் அந்த விதி அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட செயல் எதனின் செல்லுந்தன்மைக்கு குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

ஒழுங்குமுறை விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

30. (1) ஆணையமானது, அறிவிக்கையின் மூலம் அரசின் முன் ஒப்புதலுடன் இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளுக்கு முரணாக இல்லாத ஒழுங்குமுறைவிதிகளை செய்யலாம்.

(2) குறிப்பாக, மேற்கூறிய அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்கு குந்தகமின்றி,––

(a) ஆணையத்தின் கூட்டங்களின் நேரம் மற்றும் இடம் மற்றும் அத்தகைய கூட்டங்களின் அலுவல் நடவடிக்கைக்காக பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறை;

(b) ஆணையத்தின் அலுவலர்கள், ஆலோசகர்கள், அறிவுரையாளர்கள் மற்றும் பிற பணியாளர்களின் பணி வரையறைகளும் நிபந்தனைகளும், ஆளெடுத்தல் முறை மற்றும் மதிப்பூதியம்;

(c) ஆணையத்தால் செய்யப்படும் ஓர் ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தங்களின் வகையின் படிவம் மற்றும் முறை;

(d) ஆணையத்தின் பொது முத்திரை ஒட்டப்பட வேண்டிய ஒப்பந்தங்கள் அல்லது ஒப்பந்தங்களின் வகைகள்;

(e) நெடுஞ்சாலைகள் மீதான இடையூறுகளை தடுக்கும் முறையானது அதன் சாதாரண செயல்பாட்டிற்காக தடைசெய்யப்படுதல் வேண்டும்;

(f) ஆணையத்தால் குறித்துரைக்கப்பட்ட இடங்களைத் தவிர நெடுஞ்சாலையில் ஊர்தி அல்லது சரக்கூர்தி எதனையும் நிறுத்துவதை அல்லது காத்திருக்கச் செய்வதை தடை செய்யும் முறை;

(g) நெடுஞ்சாலையின் பகுதி எதனையும் அணுகுவதை தடைசெய்யும் அல்லது கட்டுப்படுத்தும் முறை;

(h) நெடுஞ்சாலையின் மீதும் மற்றும் அதனைச் சுற்றியும் விளம்பரங்களை ஒழுங்குபடுத்தும் அல்லது கட்டுப்படுத்தும் முறை;

(i) பொதுவாக நெடுஞ்சாலையின் திறம்பட மற்றும் முறையான பராமரிப்பு மற்றும் மேலாண்மை செய்வதற்காகவும்.

போன்ற அனைத்து அல்லது ஏதேனும் பொருட்கூறுகளுக்கு ஒழுங்குமுறை விதிகளைச் செய்யலாம்.

இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

31. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்பாடு ஏதேனும் எழுமானால், அரசு தமிழ்நாடு அரசிதழில் ஓர் ஆணை வெளியிடுவதன் வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாமல் அந்த இடர்பாட்டை நீக்குவதற்குத் தேவையான அல்லது உகந்ததாக அதற்குத் தோன்றுகின்ற, அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

வரம்புரையாக, இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டாண்டு காலஅளவு முடிவடைந்த பின்னர், அத்தகைய அறிவிக்கை எதுவும் வெளியிடப்படுதல் கூடாது.

## அத்தியாயம் – VII.

## ஆணையத்திடம் ஒப்படைவு செய்யப்பட்ட ஒரு நெடுஞ்சாலைக்கு 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டத்தின் பொருந்துகை.

குறித்த சில மாற்றமை–வுகளுக்கு உட்பட்டு ஆணையத்திற்கு தமிழ்நாடு சட்டம் 34/2002–இன் பொருந்துகை.

32. 2001–ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டத்தின் 8 முதல் 14, 26 முதல் 55, 57 முதல் 61, 63 முதல் 65 மற்றும் 70 ஆம் பிரிவுகள், பின்வரும் மாற்றமைவுகளுக்கு உட்பட்டு ஆணையத்திடம் அதிகாரம் அளிக்கப்பட்ட ஒப்படைவு செய்யப்பட்ட ஒரு நெடுஞ்சாலைக்கு "உரிய மாற்றங்களுடன்" பொருந்துதல் வேண்டும், அவையாவன:––

(1) 8 ஆம் பிரிவில்,––

(a) (1) ஆம் உட்பிரிவில், "கோட்டம் ஏதொன்றின் நிர்வாகி, அறிவிக்கையின் மூலம், அந்தக் கோட்டத்தில் உள்ள நெடுஞ்சாலை எதன் தொடர்பாகவோ அல்லது பரப்பிடம் எதன் தொடர்பாகவோ" எனும் சொற்றொடருக்காக, "ஆணையம் அறிவிக்கையின் மூலம், நெடுஞ்சாலை எதன் தொடர்பாகவும்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) (2) ஆம் உட்பிரிவில், "நிர்வாகி" எனும் சொற்றொடருக்காக, "ஆணையம்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(c) (3) ஆம் உட்பிரிவில், "நிர்வாகி, மாநில தலைமை நிர்வாகியின் ஒப்புதல் பெற்று" எனும் சொற்றொடருக்காக, "ஆணையம்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(d) (4) ஆம் உட்பிரிவில், "மாநில தலைமை நிர்வாகி" எனும் சொற்றொடருக்காக, "ஆணையம்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) 9, 11, 12, 14, 26, 27, 28, 30 முதல் 32, 34, 35, 37, 39, 44 முதல் 46, 53, 54 மற்றும் 59 முதல் 61 ஆம் பிரிவுகளில் "மாநில தலைமை நிர்வாகி" மற்றும் "நிர்வாகி" எனும் சொற்றொடர்களுக்காக, அவை காணப்படுகின்ற இடங்களில் "ஆணையம்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(3) 13 ஆம் பிரிவில்,——

(a) (1) ஆம் உட்பிரிவில், ''ஒவ்வொரு கோட்டத்தின் நிர்வாகி'' மற்றும் ''அந்தக் கோட்டத்தின்'' எனும் சொற்றொடர்களுக்காக, முறையே ''ஆணையம்'' மற்றும் ''அந்தப் பரப்பிடம்'' எனும் சொற்றொடர்களானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) (2) ஆம் உட்பிரிவில் ''நிர்வாகி'' எனும் சொற்றொடருக்காக, ''ஆணையம்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(c) (3) ஆம் உட்பிரிவில்,——

(i) ''மாநில தலைமை நிர்வாகியிடம் ஒப்புதல் பெற்ற பின்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(ii) (a) கூறில், ''நிர்வாகி'' எனும் சொற்றொடருக்காக, ''ஆணையம்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) 33, 41 மற்றும் 43 ஆம் பிரிவுகளில் ''நிர்வாகி'' மற்றும் ''மாநில தலைமை நிர்வாகி'' எனும் சொற்றொடர்களானது, அவை காணப்படும் இடங்களில் முறையே ''ஆணையம்'' மற்றும் ''அரசு'' எனும் சொற்றொடர்களானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(5) 42 ஆம் பிரிவில், ''அவரின் கோட்டத்திலுள்ள எந்தவொரு நெடுஞ்சாலையிலும் நிர்வாகி'', எனும் சொற்றொடருக்காக, ''எந்தவொரு நெடுஞ்சாலையிலும் ஆணையம்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(6) 47 ஆம் பிரிவில்,

(i) (b) கூறிற்குப் பின்னர், ''அல்லது'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(ii) (c) கூறானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(7) 55—ஆம் பிரிவில்,——

(i) (1) ஆம் உட்பிரிவில் ''எந்தவொரு ஆணையமும்'' எனும் சொற்றொடருக்காக, ''ஆணையம்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்,;

(ii) (2) ஆம் உட்பிரிவிற்கு, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:——

''(2) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலஅளவு முடிவுற்ற பின்னர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் எந்தவொரு விண்ணப்பமும் அரசுக்கு செய்யப்படுதல் கூடாது''.

(8) 57—ஆம் பிரிவில், ''மாநில தலைமை நிர்வாகிக்கோ அல்லது வேறெந்த நிர்வாகிக்கோ'' எனும் சொற்றொடருக்காக, ''ஆணையத்திற்கு'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(9) 58—ஆம் பிரிவில், ''மாநில தலைமை நிர்வாகியோ அல்லது வேறெந்த நிர்வாகியோ'' எனும் சொற்றொடருக்காக, ''ஆணையம்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(10) 63—ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், (a) கூறில், ''மாநில தலைமை நிர்வாகி அல்லது நிர்வாகி அல்லது அலுவலர் அல்லது நபர் எவருக்கும்'', எனும் சொற்றொடருக்காக, ''ஆணையம் அல்லது அலுவலர் அல்லது பணியாளர்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை**

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்களுக்கான மாண்புமிகு.அமைச்சர், 01.04.2023 அன்று சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில், இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் போன்று பொதுத் துறையும் தனியார் துறையும் பங்கு கொள்ளும்படியான விரைவான மற்றும் காலக்கெடுவிற்குள்ளான முறையில் நெடுஞ்சாலைகளின் வளர்ச்சிக்கு உரிய அதிகாரங்களுடன் தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையத்தை நிறுவுவதற்கு ஒரு தனி சட்டம் இயற்றப்படும் என்று அறிவித்தார். மேற்கூறப்பட்ட அறிவிப்பிற்கு செயல் வடிவம் அளிப்பதற்கு, அந்த நோக்கத்திற்காக ஒரு தனி சட்டத்தை இயற்ற அரசு முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எ.வ. வேலு,**
*பொதுப்பணித் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்டமுன்வடிவின் 1(2), 4(1) மற்றும் (4), 6(1), 8, 9, 10(1) (b), 12, 13(2) (j), 16, 17, 18(2), 19, 20, 21, 22, 26(2) மற்றும் (4), 27(1)(c) மற்றும் (2), 28, 29, 30 மற்றும் 31 ஆகிய கூறுகள், அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, நேர்விற்கேற்ப, அறிவிக்கைகள், ஆணைகளை வெளியிடுவதற்கு அல்லது விதிகளை அல்லது ஒழுங்குமுறை விதிகளை செய்வதற்கு, அரசுக்கு அல்லது தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையத்திற்கு அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையே மற்றும் தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**எ.வ. வேலு,**
*பொதுப்பணித் துறை அமைச்சர்.*

**நிதி பற்றிய குறிப்பு**

இச்சட்டமுன்வடிவானது சட்டமாக இயற்றப்படும் போது மற்றும் நடைமுறைக்கு கொண்டு வரப்படும்போது மாநிலத் தொகுநிதியத்திலிருந்து செலவு செய்ய நேரிடும். இந்நிலையில், முன்மொழியப்பட்ட சட்டத்தின் விளைவாக மாநிலத் தொகு நிதியத்திலிருந்து ஏற்படக்கூடிய செலவினத்தை மிகத் துல்லியமாக எந்த கோணத்திலும் மதிப்பிட இயலாது.

**எ.வ. வேலு,**
*பொதுப்பணித் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2024 பிப்ரவரி 21.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

**2024—ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2024**

**1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம் 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 43/1998. 2. 1998—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் 16ஆம் பிரிவின் (bb) கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 16—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"(bb) இயக்கம் மற்றும் பராமரிப்பு, திட்டம் அல்லது வசதி மேலாண்மை, மேற்பார்வை, மனித ஆற்றல் வழங்குதல், வெளித்தரப்பிடமிருந்து பயன்படுத்தப்படும் பணி, இயந்திரம், கருவி அல்லது வாகனங்களின் குத்தகை மற்றும் காப்பீடு அல்லாத, தொடர்புடைய அரசு துறையின் செயலாளர், நிதித் துறை செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி, கொள்முதல் அமைப்பின் தலைமை செயல் அலுவலர் அல்லது தலைவர், மற்றும் கொள்முதல் அமைப்பின் ஒரு தொழில்நுட்ப பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய குழுவின் முன் ஒப்புதலைப் பெற்ற பின்பு மற்றும் அரசால் அறிவிக்கப்படலாகும் தொடர்புடைய கல்வி அல்லது ஆராய்ச்சி அல்லது வணிகம் சாரா நிறுவனங்களிலிருந்து, கொள்முதல் நேர்வு ஒவ்வொன்றிலும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு கொள்முதல் செய்யப்படும் சேவை;".

**நோக்கக் காரண விளக்கவுரை**

1998–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் (bb) கூறானது, அதில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவின் பரிந்துரையின் பேரில், அரசு அறிவிக்கையின் மூலம், ஒரு சேவை கொள்முதலின் ஏதேனும் குறிப்பிட்ட நிகழ்வினை விளம்புகை செய்யுமாயின் அந்த கொள்முதலுக்கு அச்சட்டத்தின் 9 ஆம் மற்றும் 10 ஆம் பிரிவுகளின் வகைமுறைகள் பொருந்துதல் கூடாது, என்பதற்கு வகைசெய்கிறது. மேற்கூறப்பட்ட (bb) கூறின்படியான விளம்புகையானது கல்வி அல்லது ஆராய்ச்சி அல்லது வணிகம் சாரா நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் சேவைகள் கொள்முதலுக்கு மட்டுமே உட்பட்டது என்று கருதப்படுகிறது. அத்தகைய கொள்முதல்களை எளிதாக்குவன் பொருட்டு, முதல்நிகழ்வில் நிறுவனங்களிடம் அறிவிக்கை செய்வது உரியதாக இருக்கும் மற்றும் அதன் பின்னர், அத்தகைய கொள்முதலின் ஒவ்வொரு நிகழ்விலும் குழுவின் முன்ஒப்புதலுடன் கொள்முதல் செய்யும் அமைப்புகள் கூறப்பட்ட அறிவிக்கை செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து சேவைகளை கொள்முதல் செய்யலாம். அதனால் ஒரு நிறுவனத்திடமிருந்து செய்யப்படும் கொள்முதல்களைப் பொருத்தமட்டில் பல்வேறு அறிவிக்கைகள் வெளியிடுவதை தவிர்க்கலாம் என்று கருதப்படுகிறது.

2. கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 43/1998–ஐ, மேற்சொன்ன நோக்கத்திற்காக தகுந்தவாறு திருத்தம் செய்வது என அரசு முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்ட முன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**தங்கம் தென்னரசு,**
*நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்டமுன்வடிவின் 2 ஆம் கூறானது, அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, அறிவிக்கையை வெளியிடுவதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவை மற்றும் தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**தங்கம் தென்னரசு,**
*நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2024 பிப்ரவரி 21.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

2024–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2024

## 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக: —

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2024–ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியத் (திருத்தச்) சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் II / 1954

2–ம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1954–ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியச் சட்டத்தின் 2–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில், "நூற்றைம்பது கோடி ரூபாய்" என்னும் சொற்களுக்காக, "ஐந்நூறு கோடி ரூபாய்" என்னும் சொற்களானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்க-காரண விளக்கவுரை.**

1954–ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் II/1954) 2–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்படி, தமிழ்நாடு மாநிலத்தின் எதிர்பாராச் செலவு நிதியமானது, நூற்றைம்பது கோடி ரூபாய் தொகை உள்ளடங்கியதாகவுள்ளது. வரவு–செலவு தொடர்பான நடவடிக்கைகளின் அளவு பெருகியுள்ளதனை முன்னிட்டும், தேவை ஏற்படுகின்ற போதெல்லாம் வளர்ச்சித் திட்டங்களுக்குச் செலவிடவேண்டிய அவசியமிருப்பதனை முன்னிட்டும், மேற்சொன்ன சட்டத்தினைத் தக்கவாறு திருத்துவதன் மூலம், மேற்சொன்ன நிதியத்தின் உள்ளடக்கத் தொகையினை நூற்றைம்பது கோடி ரூபாயிலிருந்து ஐந்நூறு கோடி ரூபாயாக உயர்த்துவது தேவையானதெனக் கருதப்பட்டிருக்கின்றது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைகின்றது.

**தங்கம் தென்னரசு,**
*நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2024 பிப்ரவரி 21.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

**2024–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2024

2003–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமைச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1. (1)** இந்தச் சட்டம், 2024–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமை (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

**(2)** இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 16/2003.

4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமைச் சட்டத்தின் 4 –ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில்,–

(i) (a)ஆம் கூறில், “2025–2026” என்னும் சொற்றொடருக்காக, “2026–2027” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (b)ஆம் கூறில், “2025 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் தேதி” எனும் சொற்றொடருக்காக, “2026–ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் தேதி” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்க-காரண விளக்கவுரை.**

15–ஆம் நிதிக்குழுவானது தனது 2021–2026–க்கான அறிக்கையில், எரிசக்தி துறை குறித்த சில செயல்திறன் வரைகூறுகளின் அடிப்படையில், 2021–2022 முதல் 2024–2025 வரையிலான கால அளவினை உள்ளடக்கி வழங்கப்பட்ட முதல் நான்கு ஆண்டுகள் ஒவ்வொன்றிற்குமான மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீட்டில் 0.50 விழுக்காடு அளவு கூடுதல் ஆண்டுக் கடன் பெறுதலுக்கான ஆதாரங்களை மாநிலங்களுக்கு வழங்க பரிந்துரைத்துள்ளது. மேலும், நிதிக்குழுவானது, மொத்த மாநில உள்நாட்டு உற்பத்திக்கு நிகர கடன் பெறுதலுக்கான வரம்பினை 2021–2022, 2022–2023 மற்றும் 2023–2024 முதல் 2025–2026 வரையுள்ள ஆண்டுகளில் முறையே 4 விழுக்காடு, 3.5 விழுக்காடு மற்றும் 3 விழுக்காடாக தீர்மானிக்கவும், வழங்கப்பட்ட கால அளவின் முதல் நான்கு ஆண்டுகளில் மாநிலத்தால் கடன்பெறுதலுக்கான வரம்பை முழுமையாகப் பயன்படுத்த முடியாவிட்டால், வழங்கப்பட்ட கால அளவிற்குள் அடுத்தடுத்த ஆண்டுகள் எதிலும், பயன்படுத்தப்படாத கடன் தொகையைப் பெறவும் பரிந்துரைத்துள்ளது.

2. 15–ஆம் நிதிக்குழுவின் மேற்சொன்ன பரிந்துரைகளின் அடிப்படையில், குறிக்கப்பட்ட கால வரம்பினை அவ்வாறே நீட்டிப்பதற்காகவும், 2026–2027 ஆம் ஆண்டில் ஏற்படும் வருவாய்ப் பற்றாக்குறையை நீக்குவதற்காகவும் கிடைக்கக்கூடிய அதிகபட்ச நிதி ஆதாரங்களை பயன்படுத்திக் கொள்வதற்காக, 2026–ஆம் ஆண்டு மார்ச்சு 31–ஆம் தேதிக்குள் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் நிதிநிலை பற்றாக்குறையினை மூன்று விழுக்காடு வரை குறைப்பதற்காகவும், 2003–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமைச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 16/2003) திருத்தம் செய்ய அரசானது முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்ட முன்வடிவானது மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**தங்கம் தென்னரசு,**
*நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2024 பிப்ரவரி 21.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

**2024—ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 13/2024

## 2010-ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்புச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2024—ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்புச் (திருத்த) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாக குறிப்பிடப்படலாகும், அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 44/2010.

2—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2010 ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில்,—

(1) (a) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(aa) "விரிவான இயக்கத்திட்டம்" என்பது, அறிவிக்கப்பட்ட திட்டமிடல் பகுதியில் மக்கள் மற்றும் சரக்குகளின் திறமிகு நகர்ப்புற போக்குவரத்து மற்றும் இயக்கத்திற்கான வகைமுறைக்காக, திட்டமுறைகள் மற்றும் தொடர்புடைய செயல்களை குறிப்பிட்டுக்காட்டுகின்றதொரு செயல்பாட்டு ஆவணம் என்று பொருள்படும்;";

(2) (b) கூறுக்குப்பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

தமிழ்நாடு சட்டம் 35/1972.

"(ba) "அறிவிக்கப்பட்ட திட்டமிடல் பகுதி" என்பது, 1971—ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டவாறான சென்னை பெருநகர திட்டமிடல் பகுதி என்று பொருள்படும்;";

(3)(c) கூறுக்குப்பின்பு, பின்வரும் கூறுகளானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(ca) "ஒழுங்குமுறை விதிகள்" என்பது இந்தச் சட்டத்தின்படி அதிகார அமைப்பினால் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகள் என்று பொருள்படும்;

(cb) "இணைப்புப்பட்டியல்" என்பது இந்தச் சட்டத்திற்கான இணைப்புப் பட்டியல் என்று பொருள்படும்;

(cc) "போக்குவரத்து முதலீட்டுத் திட்டம்" என்பது, ஐந்தாண்டுகள் கால அளவிற்கு அறிவிக்கப்பட்ட திட்டமிடல் பகுதிக்குள் நகர்ப்புற போக்குவரத்துக்கான விரிவான முதலீட்டுத் திட்டம் என்று பொருள்படும்;

(cd) "நகர்ப்புற போக்குவரத்து" என்பது அதன் அனைத்து சொற்பொருள் மாறுபாடுகள் மற்றும் இணைச் சொற்றொடர்களுடன் போக்குவரத்தின் அனைத்துத் தன்மைகளையும் உள்ளடக்கும். அதாவது, அறிவிக்கப்பட்ட திட்டமிடல் பகுதியில் பொதுமக்களுக்கு கிடைக்கக்கூடிய உள்கட்டமைப்பு வசதிகள், வாகனங்கள் மற்றும் சேவைகளை உள்ளடக்கும் ஆனால் தனியார் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் சேவைகளை உள்ளடக்காது மற்றும் இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்படலாகும் வகைகளுக்குள் போக்குவரத்தின் அனைத்து முறைகள் மற்றும் வழிமுறைகளையும் உள்ளடக்கும்.".

3 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(2) அதிகார அமைப்பானது, அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களைப் பெறுவதற்கும், வைத்திருப்பதற்கும் அகற்றுவதற்கும் மற்றும் ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்ட அதிகாரத்துடன் நிலையான வழியுரிமையையும், பொது இலச்சினையையும் கொண்டதொரு கூட்டுருமமாக இருத்தல் வேண்டும் மற்றும் மேற்சொன்ன பெயரால் வழக்கிடுதலும், வழக்கிடப்படுதலும் வேண்டும்.".

4 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

4. முதன்மைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:—

"4. அதிகார அமைப்பில் அடங்கியிருப்பவர்கள்,—(1) அதிகார அமைப்பானது, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:—

(a) முதலமைச்சர், அவர் பதவிவழித் தலைமையாளராக இருப்பார்;

(b) சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்புச் பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சர், அவர் பதவிவழித் துணைத் தலைமையாளராக இருப்பார்;

(c) போக்குவரத்துத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சர், அவர் பதவிவழி இணை—துணைத் தலைமையாளராக இருப்பார்;

(d) மேயர், பெருநகர சென்னை மாநகராட்சி, பதவிவழி;

(e) அரசு தலைமைச் செயலாளர், பதவிவழி;

(f) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைமையாளர், பதவிவழி;

(g) போக்குவரத்துத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர், பதவிவழி;

(h) நிதித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர், பதவிவழி;

(i) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர், பதவிவழி;

(j) நெடுஞ்சாலைத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர், பதவிவழி;

(k) உள் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர், பதவிவழி;

(l) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர், பதவிவழி;

(m) திட்டமிடல், வளர்ச்சி மற்றும் சிறப்பு செயலாக்கத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர், பதவிவழி;

(n) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர், பதவிவழி;

(o) தென்னக இரயில்வே, சென்னை, பொது மேலாளர், பதவிவழி; மற்றும்

(p) அதிகார அமைப்பின் உறுப்பினர்–செயலாளர், இந்திய ஆட்சிப் பணி அல்லது மத்திய குடிமைப் பணிகள் தொகுதி 'அ' அலுவலர்களுள் இருந்து, அரசினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) அதிகார அமைப்பானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நடைமுறைகள், வரையறைகள் மற்றும் நிபந்தனைக்களுக்கிணங்கியவாறு மூன்று நபர்களுக்கு மிகாத கூடுதல் உறுப்பினர்களை பெயர் குறித்து முன்மொழியலாம்.

(3) அதிகார அமைப்பின் தலைமையாளர், அவர் வாராதிக்கின்ற காரணத்தினால் பதவிப் பணிகளை ஆற்ற இயலாதிருக்கின்றபோது, துணைத் தலைமையரின் முதுநிலையில் உள்ள நபரானவர், தலைமையாளர் அவருடைய பதவிப் பணிகளை பொறுப்பேற்றுக் கொள்கிற வரையிலும் தலைமையாளரின் பதவிப்பணிகளை ஆற்றுதல் வேண்டும்.''.

5. முதன்மைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில், ''அல்லது இசைந்து தெரிவு செய்யப்படுதல்'' என்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும். 5 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

6. முதன்மைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவில்,— 6 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1)(1) ஆம் உட்பிரிவிற்கான வகைமுறையானது விட்டு விடப்படுதல் வேண்டும்;

(2)(2) ஆம் உட்பிரிவில் ''அரசு'' என்ற சொற்றொடருக்காக அது காணப்படுகிற இரண்டு இடங்களிலும், ''அதிகாரஅமைப்பு'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

7. முதன்மைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:– 7 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

''7. அதிகார அமைப்பின் உறுப்பினர் நிலையிலிருந்து நீக்கம் செய்தல்.— நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் பதவி வகிக்க பொருத்தமற்றவராக அல்லது அதிகார அமைப்பின் கருத்தில் அவரை அதிகார அமைப்பின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குவதற்கு உகந்த தவறான நடத்தை அல்லது அசட்டைக் குற்றத்தை செய்வதராயிருக்கிறார் என்பதாக அதிகார அமைப்பிற்குத் தோன்றுமானால், அதிகார அமைப்பானது, அத்தகைய உறுப்பினருக்கு, காரணம் காட்டுவதற்கு ஒரு நியாயமான வாய்ப்பினை அளித்த பின்பு, ஆணை ஒன்றின் வாயிலாக அத்தகைய உறுப்பினரைப் பதவியிலிருந்து நீக்கலாம்.''.

8. முதன்மைச் சட்டத்தின், 8 ஆம் பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும். 8 ஆம் பிரிவை விட்டுவிடுதல்.

9. முதன்மைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– 9 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"(1) அதிகாரஅமைப்பின் உறுப்பினர்— செயலாளரானவர், அதிகார அமைப்பின் முதன்மை செயல் அலுவலராக இருத்தல் வேண்டும்.".

(2) (2) ஆம் உட்பிரிவில், "அது தேவையெனக் கருதுகிற"என்ற சொற்றொடருக்குப் பின்பு, "வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில்" என்ற சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

10 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

10. முதன்மைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவுகளானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:—

"10. அதிகார அமைப்பின் அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள்.— அதிகார அமைப்பானது, இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக, பின்வரும் அதிகாரங்களையும் செயல்பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:—

(a) அறிவிக்கப்பட்ட திட்டமிடல் பகுதியில் நகர்ப்புற போக்குவரத்துக்காக கொள்கையை வகுத்தல் மற்றும் ஒழுங்குமுறை விதிகள், பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளை கட்டமைத்தல்;

(b) பயணிகள் மற்றும் சரக்குகளின் போக்குவரத்து மற்றும் ஒருங்கிணைந்த நிலப்பயன்பாடு மற்றும் போக்குவரத்து திட்டமிடல் ஆகிய துறைகளில் ஒருங்கிணைப்பு அதிகார அமைப்பாக செயல்படுதல்;

(c) விரிவான இயக்கத் திட்டம், போக்குவரத்து முதலீட்டுத் திட்டங்கள், ஆண்டு வரவு செலவு திட்டங்கள் மற்றும் பிற திட்டங்கள் மற்றும் நிலையான நகர்ப்புற போக்குவரத்துக்குத் தேவையான துணை திட்டங்கள் ஆகியவற்றை அங்கீகரித்தல் மற்றும் அவற்றின் உடன்பாடுகளை கண்காணித்தல் மற்றும் தணிக்கை செய்தல்;

(d) நகர்ப்புற போக்குவரத்து நிதியத்திலிருந்தோ அல்லது அரசின் ஒப்புதலுடன் பெறப்படும் நிதியிலிருந்தோ, அறிவிக்கப்பட்ட திட்டமிடல் பகுதியில் போக்குவரத்து முதலீட்டுத் திட்டங்களின் நிதி உதவியினை எளிதாக்குதல்;

(e) செயற்குழுவின் செயல்பாடுகளையும் நடவடிக்கைகளையும் மற்றும் அதிகார அமைப்பின்பிற அலுவலர்களையும் பணியாளர்களையும் மேற்பார்வையிடுதல் மற்றும் மேற்கூறியவற்றின் மீது கட்டுப்பாட்டினை செயல்படுத்துதல்;

(f) பொதுப் பயணியர் போக்குவரத்து முறைகள், துணைப் போக்குவரத்து முறைகள் மற்றும் தெரு, தெரு அல்லாத நிறுத்தங்களுக்காக செயற்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட கட்டண அமைப்புமுறை மற்றும் அதிகார அமைப்பினால் முடிவு செய்கிறவாறான அத்தகைய பிற கட்டணங்கள், விலைகள் மற்றும் செலவு கட்டணங்கள் ஆகியவற்றை அங்கீகரித்தல்;

(g) போக்குவரத்து அமைப்புமுறையை மேம்படுத்துவதற்காக, தேவைப்படுகிறவிடத்து, இருப்புப்பாதைகள், தேசிய நெடுஞ்சாலைகள், கடல் துறைமுகங்கள், விமான நிலையங்கள் ஆகியவற்றைப் பொறுத்து ஒன்றிய அரசுக்கு பரிந்துரைகளை ஏற்படுத்துதல்;

(h) அரசால் அதனிடம் அவ்வப்போது ஒப்படைக்கப்படலாகும் அத்தகைய பிற அலுவல் பணிகளை நிறைவேற்றுதல்.

10A. செயற்குழு.— (1) பின்வரும் உறுப்பினர்கள் அடங்கிய செயற்குழு ஒன்று இருத்தல் வேண்டும், அதாவது:—

(a) அரசு தலைமைச் செயலாளர், அவர் பதவிவழி தலைமையாளராக இருப்பார்;

(b) நிதித்துறையினைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர், பதவிவழி;

(c) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையினைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர், பதவிவழி;

(d) நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையினைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர், பதவிவழி;

(e) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலாளர், பதவிவழி;

(f) போக்குவரத்து ஆணையர், பதவிவழி;

(g) பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையாளர், பதவிவழி;

(h) நகராட்சி நிர்வாகத்தின் இயக்குநர், பதவிவழி;

(i) பெருநகர சென்னை மாநகரத்தின் காவல் ஆணையாளர், பதவிவழி;

(j) சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், பதவிவழி;

(k) சென்னை பெருநகர போக்குவரத்து கழகத்தின் மேலாண்மை இயக்குநர், பதவிவழி;

(l) தென்னக இரயில்வேயின் பொது மேலாளர், பதவிவழி;

(m) இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின், சென்னை மண்டல அலுவலத்தின் பொது மேலாளர், பதவிவழி; மற்றும்

(n) சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குரத்து அதிகார அமைப்பின் உறுப்பினர்– செயலாளர், பதவிவழி;

(2) செயற்குழுவானது, இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக, பின்வரும் அதிகாரங்களையும் செயற்பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:—

(a) அனைத்து பொது பயணிகள் போக்குவரத்து முறைகள் மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்புகளின் திட்டமிடல் மற்றும் மேம்பாட்டிற்கான விரிவான இயக்கத் திட்டம், போக்குவரத்து முதலீட்டு திட்டங்கள், பிற திட்டங்கள் மற்றும் துணை திட்டங்கள் ஆகியவற்றை தயாரித்தல் மற்றும் தொடர்புடைய போக்குவரத்து முகமைகள் மூலம் அதை செயல்படுத்துவதற்காக அதிகார அமைப்புக்கு பரிந்துரைத்தல்;

(b) விரிவான இயக்கத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக தொடர்புடைய முகமைகளுக்கு நிதியங்களை குறித்தளிப்பதற்காக அதிகார அமைப்பின் இசைவுடன் ஆண்டு வரவு செலவுத் திட்டங்களைத் தயாரித்து அரசுக்கு அவற்றை பரிந்துரை செய்து அனுப்புதல் வேண்டும்;

(c) பொதுப் பயணிகளுக்கான போக்குவரத்து அமைப்புகளை மேம்படுத்துவது, அறிவிக்கப்பட்ட திட்டமிடல் பகுதியில் சிறப்பு தன்மையதான சில போக்குவரத்து மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளை செயல்படுத்துவதுடன் கூட, அவற்றின் செயல்பாடுகளை முறைப்படுத்துவது உள்ளடங்கலான, பல்வேறுபட்ட போக்குவரத்து திட்டங்களைச் செயல்படுத்துவதைக் கண்காணித்தலும், ஒருங்கிணைத்தலும், மேம்படுத்துதலும், மேற்பார்வையிடுதலும் வேண்டும்;

(d) அறிவிக்கப்பட்ட திட்டமிடல் பகுதியில் போக்குவரத்து நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கிணங்க காலமுறையில் ஒருங்கிணைந்த போக்குவரத்து திட்டத்தைக் காலத்திற்கேற்றாற்போல் மாற்றியமைத்தல் வேண்டும்;

(e) விரிவான இயக்கத் திட்டம் செயல்படுத்துவதை கண்காணித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்;

(f) அறிவிக்கப்பட்ட திட்டமிடல் பகுதியில் இயக்கத்தினை பாதிக்கக்கூடிய பொருண்மைகளின் மீதான முடிவுகளை எடுத்தல் மற்றும் விரிவான இயக்கத் திட்டத்தின் ஒட்டு மொத்த செயல்திறனுக்கு இடையூறு விளைவிக்கும் முகமை அல்லது உள்ளாட்சி அமைப்பு எவற்றாலும் நடவடிக்கைகள் எதுவும் தொடங்கப்படவில்லை என்பதை உறுதி செய்தல்;

(g) தடங்களை காலமுறைதோறும் ஆய்வு செய்வதன் வாயிலாக பெருமளவிலான பொதுப் பயணியர் போக்குவரத்து முறைகள் மற்றும் துணைப் போக்குவரத்து முறைகளுக்கான தடத்தை முறைப்படுத்துதல் வேண்டும்;

(h) காலமுறையான மதிப்பீட்டின் அடிப்படையில் பொதுப்பயணிகள் போக்குவரத்து முறைகள் மற்றும் துணை போக்குவரத்து முறைக்கான கட்டண அமைப்புமுறையை பரிந்துரைத்தல்;

(i) சாலை பாதுகாப்பு குழு ஒன்றை மேலாண்மை செய்து வருதல்;

(j) முகவாண்மைகளுக்கு இடையேயான கோரிக்கைகள் இணக்கமாய் இருப்பதை முயன்று பெறுதல் மற்றும் அத்தகைய முகவாண்மைகளுக்கு இடையே ஏற்படக் கூடிய வேறுபாடுகளைத் தீர்த்தல் வேண்டும்;

(k) துணைக் குழுக்களை உருவாக்குதல் மற்றும் துணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை நியமனம் செய்தல்;

(l) பொதுப் பயணியர் போக்குவரத்து முறைகள் மற்றும் துணைப் போக்குவரத்து முறைகள் செயற்பாட்டினை அல்லது திறனை மேம்படுத்துவதற்கு தேவையான படிப்புகளையும் தேவையான ஆய்வுகளையும் தொடங்குதல் மற்றும் தரவுத்தளம் ஒன்றை பேணி வருதல்;

(m) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை செயல்படுத்தும் நோக்கத்திற்காக, அவர்களின் உதவி அல்லது தேவையெனக் கருதலாகும் நிபுணர்களை நியமனம் செய்தல்;

(n) விரிவான போக்குவரத்து திட்டத்திற்குள் அடங்காத பொதுப் பயணியர் போக்குவரத்து முறைகள் தொடர்பான தொடர் முகவாண்மைகளின் பிற செயற்பாடு கட்டமைப்பினையும் அறிவிக்கப்பட்ட திட்டமிடல் பகுதியில் ஒன்று சேர்த்து ஒருங்கிணைப்பதற்கான மற்றும் அவற்றை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முறைப்படுத்துதல் ;

**(3)** செயற்குழுவானது, அத்தகைய நேரங்களிலும், இடங்களிலும் கூடுதல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அதன் கூட்டங்களில் அலுவல் தொடர்பான அத்தகைய நடைமுறைகளை கடைபிடித்தல் வேண்டும்.”.

**11 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.**

**11.** முதன்மைச் சட்டத்தின் **11** ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

‘‘11. இணங்கி நடப்பதிலிருந்து விதிவிலக்கு.– அரசானது, பொது நலன் கருதி, அது பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டு, பொது அல்லது சிறப்பு ஆணையின் மூலம், அறிவிக்கப்பட்ட திட்டமிடல் பகுதியில் போக்குவரத்து முறையைத் திட்டமிடுதல், இயக்குதல் அல்லது நிர்வகித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள முகமை எதற்கும், அதிகார அமைப்பின் எந்தவொரு முடிவிற்கும் இணங்குவதிலிருந்து விலக்கு அளிக்கலாம்.’’.

12. முதன்மைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– 12 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

‘‘12. அதிகார அமைப்பின் கூட்டங்கள்.–(1) அதிகார அமைப்பானது, தேவையாகிறவிடத்தெல்லாம் கூடுதல் வேண்டும் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் வகுத்துரைக்கப்படலாகும் நடைமுறை விதிகளை பின்பற்றுதல் வேண்டும்:

வரம்புரையாக, அதிகார அமைப்பானது குறைந்தது ஆண்டுக்கு ஒரு முறையாவது கூடுதல் வேண்டும்.

(2) காலியிடம் ஏதேனும் இருத்தல் அல்லது குறைவெண்ணில் பற்றாக்குறை அல்லது அதிகார அமைப்பின் கட்டமைப்பு அல்லது கூட்டங்களை நடத்துவதில் குறைபாடு, ஆகியவை ஏதேனும் இருப்பதன் அடிப்படையில் மட்டுமே அதிகார அமைப்பின் செயல் அல்லது நடவடிக்கையானது, செல்லா நிலையது ஆகாது.

(3) அதிகாரஅமைப்பானது, போக்குவரத்து, கட்டமைப்பு பொறியியல், நிதி, சுற்றுச்சூழல், நகர்ப்புற திட்டமிடல் அல்லது பொது நிர்வாகம் ஆகிய துறைகளில் நிபுணத்துவம் பெற்ற நபர்களை அல்லது பொருத்தமெனக் கருதலாகும் சிறப்பு வாய்ந்த அல்லது உயர் புகழ் பெற்ற நபர்களை சிறப்பு அழைப்பாளர்களாக அதிகார அமைப்பின் கூட்டங்கள் எதிலும் கலந்து கொள்வதற்கு அத்தகைய எண்ணிக்கையில் அழைக்கலாம். சிறப்பு அழைப்பாளர்கள் விவாதத்தில் பங்கேற்கலாம். ஆனால் வாக்களிக்கும் உரிமையினைப் பெற்றிருத்தல் கூடாது.’’.

13. முதன்மைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– 14 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

‘‘14. ஒப்படைவு செய்தல்.– அதிகார அமைப்பு அல்லது செயற்குழுவானது பொது அல்லது சிறப்பு ஆணையின் மூலம் ஆணையில் குறித்துரைக்கப்படலாகும், அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டு, அதிகார அமைப்பு அல்லது செயற்குழு தேவையெனக் கருதலாகும், அதன் அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள் எதனையும், அதிகார அமைப்பின் அதன் உறுப்பினர் எவரிடமும் அல்லது அலுவலர் எவரிடமும் ஒப்படைவு செய்யலாம்.’’.

14. முதன்மைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவில், ‘‘அதிகார அமைப்பானது நியமனம் செய்வதற்கு உரிமை உண்டு’’ எனும் சொற்றொடருக்காக, ‘‘அதிகார அமைப்பானது நியமனம் செய்யலாம்’’ எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 15 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

15. முதன்மைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– 17 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

‘‘17. நகர்ப்புற போக்குவரத்து நிதியம்.– (1) அதிகார அமைப்பானது, ‘‘நகர்ப்புற போக்குவரத்து நிதியம்’’ என்று அழைக்கப்படுகின்ற தனக்கு சொந்தமான நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அரசானது அதிகார அமைப்பின் செயல்பணிகளுக்காக, தேவையெனக் கருதப்படக்கூடிய தொகைகளை ஒவ்வொரு நிதியாண்டிலும் அதிகார அமைப்பிற்கு செலுத்தலாம் மற்றும் நிதிக்கான பிற மூலம் எதனையும் அவ்வப் போது அறிவிக்கலாம்.

(3) அவ்வப்போது, அரசால் செலுத்தப்படலாகும் தொகைகள் அனைத்தும் மற்றும் அதிகார அமைப்பின் வரவுகள் அனைத்தும் அத்தகைய நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி அல்லது இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, போக்குவரத்து முதலீட்டு திட்டங்களுக்கு நிதியளித்தல் உள்ளடங்கலாக, அதிகார அமைப்பினால் செய்ய நேர்ந்த செலவுகள் அனைத்தும் மேற்சொன்ன நிதியத்திலிருந்து செலவு செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய செலவு செய்யப்பட்ட பிறகு மீதமுள்ள உபரித் தொகை எதுவும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வைப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.''

19 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

16. முதன்மைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''19. ஆண்டறிக்கை.— (1) அதிகார அமைப்பானது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதிக்குப் பிறகு, முந்தைய நிதியாண்டின் போது தன்னுடைய நடவடிக்கைகள் குறித்து, விவரங்களை அளிக்கிற அறிக்கை ஒன்றை வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய தேதிக்கு முன்பு அத்தகைய படிவத்தில் தயாரித்து அரசுக்கு பணிந்தனுப்பதல் வேண்டும் மற்றும் அந்த அறிக்கையானது அடுத்த நிதியாண்டின் போது அதிகார அமைப்பால் பெரும்பாலும் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் எவையேனும் இருப்பின் அவை குறித்த விவரங்களை அளித்தல் வேண்டும்.

(2) அரசானது, அதனைப் பெற்ற பிறகு கூடிய விரைவில், அத்தகைய அறிக்கை ஒவ்வொன்றும் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுமாறு செய்வித்தல் வேண்டும்.'' .

17. முதன்மைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவானது, அந்தப் பிரிவின், (1) ஆம் உட்பிரிவாக மறுஎண்ணிடப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு மறு எண்ணிடப்பட்டவாறான (1) ஆம் உட்பிரிவிற்குப் பின்பு, பின்வரும் உட் பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

20 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

''(2) அதிகார அமைப்பு மற்றும் ஏதேனும் பிற அதிகார அமைப்பு எதிலும், உள்ளாட்சி அமைப்பு, கூட்டாண்மை அமைப்பு, அரசுத்துறை அல்லது முகவாண்மை எதனின் இடையே பூசல் எதுவும் ஏற்படுகின்ற நேர்வில், அது அரசால் தீர்க்கப்படுதல் வேண்டும் மற்றும் அரசின் முடிவே இறுதியானதாக இருத்தல் வேண்டும் மற்றும் அத்தகைய பூசலில் ஈடுபட்டுள்ள தரப்பினரைக் கட்டுப்படுத்துதல் வேண்டும்:

வரம்புரையாக அரசானது, தொடர்புடைய தரப்பினருக்கு கேட்கும் வாய்ப்பு ஒன்றினை வழங்காமல், பூசல் எதனின் தொடர்பாகவும் ஆணை ஒன்றினை பிறப்பித்தல் கூடாது.''.

**இணைப்புப்பட்டியல்**
**(2(cd) ஆம் பிரிவைக் காண்க)**
**போக்குவரத்தின் முறைகள் மற்றும் வழிமுறைகள்**

1. பேருந்துகள்

2. தண்டூர்திப் பாதை

3. மெட்ரோ ரயில் பாதை

4. கம்பி வட மின்சார பேருந்து

5. தொங்கூர்தி

6. பேருந்து விரைவுப் போக்குவரத்து அமைப்பு

7. இலகு ரயில் போக்குவரத்து

8. நகரங்களுக்கிடையேயான இரயில்வே / புறநகர் இரயில்

9. படகுகள்

10. துரித நீர்வழிப் போக்குவரத்து.

11. வெகுஜன போக்குவரத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற தனியார் வாகனங்கள் உள்ளடங்கலாக, அதன் எரிபொருள் அல்லது உந்து விசை வகையைப் பொருட்படுத்தாத வேறு முறைகள் எதுவும்.

12. துணைப்போக்குவரத்து—தனிநபர் மற்றும் போன்ற பல பயணங்களுக்காக வாடகை அடிப்படையில் அந்தநபருக்குக் கிடைக்கக்கூடிய அறிவிக்கப்பட்ட திட்டமிடல் பகுதிக்குள் உள்ள இயக்குபவர்களால் வழங்கப்பட்ட அமைப்புகளையும் இது உள்ளடக்கும்.

(a) தானியங்கி மூவுருளி உந்துகள்/பகிர் தானியங்கி மூவுருளி உந்துக்கள்/மின்னனு மூவுருளி உந்துக்கள்;

(b) மீட்டர் பொருத்தப்பட்ட சீருந்து, வாடகைக்கு எடுக்கப்படும் சீருந்து அல்லது பகிர்—சீருந்து;

(c) சிற்றுந்து/மூடுஉந்து;

(d) திரளாக இயக்கப்படும் போக்குவரத்து வாகனம் எதுவும்;

(e) துணைப் போக்குவரத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற எரிபொருள் மற்றும் உந்து விசை அமைப்பைப் பொருட்படுத்தாத வேறு முறைகள் எதுவும்.

13. எரிபொருள் உந்து விசையினால் பயன்படுத்தாத அல்லது மாசுபாட்டினை ஏற்படுத்தாத மிதிவண்டி, மூவுருளி மிதிவண்டி மற்றும் பிற பசுமை வகைப்போக்குவரத்து எதுவும்.

14. நகர்ப்புற சரக்கு.— அறிவிக்கப்பட்ட திட்டமிடல் பகுதிக்கு இடையேயும், வெளியேயும் மற்றும் அவற்றுக்குள்ளும் பொருட்கள் சரக்குகள்/சுமைகள் ஆகியவற்றை சுமந்து செல்வதை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ள சரக்கு வாகனங்களின் இயக்கங்கள்.

**நோக்க காரண விளக்கவுரை**

நகர்ப்புற போக்குவரத்து என்பது நகர்ப்புற உள்கட்டமைப்பின் ஒரு முக்கிய அங்கமாகும் மற்றும் நகரத்தின் உயிர்நாடியாகும். நன்கு திட்டமிடப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து அமைப்பானது பொருளாதார மற்றும் சமூக நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பாகும் மற்றும் நகர்ப்புற பொருளாதார வளர்ச்சியை எளிதாக்குவதற்கான முக்கிய காரணியாகும்.

2. 2010 ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்புச் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 44/2010) ஒருங்கிணைந்த போக்குவரத்து அதிகார அமைப்பு ஒன்றினை நிறுவுவதின் மூலம், சென்னை பெருநகர திட்டமிடல் பகுதியில் உள்ள ஒருங்கிணைந்த நகர்ப்புர போக்குவரத்து அமைப்புகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும், நெறிப்படுத்தவும், முழுமையாக நிர்வகிக்கவும் இயற்றப்பட்டது.

3. சென்னை மாநகரில், கடந்த பத்தாண்டுகளில் பொருளாதார மற்றும் சமூக நடவடிக்கைகளின் பன்படங்கு அதிகரிப்பானது, நகர்ப்புர போக்குவரத்து அமைப்பில் நடைமுறைச் செயல்பாட்டு சிக்கல்களுக்கு வழிவகுத்தது. நடைமுறைச் சிக்கல்களை நீக்கி, பல போக்குவரத்து முகமைகளின் சேவைகளை மேம்படுத்தும் நோக்கில், நகர்ப்புர போக்குவரத்தில் எழுந்துள்ள சில புதிய சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்பின் பங்கினை நெறிப்படுத்துவதற்கும், வலுப்படுத்துவதற்கும், மேம்படுத்துவதற்கும், 2010 ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்புச் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 44/2010) தக்கவாறு திருத்தம் செய்வதென, அரசானது முடிவு செய்துள்ளது.

4. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சு.முத்துசாமி,**
*வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற*
*வளர்ச்சித் துறை அமைச்சர்.*

**சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இச்சட்ட முன்வடிவின் 4, 9, 10, 11, 12, 13, 15, மற்றும் 16 ஆகிய கூறுகள், அவற்றில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, நேர்விற்கேற்ப அறிவிக்கைகள் அல்லது ஆணைகளை பிறப்பிப்பதற்கோ அல்லது விதிகளை செய்வதற்கோ அரசு அல்லது சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்பிற்கு அதிகாரம் அளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**சு.முத்துசாமி,**
*வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற*
*வளர்ச்சித் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2024 பிப்ரவரி 21.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

**2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2024

## தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

### பகுதி-I.
### முன்னுரை.

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்

1. (1) இந்தச் சட்டம் 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

### பகுதி-II.
### 1981-ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 1/1982.

14—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1981—ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், (i) ஆம் கூறின் வரம்புரையில், “ஐம்பத்தெட்டு வயதினை” எனும் சொற்றொடருக்காக, “அறுபது வயதினை” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

### பகுதி-III.
### 1981-ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 2/1982.

14—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. 1981—ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், (i) ஆம் கூறின் வரம்புரையில், “ஐம்பத்தெட்டு வயதினை” எனும் சொற்றொடருக்காக, “அறுபது வயதினை” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

### பகுதி-IV.
### 1985-ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 23/1985.

15—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. 1985—ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவிற்கான இரண்டாம் வரம்புரையில், “ஐம்பத்தெட்டு வயதினை” எனும் சொற்றொடருக்காக, “அறுபது வயதினை” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

### பகுதி-V.
### 1990-ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 31/1990.

13—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

5. 1990—ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், (i) ஆம் கூறின் வரம்புரையில், “ஐம்பத்தெட்டு வயதினை” எனும் சொற்றொடருக்காக, “அறுபது வயதினை” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி-VI.

### 1997-ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்.

14–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

6. 1997–ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், (ii) ஆம் கூறின் வரம்புரையில், ''ஐம்பத்தெட்டு வயதினை'' எனும் சொற்றொடருக்காக, ''அறுபது வயதினை'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 45/1997.

## பகுதி-VII.

### 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்.

13 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

7. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின், (1) ஆம் உட்பிரிவில், (b) கூறின் வரம்புரைக்காக, பின்வரும் வரம்புரையானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

தமிழ்நாடு சட்டம் 27/2002.

''வரம்புரையாக, பதிவாளர் அறுபது வயதினை நிறைவெய்தியதும் அல்லது இந்தக் கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலஅளவு முடிவடைந்ததும், இவற்றில் எது முந்தையதோ அதன் பேரில் ஓய்வு பெறுதல் வேண்டும்;''.

## பகுதி-VIII.

### 2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தம்.

14 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

8. 2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டத்தின், 14–ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் (ii) ஆம் கூறின் வரம்புரைக்காக, பின்வரும் வரம்புரையானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

தமிழ்நாடு சட்டம் 32/2002.

''வரம்புரையாக, பதிவாளர் அறுபது வயதினை நிறைவெய்தியதும் அல்லது இந்தக் கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலஅளவு முடிவடைந்ததும், இவற்றில் எது முந்தையதோ அதன் பேரில் ஓய்வு பெறுதல் வேண்டும்;''.

## பகுதி-IX.

### 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகச் சட்டத்திற்கான திருத்தம்.

12 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

9. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின், (1) ஆம் உட்பிரிவில், (b) கூறின் வரம்புரைக்காக பின்வரும் வரம்புரையானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

தமிழ்நாடு சட்டம் 33/2008.

''வரம்புரையாக, பதிவாளர் அறுபது வயதினை நிறைவெய்தியதும் அல்லது இந்தக் கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலஅளவு முடிவடைந்ததும், இவற்றில் எது முந்தையதோ அதன் பேரில் ஓய்வு பெறுதல் வேண்டும்;''.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

அரசானது, அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் பணி ஓய்வு பெறும் வயதினை ஐம்பத்தெட்டிலிருந்து அறுபதாக உயர்த்தியுள்ளது. அதே ஒப்புமையில் மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்களின் பதிவாளர்களின் ஓய்வு பெறும் வயதினை ஐம்பத்தெட்டிலிருந்து அறுபதாக உயர்த்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. எனவே, பின்வரும் பல்கலைக்கழக சட்டங்களை திருத்த, அரசு முடிவு செய்துள்ளது, அவையாவன:–

(i) 1981–ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1/1982);

(ii) 1981–ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1982);

(iii) 1985–ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 23/1985);

(iv) 1990–ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1990);

(v) 1997–ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 45/1997);

(vi) 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/2002);

(vii) 2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/2002); மற்றும்

(viii) 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 33/2008);

2. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**ஆர். எஸ். ராஜகண்ணப்பன்**
*பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2024 பிப்ரவரி 21.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

**2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2024

## 1914 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ பதிவுச் சட்டத்தை மாற்றீடு செய்வதற்கும் தமிழ்நாடு மாநில மருத்துவ மன்றத்தினை அமைத்துருவாக்குவதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்குமானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஐந்தாம் ஆண்டில், தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

### அத்தியாயம் — I.

### முன்னுரை.

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மருத்துவ மன்றச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது தமிழ்நாடு மாநிலம் முழுவதும் அளாவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு அறிவிக்கை வாயிலாகக் குறிப்பிடும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. (1) இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,—

(a) ''தலைமையாளர்'' என்பவர் நிர்வாகக் குழுவின் தலைமையாளர் ஆவார்;

(b) ''நிர்வாகக் குழு'' என்பது மாநில மன்றத்தின் நிர்வாகக் குழு என்று பொருள்படும்;

(c) ''நிதியம்'' என்பது 28 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நிறுவப்பெற்ற தமிழ்நாடு மாநில மருத்துவ மன்ற நிதியம் என்று பொருள்படும்;

(d) ''அரசு'' என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(e) ''உரிமம்'' என்பது 18 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் மருத்துவ தொழில் புரிதலுக்கு வழங்கப்பட்ட ஓர் உரிமம் என்று பொருள்படும்;

(f) ''உறுப்பினர்'' என்பவர் மன்றத்தின் உறுப்பினர் ஆவார்;

(g) ''அறிவிக்கை'' என்பது *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்பட்ட அறிவிக்கை என்று பொருள்படும்;

(h) ''வகுத்துரைக்கப்பட்டது'' என்பது இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்;

(i) ''தலைவர்'' என்பவர் மன்றத்தின் தலைவர் ஆவார்;

(j) ''பதிவு செய்யப்பட்ட மருத்துவ தொழிலாற்றுநர்'' என்பது இச்சட்டத்தின்கீழ் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒரு மருத்துவ தொழிலாற்றுநர் என்று பொருள்படும். ஆனால் 19 ஆம் பிரிவின்கீழ் தற்காலிகமாக பதிவு வழங்கப்பெற்ற நபரை உள்ளடக்காது;

(k) ''பதிவாளர்'' என்பவர் இச்சட்டத்தின்கீழ் 13 ஆம் பிரிவின்கீழ் பணியமர்த்தப்பட்ட மாநில மன்றத்தின் பதிவாளர் ஆவார்;

(l) ''ஒழுங்குமுறைவிதிகள்'' என்பது இச்சட்டத்தின்கீழ் மாநில மன்றத்தால் உருவாக்கப்பட்ட ஒழுங்குமுறைவிதிகள் என்று பொருள்படும்;

(m) ''விதிகள்'' என்பது இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விதிகள் என்று பொருள்படும்;

(n) ''மாநிலம்'' என்பது தமிழ்நாடு மாநிலம் என்று பொருள்படும்;

(o) ''மாநில மன்றம்'' என்பது 3 ஆம் பிரிவின்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாநில மருத்துவ மன்றம் என்று பொருள்படும்;

(p) ''மாநில பதிவேடு'' என்பது 16 ஆம் பிரிவின்கீழ் பராமரிக்கப்படும் பதிவேடு என்று பொருள்படும்;

(q) ''துணைத் தலைமையாளர்'' என்பவர் நிர்வாக குழுவின் துணைத் தலைமையாளர் ஆவார்; மற்றும்

(r) ''துணைத் தலைவர்'' என்பவர் மாநில மன்றத்தின் துணைத் தலைவர் ஆவார்.

(2) இதில் பயன்படுத்தப்பட்ட ஆனால் பொருள் வரையறை செய்யப்படாத மற்றும் 2019 ஆம் ஆண்டு தேசிய மருத்துவ ஆணைய சட்டத்தில் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ள பிற சொற்கள் அனைத்தும் மற்றும் சொற்றொடர்களும் முறையே, அந்தச் சட்டம் அல்லது அந்த ஒழுங்குமுறை விதிகளில் அவற்றிற்கு குறித்தளிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும். மையச் சட்டம் 30/2019.

## அத்தியாயம்- II.

## தமிழ்நாடு மாநில மருத்துவ மன்றம்.

மாநில மன்றத்தின் அமைத்துருவாக்கம் மற்றும் கூட்டமைவு.

3. (1) அரசு, அறிவிக்கை வாயிலாக, தமிழ்நாடு மாநில மருத்துவ மன்றம் என அழைக்கப்படும் ஒரு மாநில மன்றத்தை அமைத்துருவாக்கலாம்.

(2) மாநில மன்றமானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அவர்களாவர்:––

(a) பதிவாளர், தமிழ்நாடு டாக்டர்.எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை – பதவிவழி;

(b) மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர், சென்னை – பதவிவழி;

(c) மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், சென்னை – பதவிவழி;

(d) பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், சென்னை – பதவிவழி;

(e) மாநிலத்திலுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளின் தலைவர்களிடையே இருந்து அரசால் நியமனம் செய்யப்பட வேண்டிய இரண்டு உறுப்பினர்கள் மற்றும் மாநிலத்திலுள்ள தனியார் மருத்துவக் கல்லூரிகளின் தலைவர்களிடையே இருந்து அரசால் நியமனம் செய்யப்பட வேண்டிய ஓர் உறுப்பினர்;

(f) ஒன்பது உறுப்பினர்கள் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ தொழிலாற்றுநர்களால் அவர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். அவர்களுள் குறைந்தது மூவர் பெண்களாக இருத்தல் வேண்டும்; மற்றும்

(g) மருத்துவத் துறையில் பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம் கொண்டிருக்கிற பதிவுசெய்யப்பட்ட மருத்துவ தொழிலாற்றுநர்களுக்கிடையே இருந்து அரசால் நியமனம் செய்யப்படவேண்டிய நான்கு உறுப்பினர்கள், அவர்களில் குறைந்தபட்சம் ஒருவர் பெண்களாக இருத்தல் வேண்டும்.

(3) மாநில மன்றமானது, சொத்துக்களை ஈட்டவும், வைத்திருக்கவும் மற்றும் அதனை தீர்வு செய்வதற்கும் மற்றும் ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்குமான அதிகாரத்துடன், தொடர்ந்திருக்கும் வழியுரிமையையும் மற்றும் பொதுவான ஓர் இலச்சினையையும் கொண்டிருக்கும் ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும் மற்றும் அந்தப் பெயரால் வழக்கிடலாம் மற்றும் வழக்கிடப்படலாம்.

உறுப்பினர்கள், துணைத் தலைவர் மற்றும் தலைவருக்கான தேர்தல்.

4. (1) 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (f) கூறின் கீழ் உறுப்பினர்களின் தேர்தலானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் நடத்தப்படுதல் வேண்டும்.

(2) மாநில மன்றத்தின் அமைத்துருவாக்கத்திற்குப் பிறகு, அதன் முதல் கூட்டத்தில், 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அதன் உறுப்பினர்கள் 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (f) மற்றும் (g) கூறுகளின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமனம் செய்யப்பட்ட அதன் உறுப்பினர்களிடையேயிருந்து ஒரு தலைவர் மற்றும் ஒரு துணைத் தலைவரை வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(3) ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமனம் செய்தல் அல்லது தலைவர் அல்லது துணைத் தலைவரைத் தேர்ந்தெடுத்தல் தொடர்பாக இடையூறு ஏதேனும் ஏற்படும் நேர்வில், அத்தகைய இடையூறு அரசுக்கு தெரிவிக்கப்படுதல் வேண்டும், மற்றும் அதனைப் பொறுத்து அரசின் முடிவே இறுதியானதாகும்.

பதவிக் காலம்.

5. (1) 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (f) மற்றும் (g) கூறுகளின் கீழ், மாநில மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமனஞ்செய்யப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலமானது, அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமனஞ்செய்யப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு இருத்தல் வேண்டும் மற்றும் நேர்விற்கேற்ப, அவர்கள் மறுதேர்தல் அல்லது மறு நியமனத்திற்கு தகுதியுடையவராவர்.

(2) 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (e) கூறின்கீழ் நியமனஞ்செய்யப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலமானது, அவர்கள் நியமனஞ்செய்யப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளாக இருத்தல் வேண்டும் மற்றும் அவர்கள் மறு நியமனத்திற்கு தகுதியுடையவராவர்.

வரம்புரையாக, இந்த உட்பிரிவின்கீழ் நியமனஞ் செய்யப்பட்ட ஓர் உறுப்பினர், அவர் ஒரு தலைவராக இருப்பது அற்றுப்போன தேதியிலிருந்து ஓர் உறுப்பினராக இருப்பது அற்றுப்போதல் வேண்டும்.

(3) தலைவர் மற்றும் துணைத் தலைவரின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகளாக இருத்தல் வேண்டும் மற்றும் அவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியுடையவராவர்:

வரம்புரையாக, தலைவர் அல்லது துணைத் தலைவர் ஓர் உறுப்பினராக இருப்பது அற்றுப்போன தேதியிலிருந்து தமது பதவியிலிருப்பது அற்றுப்போனதாகக் கொள்ளப்படுவார்.

பதவிவிலகல்.

6. (1) எந்தவொரு உறுப்பினரும் அல்லது துணைத் தலைவரும், தலைவருக்கு முகவரியிட்டு எழுத்துப்பூர்வமான அறிவிப்பு கொடுப்பதன் மூலம் தனது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம் மற்றும் தலைவரால் அத்தகைய அறிவிப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(2) தலைவர், மாநில மன்றத்திற்கு முப்பது நாள் அறிவிப்பு ஒன்றை, எழுத்துப்பூர்வமாக கொடுப்பதன் மூலம் தனது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம் மற்றும் பதவிவிலகலானது மாநில மன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து அல்லது அறிவிப்பு பெற்றுக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாள்கள் முடிவடைவதன் பேரில், இதில் எது முந்தையதோ அந்தத் தேதியிலிருந்து பதவிவிலகல் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தற்செயல் காலிப் பணியிடங்களை நிரப்புதல்.

7. (1) தலைவர் மற்றும் துணைத் தலைவர் உள்ளடங்கலாக, தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமனஞ்செய்யப்பட்ட உறுப்பினர் எவரின் இறப்பு, தகுதியின்மை, பதவிவிலகல் அல்லது பிறவாறாக ஏற்படும் தற்செயல் காலிப்பணியிடம் எதுவும், 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (e), (f) மற்றும் (g) கூறுகள் மற்றும் 4 ஆம் பிரிவின் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளுக்கு இணங்க நிரப்பப்படுதல் வேண்டும்.

(2) ஒரு தற்செயல் காலிப் பணியிடத்தினை நிரப்புவதற்கு அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமனஞ் செய்யப்பட்ட உறுப்பினர், யாருடைய இடத்திற்கு அவர் தேர்ந்தெடுக்கப்படுகிறாரோ அல்லது நியமனஞ்செய்யப்படுகிறாரோ, அந்த உறுப்பினரின் எஞ்சிய காலத்திற்கு பதவி வகித்தல் வேண்டும்.

உறுப்பினராவதற்கான தகுதியின்மை.

8. எந்தவொரு நபரும்,அவர்,——

(a) விடுவிப்புப்பெறாத நொடிப்பு நிலையராக இருப்பின்;

(b) ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்கிய ஒரு குற்றத்திற்கு தண்டனைத் தீர்ப்பு விதிக்கப்பட்டிருப்பின்;

(c) ஒரு தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் மனச்சீர்கேடுடையவர் என விளம்புகை செய்யப்பட்டிருப்பின்; அல்லது

(d) 20 ஆம் பிரிவின் கீழ் அவரது உரிமம் இரத்து அல்லது இடைநிறுத்தம் செய்யப்பட்டிருப்பின்,

ஓர் உறுப்பினராக நியமனஞ்செய்யப்படுவதற்கோ அல்லது தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ தகுதியுடையவர் ஆகார்.

அங்கத்தினர் பதவி காலியிட மாக கருதப்படுதல்.

9. (1) தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமனஞ்செய்யப்பட்ட ஓர் உறுப்பினர்,——

(a) தொடர்ச்சியாக மூன்று மாநில மன்றத்தின் கூட்டங்களுக்கு அவர் வாராதிருத்தலின் பேரில்;

(b) தொடர்ச்சியாக ஆறு மாதங்கள் காலஅளவுக்கும் மேற்பட்டு இந்தியாவில் அவர் இல்லாதிருத்தலின் பேரில்;

(c) 20 ஆம் பிரிவின்கீழ் அவரது உரிமம் இரத்து செய்யப்பட்டதன் பேரில்; அல்லது

(d) 8 ஆம் பிரிவின் (a) முதல் (c) கூறுகளின்கீழ் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது நியமனம் செய்யப்படுவதற்கு தகுதியிழக்கப்பட்டதன் பேரில்,

அவரது பதவியிடம் காலி செய்ததாக கருதப்படுதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது பிறவாறாக, ஏதேனும் காலியிடம் ஏற்படுவதன் பேரில், பதிவாளர் உடனடியாக அதனை அரசுக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும்.

மாநில மன்றத்தின் அதிகாரங்கள்.

10. மாநில மன்றமானது,——

(a) உரிமம் வழங்குதல் அல்லது புதுப்பித்தல், ஓர் உரிமத்தினை மாற்றுதல், கூடுதல் தகுதிகளை பதிவு செய்தலுக்கும் அதனால் வழங்கப்படும் பிற சேவைகள் எதற்குமான செலுத்தத்தக்க கட்டணத்தை குறித்துரைத்தல்;

(b) பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தொழிலாற்றுநர்களுக்கு எதிராக தொழில்முறை மற்றும் நன்னெறி ஒழுக்கக்கேடு அல்லது மருத்துவ கவனமின்மை ஆகிய புகார்களை ஆராய்தல் மற்றும் விசாரித்தல்;

(c) பதிவு செய்யப்பட்ட மருத்துவ தொழிலாற்றுநர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், தேசிய மருத்துவ ஆணையத்தினால் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளுக்கு இணங்கி மெய்ப்பிக்கப்பட்ட ஒழுக்கக்கேடு அல்லது கவனமின்மைக்காக அவர்களுக்கு தண்டத்தொகைகளை விதித்தல்;

(d) பதிவு செய்யப்பட்ட மருத்துவ தொழிலாற்றுநர்களின் உரிமத்தை இடைநிறுத்தல் அல்லது இரத்து செய்தல்;

(e) மாநிலத்திலுள்ள தகுதியற்ற அல்லது பதிவு செய்யப்படாத மருத்துவத் தொழிலாற்றுநர்களின் மருத்துவத் தொழில் புரிதலில் ஏற்பட்ட புகார்களை ஆராய்தல் மற்றும் விசாரித்தல் மற்றும் அத்தகைய நபர்களின் மீது வழக்கு தொடர்வு செய்ய குற்ற புகார் செய்வதன் மூலம் அத்தகைய நடைமுறைகளை கட்டுப்பாடு செய்ய தாமே முன்வந்து நடவடிக்கை எடுத்தல்;

(f) அதன் செயற்பணிகள் எதையும் செயல்படுத்த குழுக்களை அமைத்தல்; மற்றும்

(g) அரசால், அவ்வப்போது அதற்கு வழங்கப்படலாகும் அத்தகைய பிற அதிகாரங்களைச் செயற்படுத்துதல்,

போன்ற அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**11.** மாநில மன்றம், பின்வரும் செயற்பணிகளை புரிதல் வேண்டும். அவையாவன:—— மாநில மன்றத்தின் செயற்பணிகள்.

(a) மாநிலத்தில் உள்ள மருத்துவத் தொழிலாற்றுநர்களைப் பதிவு செய்தல்;

(b) பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தொழிலாற்றுநர்களுக்கு உரிமம் வழங்குதல் மற்றும் அதனைப் புதுப்பித்தல்;

(c) பிற மாநிலங்களுக்கு அல்லது ஒன்றியத்து ஆட்சி நிலவரைகளுக்கு உரிமத்தினை மாற்றம் செய்வதற்கான தடையின்மைச் சான்றிதழ் வழங்குதல்;

(d) பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தொழிலாற்றுநர்களின் மாநிலப் பதிவேட்டினைப் பராமரித்தல்;

(e) கூடுதல் மருத்துவ தகுதிகளை பதிவு செய்தல்;

மையச் சட்டம் 30/2019. (f) 2019 ஆம் ஆண்டு தேசிய மருத்துவ ஆணையத்தின்கீழ் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளுக்கு இணங்கி பதிவுசெய்யப்பட்ட மருத்துவத் தொழிலாற்றுநர்களுக்கிடையே தொழில்முறை நடத்தையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மருத்துவ நன்னெறிகளை வளர்த்தல்;

(g) மாநிலத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தொழிலாற்றுநர்களுக்கு தொடர்ச்சியான மருத்துவக் கல்வி அல்லது தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாட்டுத் திட்டங்களை ஊக்குவித்தல் மற்றும் அவர்கள் அத்திட்டங்களில் கலந்து கொண்டு அவர்களின் தொழில்முறை தகுதிறன் மற்றும் அறிவினை இன்றைய நிலைக்கேற்ப இருப்பதற்கு உறுதி செய்தல்;

(h) மருத்துவத் தொழில் புரிதல் தொடர்பாக தொழில்முறை மற்றும் நன்னெறி நடத்தை மீது பதிவுசெய்யப்பட்ட மருத்துவத் தொழிலாற்றுநர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்குதல்;

(i) மாநிலத்தில் எந்தவொரு தகுதியற்ற நபரும் அல்லது பதிவு செய்யப்படாத மருத்துவத் தொழிலாற்றுநரும் மருத்துவத் தொழில் செய்யாமல் இருப்பதை உறுதி செய்தல்;

(j) பெருவாரியான பொது மக்களின் பொது உடல்நலம் மற்றும் நல்வாழ்க்கை மேம்படுத்துவதற்கு பிற மருத்துவக் குழுமங்கள், நிறுவனங்கள் அல்லது அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து பங்காற்றுதல்; மற்றும்

(k) அவ்வப்போது அரசால் ஒப்படைக்கப்படலாகும் அத்தகைய பிற செயற்பணிகளை நிறைவேற்றுதல்.

செயற்குழு.

**12.** (1) மாநில மன்றத்தின் செயற்குழுவானது, தலைமையாளர் மற்றும் துணைத் தலைமையாளர் உள்ளடங்கலாக மாநில மன்றத்தின் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

(2) மாநில மன்றத்தின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் செயற்குழுவின் தலைமையாளர் மற்றும் துணைத் தலைமையாளர் ஆவர்:

(3) செயற்குழுவின் பிற உறுப்பினர்கள், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் அவர்களுக்கிடையேயிருந்து 3 ஆம் பிரிவின் (2) உட்பிரிவின் (f) மற்றும் (g) கூறுகளின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமனஞ் செய்யப்பட்ட உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(4) (a) செயற்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் தேர்தல் அல்லது மறுதேர்தல் தேதியிலிருந்து இரண்டு ஆண்டு காலத்திற்கு அல்லது மாநில மன்றத்தின் ஓர் உறுப்பினராக இருப்பது அற்றுப்போகும் வரையில், இதில் எது முந்தையதோ அதுவரையில் அவர் பதவி வகித்தல் வேண்டும்.

(b) செயற்குழு உறுப்பினர் பதவியில் தற்செயல் காலியிடம் எதுவும் எழுமாயின், அத்தகைய காலியிடம் (3) ஆம் உட்பிரிவில் வகைசெய்யப்பட்டுள்ள முறையில் உடனடியாக நிரப்பப்படுதல் வேண்டும் மற்றும் ஒரு தற்செயல் காலிப் பணியிடத்தினை நிரப்ப அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் யாருடைய இடத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகிறாரோ, அந்த உறுப்பினரின் எஞ்சிய காலத்திற்கு பதவி வகித்தல் வேண்டும்.

(5) மாநில மன்றமானது, அது பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒழுங்குமுறை விதிகளை உருவாக்கும் அதிகாரத்தைத் தவிர, அதன் அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள் எதனையும் செயற்குழுவிற்கு ஒப்படைவு செய்யலாம்.

(6) செயற்குழுவின் கூட்டத்தில் குறைந்தது மூன்று செயற்குழு உறுப்பினர்களாவது கலந்து கொண்டாலன்றி, அலுவல் எதுவும் நடத்தப்பெறுதல் கூடாது.

(7) செயற்குழுவின் கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொருட்பாடு எதுவும், வருகை தந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மையினரால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். சமமான வாக்குகளின் நேர்வில், தலைமையாளர் அல்லது அவரது வாராமையில் துணைத் தலைமையாளர் அல்லது கூட்டத்திற்கு தலைமையேற்றிருக்கும் செயற்குழுவின் பிற உறுப்பினர் எவரும் அறுதிசெய் வாக்கு ஒன்றை செலுத்துதல் வேண்டும்.

பதிவாளர்.

**13.** (1) மாநில மன்றமானது, அரசின் முன் ஒப்புதலுடன், மாநில மன்றத்தின் செயலாளராக செயல்படும் பதிவாளர் ஒருவரை பதவியமர்த்துதல் வேண்டும்.

(2) பதிவாளர், மூன்று ஆண்டுகள் கால அளவிற்குப் பதவியில் இருத்தல் வேண்டும். மேலும், மூன்று ஆண்டுகள் கால அளவிற்கு மறுபதவியமர்த்தத்திற்கு தகுதியுடையவராவார்:

வரம்புரையாக, பதிவாளராக பதவியமர்த்தப்பட்ட நபர் எவரும், அறுபது வயது நிறைவெய்திய பின்பு பதவியில் இருத்தல் கூடாது.

(3) பதிவாளரின் தகுதிகள், ஊதியம், படித்தொகைகள் மற்றும் பிற பணி நிபந்தனைகளானது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகையவாறு இருத்தல் வேண்டும்.

(4) விடுப்பு அல்லது ஏதேனும் பிற காரணத்தினால், பதிவாளரின் பதவியில் தற்காலிக காலியிடம் ஏதேனும் ஏற்படுமாயின், மாநில மன்றமானது, அரசின் முன் ஒப்புதலுடன் மற்றொரு நபரை பதிவாளராக செயல்படுவதற்கு அதிகாரம் அளிக்கலாம்:

வரம்புரையாக, அத்தகைய தற்காலிக காலிப் பணியிடத்தின் கால அளவு முப்பது நாள்களுக்கு மிகாத போது, செயற்குழு தாமே அத்தகைய அதிகாரமளிப்புச் செய்து உடனடியாக அரசிற்கு அறிக்கையளித்தல் வேண்டும்.

பதிவாளரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்.

14. பதிவாளர்—

(a) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவம் மற்றும் முறையில் மாநில பதிவேட்டைப் பராமரித்தல் வேண்டும்;

(b) மாநில மன்றத்தின் கூட்டத்தினை ஏற்பாடு செய்து, அவற்றின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் வருகை புரிந்து, அக்கூட்டத்தின் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளைத் தயாரித்தல் வேண்டும்;

(c) அவற்றின் ஆவணங்கள் மற்றும் பதிவுருக்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு உள்ளடங்கலாக, மாநில மன்றம் மற்றும் செயற்குழுவின் நிருவாக விவகாரங்களை மேலாண்மை செய்வதற்கு பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும்;

(d) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவம் மற்றும் முறையில் மாநில மன்றத்தின் கணக்குகளைப் பேணுதல் வேண்டும்;

(e) மாநில மன்றத்தின் சொத்துக்களை மேலாண்மை செய்தல் வேண்டும்;

(f) மாநில மன்றத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது மேற்பார்வை கட்டுப்பாடு கொண்டிருத்தல் வேண்டும்.;

(g) மாநில மன்றம் மற்றும் செயற்குழுவில் காலிப் பணியிடங்களை நிரப்ப தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்;

(h) விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளின்கீழ் அறிவிப்புகள் வெளியிடுதல் உள்ளடங்கலாக, மாநில மன்றத்தின் சார்பில் கடிதத் தொடர்புகளை மேற்கொள்ளுதல் வேண்டும்;

(i) மருத்துவ பல்கலைக்கழகங்கள், மருத்துவக் கல்லூரிகள் அல்லது நிறுவனங்கள் மற்றும் பிற அரசு துறைகள் மற்றும் முகமைகளுடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்;

(j) அரசு, பிற அமைப்புகள் மற்றும் பொது மக்களுடனான கூட்டங்களில் மாநில மன்றத்தில் பிரதிநிதியாக இருத்தல் வேண்டும்; மற்றும்

(k) அவ்வப்போது, தலைவரால் அவருக்கு ஒதுக்கப்படலாகும் அத்தகைய பிற பணிகளைப்புரிதல் வேண்டும்.

மாநில மன்றத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்.

**15.** (1) மாநில மன்றம், அதன் செயற்பணிகளைத் திறம்பட புரிவதற்கு, ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய எண்ணிக்கையிலான அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை பணியமர்த்தம் செய்யலாம்.

(2) மாநில மன்றத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஆளெடுப்பு, பணிநிபந்தனைகள், ஊதியம் மற்றும் படித்தொகைகள், ஒழுங்கு மற்றும் நடத்தை ஆகியன ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம்-III.

## மருத்துவத் தொழிலாற்றுநர்களின் பதிவு.

மாநிலப் பதிவேடு.

**16.** மாநில மன்றம், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தொழிலாற்றுநர்களின் பெயர்களைக் கொண்ட ஒரு மாநிலப் பதிவேட்டை பேணி வருதல் வேண்டும்.

பதிவிற்கான தகுதி.

**17.** (1) 2019 ஆம் ஆண்டு தேசிய மருத்துவ ஆணையச் சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மருத்துவ தகுதியைக் கொண்டுள்ள மற்றும் மாநிலத்தில் மருத்துவத் தொழிலை நிறுவுவதற்கு அல்லது மாநிலத்திலுள்ள எந்தவொரு மருத்துவ நிறுவனம் அல்லது பணியமைப்பில் மருத்துவ தொழிலாற்றுநராக பணிபுரியக் கருதுகிற எந்தவொரு நபரும், இந்தச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு மருத்துவ தொழிலாற்றுநராக மாநிலப் பதிவேட்டில் பெயர் பதிவு செய்வதற்கு தகுதியுடையவர் ஆவார்.

மையச் சட்டம் 30/2019.

(2) நபரெவரும்,——

(a) அவர் விடுப்பு செய்யப்படாத நொடிப்பு நிலையராக இருக்கிறாரெனில்;

(b) அவர் மனச்சீர்கேடு உடைய மற்றும் தகுதி வாய்ந்த ஒரு நீதிமன்றத்தால் அவ்வாறு விளம்புகை செய்யப்பட்டிருக்கிறாரெனில்; அல்லது

(c) ஏதேனும் பிற மாநிலத்தின் அல்லது ஒன்றியத்து ஆட்சி நிலவரையின் மருத்துவ மன்றத்தால் வழங்கப்பட்ட அவரது உரிமம், தொழில்சார் மற்றும் நன்னெறி நடத்தை மீறலுக்காக இரத்து அல்லது இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது எனில்; அல்லது

(d) ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்கிய ஒரு குற்றத்திற்கு தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பாராயின், இந்தச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுவதற்கு தகுதியுடையவர் ஆகார்.

பதிவு செய்தல்.

**18.** (1) 17 ஆம் பிரிவின்கீழ் ஒரு மருத்துவத் தொழிலாற்றுநராக பெயர் பதிவு செய்யப்படுவதற்கு தகுதியுடைய நபர் ஒவ்வொருவரும், ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்துடன் சேர்த்து, பதிவு செய்வதற்காக, மாநில மன்றத்திடம் விண்ணப்பிக்கலாம் மற்றும் மாநில மன்றமானது, அவ்வாறு பதிவு செய்யப்படுவதற்கு அவர் தகுதியுடையவரென மனநிறைவு அடைவதன் பேரில், விண்ணப்பம் பெற்ற தேதியிலிருந்து முப்பது நாள்களுக்குள், மாநிலப் பதிவேட்டில் அவரது பெயரைப் பதிவு செய்து மாநிலத்தில் மருத்துவ தொழிலாற்றுவதற்கான உரிமம் ஒன்றை அளித்தலும் வேண்டும். அந்த உரிமம், ஐந்து ஆண்டு கால அளவிற்கு செல்லத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

(2) கூடுதல் மருத்துவத் தகுதி எதனையும் பதிவு செய்யக் கருதும் பதிவு செய்யப்பட்ட மருத்துவ தொழிலாற்றுநர் ஒவ்வொருவரும், ஒழுங்குமுறை விதிகளில் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்துடன் சேர்த்து அத்தகைய கூடுதல் தகுதிக்கான அசல் சான்றிதழுடன் சேர்த்து வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் மாநில மன்றத்திடம் விண்ணப்பித்தல் வேண்டும். மாநில மன்றமானது, மனநிறைவு அடையுமாயின், அத்தகைய கூடுதல் மருத்துவத் தகுதி தொடர்பாக தேவையான உள்ளீடுகளை மாநிலப் பதிவேட்டில் செய்தல் வேண்டும்.

(3) பதிவு செய்யப்பட்ட மருத்துவ தொழிலாற்றுநர் ஒவ்வொருவரும், உரிமத்தை புதுப்பிப்பதற்காக, ஒழுங்குமுறை விதிகளில் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்துடன் சேர்த்து உரிமம் முடிவுறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே மாநில மன்றத்திடம் விண்ணப்பித்தல் வேண்டும். மாநில மன்றமானது, மருத்துவக் கல்வித் திட்டங்களில் தொடர்ந்திருத்தலின் ஒரு பகுதியாக பதிவு செய்யப்பட்ட மருத்துவ தொழிலாற்றுநர் தொழில் முறை கூட்டங்களில் குறைந்தது முப்பது மணி நேரம் கலந்து கொண்டிருந்தார் என்பதை உறுதி செய்த பின்பு, உரிமத்தை ஐந்தாண்டு கால அளவிற்கு புதுப்பித்தல் வேண்டும் மற்றும் அத்தகைய புதுப்பித்தல் தொடர்பாக தேவையான உள்ளீடுகளை மாநிலப் பதிவேட்டில் செய்தல் வேண்டும்:

வரம்புரையாக, உரிமத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் எதுவும், உரிமத்தின் செல்லுந்தன்மை முடிவுறுவற்கு முன்பு பெறப்படாதிருப்பின், மாநிலப் பதிவேட்டில் மருத்துவ தொழிலாற்றுநரின் பெயரானது செயற்படாதிருப்பதாக குறிப்பிடப்படுதல் வேண்டும் மற்றும் கூறப்பட்ட நபரானவர், உரிமத்தின் செல்லுந்தன்மை முடிவுற்ற பின்பு மருத்துவத் தொழிலாற்ற உரிமையற்றவர் ஆவார்.

(4) மருத்துவத் தொழிலாற்றுநர் ஒருவர், பிற மாநிலம் அல்லது ஒன்றிய ஆட்சி நிலவரை எதனின் மருத்துவ மன்றத்தில் பதிவு செய்யப்பட்டு, இந்த மாநிலத்திற்கு அத்தகைய பதிவினை மாற்றக் கருதுவாராயின், அத்தகைய மருத்துவத் தொழிலாற்றுநர், தடையின்மைச் சான்றிதழுடன், ஒழுங்குமுறை விதிகளில் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மாநில மன்றத்திடம் விண்ணப்பித்தல் வேண்டும். மாநில மன்றமானது, ஒழுங்குமுறை விதிகளில் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணம் செலுத்தப்பட்டதன் பேரில் மாநிலப் பதிவேட்டில் அத்தகைய விண்ணப்பதாரரின் பெயரைப் பதிவு செய்யலாம்.

தற்காலிகமாக பதிவு செய்தல்.

19. (1) அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தகுதியை அளிப்பதற்கு பல்கலைக்கழகம் அல்லது இந்திய மருத்துவ நிறுவனம் எதிலும் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற நபர் ஒருவர், மற்றும் அயல்நாட்டு மருத்துவத் தகுதியைப் பெற்று தேசிய மருத்துவ ஆணையத்தால் செய்யப்பட்ட ஒழுங்குறை விதிகளின்கீழ் பதிவு செய்யத் தகுதி பெற்ற நபர் ஒருவர், ஒழுங்குமுறை விதிகளில் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்துடன் சேர்த்து அத்தகைய படிவத்திலும் முறையிலும் தற்காலிகமான பதிவிற்காக மாநில மன்றத்திடம் விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பத்தைப் பெற்றதன் பேரில், மாநில மன்றமானது, மாநிலத்தில் உள்ள மருத்துவமனைகள் அல்லது மருத்துவ நிறுவனங்களில் கட்டாய சுழற்சிமுறை மருத்துவ தொழில்முறைக் கற்றலில் ஈடுபட அவரை இயல்விப்பதற்கு மாநிலப் பதிவேட்டில் விண்ணப்பதாரரின் பெயரை தற்காலிகமாக பதிவு செய்யலாம்.

உரிமத்தை இடைநிறுத்தம் செய்தல் அல்லது இரத்து செய்தல்.

20. (1) பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தொழிலாற்றுநர் ஒருவர், 17–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவின்கீழ், தகுதிக்கேடுற்றவர் ஆகிறாரெனில் அல்லது மருத்துவத் தொழிலாற்றுதலில் தொழில்முறை மற்றும் நன்னெறி நடத்தை தொடர்பான ஒழுங்குமுறை விதிகள் எதனையும் மீறுகிறாரெனில், மாநில மன்றமானது அவருடைய உரிமத்தை இடைநிறுத்தம் செய்யலாம். அதன் பின்பு, விசாரணை நடத்துவதன் பேரில், கேட்பதற்கான தகுவான வாய்ப்பு வழங்கிய பின்னர், மாநில மன்றமானது, அவரது உரிமத்தை இரத்து செய்யலாம், மற்றும் எழுத்துப்பூர்வமாக பதிவு செய்ய வேண்டிய காரணங்களுக்காக மாநிலப் பதிவேட்டிலிருந்து அவரது பெயரினை நீக்கலாம்.

(2) மாநிலப் பதிவேட்டில் அவரைப் பதிவு செய்வதற்கான தகுதிக்கேட்டினை ஈர்க்கிற, பொய்க்கூற்று செய்வதன் மூலமோ அல்லது ஏதேனும் பொருண்மை அல்லது ஆவணத்தை மறைப்பதன் மூலமோ உரிமத்தை அவர் பெற்றிருப்பதாக கண்டறியப்படுமாயின், கேட்பதற்கான வாய்ப்பு ஒன்று வழங்கிய பின்பு, பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தொழிலாற்றுநர் ஒருவரின் உரிமத்தை எந்நேரத்திலும், இரத்து செய்ய மன்றத்திற்கு உரிமை உள்ளது.

(3) (2)–ஆம் உட்பிரிவின்கீழ், உரிமம் ரத்து செய்யப்பட்ட ஒரு மருத்துவ தொழிலாற்றுநர், உடனடியாக தனது உரிமத்தை மாநில மன்றத்திடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(4) பதிவு செய்யப்பட்ட மருத்துவ தொழிலாற்றுநர் ஒருவர், பின்வரும் காரணங்கள் எதற்காகவும், ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில், தனது உரிமத்தை இணைத்து, தனது உரிமத்தை இரத்து செய்வதற்காக மாநில மன்றத்திடம் விண்ணப்பிக்கலாம், அவையாவன:–

(a) மருத்துவத் தொழில் புரிதலிலிருந்து ஓய்வு பெறுதல்;

(b) மருத்துவத் தொழில் புரிதல் தவிர வேறு ஈடுபாடு அல்லது வாழ்க்கைத் தொழில் மேற்கொள்ள கருதுதல்; அல்லது

(c) மருத்துவத் தொழில் புரிதலிலிருந்து விலக அவசியமாகும் பிற காரணம் எதற்காகவும்:

வரம்புரையாக, பதிவு செய்யப்பட்ட மருத்துவ தொழிலாற்றுநருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எதுவும், நிலுவையில் இருப்பின் அல்லது கருதப்படுமாயின், மாநில மன்றம், அத்தகைய விண்ணப்பம் எதையும் அனுமதிக்கப்படுதல் ஆகாது.

(5) இந்தப் பிரிவின்கீழ் மாநில மன்றத்தால் இரத்து செய்யப்படும் உரிமம் ஒவ்வொன்றும், ***தமிழ்நாடு அரசிதழில்*** பதிவாளரால் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய மருத்துவத் தொழிலாற்றுநரின் பெயரானது, மாநிலப் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும்.

(6) (4)–ஆம் உட்பிரிவின்கீழ் ஒரு மருத்துவத் தொழிலாற்றுநரின் உரிமம் இரத்து செய்யப்பட்டிருக்கையில், அவர் மீண்டும் தொழில் செய்ய கருதுவாராயின், பதிவு செய்வதற்கும் உரிமம் பெறுவதற்கும் அவர் பிறவாறாக தகுதிபெற்றிருப்பின், மாநில மன்றத்திடம் தம்மை மறுபதிவு செய்து புதிய உரிமத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அந்த நேர்வில், 18–ஆம் பிரிவில் அடங்கியுள்ள வகைமுறைகள், தேவையான மாறுதல்களுடன் பொருந்துதல் வேண்டும்.

தொழில்முறை மற்றும் நன்னெறி நடத்தை.

21. (1) பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தொழிலாற்றுநர் ஒவ்வொருவரும், 2019 ஆம் ஆண்டு தேசிய மருத்துவ ஆணையச் சட்டத்தின்கீழ் அவ்வப்போது செய்யப்பட்ட ஒழுங்குமுறைவிதிகளில் குறித்துரைக்கப்படலாகும் தொழில்முறை மற்றும் நன்னெறி நடத்தைக்கு கட்டுப்படுதல் வேண்டும். மையச் சட்டம் 30/2019

.

(2) மாநில மன்றமானது, (1)—ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தொழில்முறை மற்றும் நன்னெறி நடத்தையின் மீறுகைக்காக, பதிவு செய்யப்பட்ட மருத்துவ தொழிலாற்றுநர் எவருக்கும் எதிராக, பொருத்தமெனக் கருதலாகும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பின்வரும் தண்டனைகளை விதிக்கலாம், அவையாவன:—

(a) கண்டனம்;

(b) அபராதம்;

(c) தொடர்ச்சியான மருத்துவக் கல்வி, பயிற்சி அல்லது கலந்தாய்வை மேற்கொள்வதற்கு வேண்டுறுத்துதல்;

(d) சமுதாயப் பணி அல்லது பிற வடிவிலான சமூகப் பணி எதனையும் மேற்கொள்ளுதல்;

(e) மருத்துவத் தொழில் புரிதலைப் பொறுத்து, கட்டுப்பாடு அல்லது வரையறை எதனுடனும் இணங்குதல்;

(f) உரிமத்தை இடைநிறுத்தம் செய்தல்; அல்லது

(g) உரிமத்தை இரத்து செய்தல் மற்றும் மாநிலப் பதிவேட்டிலிருந்து பெயரை நீக்குதல்.

வரம்புரையாக, முன்மொழியப்பட்ட தண்டனைக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தொழிலாற்றுநருக்கு எழுத்துப்பூர்வமாக விளக்கவுரை செய்வதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்பட்டாலன்றி, அத்தகைய ஆணை எதுவும் செய்யப்படுதல் ஆகாது.

22. 18 முதல் 21 வரையிலான பிரிவுகளின்கீழ் மாநில மன்றத்தின் ஆணையினால் பாதிக்கப்பட்ட நபரெவரும், ஆணையைப் பெற்ற தேதியிலிருந்து முப்பது நாள்களுக்குள் நன்னெறிகள் மற்றும் மருத்துவப் பதிவு வாரியத்திடம் மேல்முறையீடு அளிக்கலாம். மேல் முறையீடு.

23. 22 ஆம் பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட மேல்முறையீட்டில் நன்னெறிகள் மற்றும் மருத்துவப் பதிவு வாரியத்தின் ஆணையினால் பாதிக்கப்பட்ட நபரெவரும், ஆணை கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து அறுபது நாள்களுக்குள், தேசிய மருத்துவ ஆணையத்திடம் இரண்டாம் மேல்முறையீடு அளிக்கலாம். இரண்டாம் மேல்முறையீடு.

24. பதிவாளர், இந்தச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து மருத்துவத் தொழிலாற்றுநர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்றை, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்திலும் முறையிலும், ஆண்டுதோறும் அச்சிட்டு வெளியிடச் செய்தல் வேண்டும். பெயர் பட்டியலானது, மாநில மன்றத்தின் அலுவலக இணையதளத்திலும் வெளியிடப்படுதல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தொழிலாற்று—நர்களின் பெயர் பட்டியலை வெளியிடுதல்.

மையச் சட்டம் 30/2019. 25. மாநில மன்றம், இந்த அத்தியாயத்தின்கீழ் அதிகாரங்களைச் செலுத்துகையிலும், செயற்பணிகளை ஆற்றுகையிலும், 2019 ஆம் ஆண்டு தேசிய மருத்துவ ஆணையச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளைப் பின்பற்றுதல் வேண்டும். பின்பற்றபட வேண்டிய நெறிமுறை.

## அத்தியாயம்-IV.

## மாநில மன்றத்தின் கூட்டங்கள்.

26. (1) மாநில மன்றமானது, தலைவர் தீர்மானிக்கும் அத்தகைய தேதி, நேரம் மற்றும் இடத்தில் குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடுதல் வேண்டும். மாநில மன்றத்தின் கூட்டங்கள்.

(2) மாநில மன்றத்தின் கூட்டங்களானது, ஒழுங்குமுறை விதிகளில் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் கூட்டப்படுதலும், நடத்தப்படுதலும் வேண்டும்.

(3) தலைவர், மாநில மன்றத்தின் கூட்டங்களுக்கு தலைமை வகித்தல் வேண்டும். தலைவர் வாராதிருப்பாராயின், துணைத் தலைவர் கூட்டத்திற்கு தலைமை வகித்தல் வேண்டும். இருவரும் வாராதிருக்கும் போது, கூட்டத்திற்கு வந்திருக்கும் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஒருவர் கூட்டத்திற்கு தலைமை வகித்தல் வேண்டும்.

(4) மாநில மன்றத்தின் கூட்டம் ஒன்றில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொருட்பாடு எதுவும், வருகை தந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மையினால் முடிவு செய்யப்படுதல் வேண்டும் மற்றும் சமமான வாக்குகளின் நேர்வில், கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் நபர், அறுதிசெய் வாக்கு ஒன்றை செலுத்துதல் வேண்டும்.

(5) மாநில மன்றத்தின் பத்து உறுப்பினர்கள், மன்றத்தின் கூட்டத்திற்கு குறைவெண்ணாக அமைவர்.

(6) தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், மாநில மன்றத்தின் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு, ஒழுங்குமுறை விதிகளில் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய அமர்வுக் கட்டணங்கள் மற்றும் படித்தொகைகள் பெற உரிமையுடையவர்கள் ஆவார்கள்.

காலியிடங்கள் முதலியவை, மாநில மன்றத்தின் நடவடிக்கைகளை செல்லாததாக்கு–வதில்லை.

27. (a) மாநில மன்றத்தின் கட்டமைப்பில் காலியிடம் எதனின் அல்லது குறைபாடு எதனின்; அல்லது

(b) தலைவர், துணைத் தலைவர் அல்லது பிற உறுப்பினர் எவரையும் தேர்வு செய்யப்படுவதில் அல்லது நியமனஞ் செய்யப்படுவதில் உள்ள குறைபாடு எதனின்; அல்லது

(c) வழக்கின் தகுதிப்பாடுகளை பாதிக்காத வகையில், மாநில மன்றத்தில் பின்பற்றப்படும் நெறிமுறையில் ஒழுங்கின்மை எதனின்,

காரணத்தினால் மட்டுமே மாநில மன்றத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் சொல்லாதது ஆவதில்லை.

## அத்தியாயம்-V.

## நிதி, கணக்குகள் மற்றும் தணிக்கை.

மாநில மன்றத்தின் நிதியங்கள்.

28. (1) மாநில மன்றமானது, தமிழ்நாடு மாநில மருத்துவ மன்ற நிதியம் எனப் பெயரிடப்பட்ட அதனால் நிருவகிக்கப்படும் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன, நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

(a) மன்றத்தால் பெறப்படும் அனைத்து கட்டணங்கள் செலவினங்கள் மற்றும் அபராதத்தொகை;

(b) அரசிடமிருந்து அல்லது வேறு பிற நபர்களிடமிருந்து மாநில மன்றத்தால் பெறப்பட்ட மானியம் அல்லது நன்கொடை எதுவும்; மற்றும்

(c) முதலீடுகள் அல்லது பிற மூலங்களிலிருந்து மாநில மன்றத்தினால் பெறப்பட்ட வருமானம் எதுவும்.

(3) பதிவாளர், மாநில மன்றத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் படித்தொகைகள் வழங்குவதற்கும், அதன் உறுப்பினர்களின் அமர்வுக் கட்டணங்கள் மற்றும் படித்தொகைள், உபகரணங்கள் மற்றும் ஊர்திகளின் கொள்முதல் மற்றும் பிற நிர்வாகச் செலவினங்கள் உள்ளடங்கலான அதன் செலவினங்களை செய்வதற்கும் இந்நிதி பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகள் மற்றும் தணிக்கை.

29. (1) மாநில மன்றத்தின் கணக்குகள், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும் அத்தகைய படிவத்திலும் பராமரித்து வரப்படுதல் வேண்டும். மாநில மன்றமானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும் கணக்குகளின் ஆண்டறிக்கையை தயாரித்தல் வேண்டும்.

(2) மாநில மன்றத்தின் கணக்குகள், அரசால் நியமிக்கப்படலாகும் தணிக்கையாளரால் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம்-VI.

### பல்வகை

தலைவர், துணைத்தலைவர் முதலானோர் அரசு ஊழியர்களாக கருதப்படுதல் வேண்டும்.

மையச் சட்டம் XLV/1860.

30. மாநில மன்றத்தின் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள், பதிவாளர், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்க செயல்படும் போது அல்லது செயல்பட எண்ணங்கொள்ளும் போது, இந்திய தண்டனை தொகுப்புச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பொருளின்படி அரசு ஊழியர்களாக கருதப்படுதல் வேண்டும்.

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

31. இந்தச் சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் செய்யப்படும் விதிகள் அல்லது ஒழுங்குமுறைவிதிகள் எதனையும் நல்லெண்ணத்தில் செய்த அல்லது செய்யக் கருதிய எதற்கும், மாநில மன்றம், தலைவர், துணைத் தலைவர், பிற உறுப்பினர்கள், பதிவாளர் அல்லது மாநில மன்றத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு எதிராக எந்தவொரு உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் தொடுக்கப்படுதல் கூடாது.

மாநில மன்றத்தின் மீது அரசின் கட்டுப்பாடு.

32. (1) இந்தச் சட்டத்தினால் அல்லது அதன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்கள் அல்லது செயற்பணிகள் எதையேனும் மாநில மன்றம் செலுத்த தவறிவிட்டது அல்லது மீறிவிட்டது அல்லது தவறாகப் பயன்படுத்திவிட்டது என்று எந்த நேரத்திலும் அரசுக்குத் தோன்றுகிறவிடத்து, மற்றும் அரசின் கருத்தில் அத்தகைய தவறுகை, மீறல் அல்லது தவறாகப் பயன்படுத்துதல் ஒரு கடுமையான தன்மை கொண்டது என்று தோன்றுமாயின், அரசு, குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள் அத்தகைய தவறுகை, மீறல் அல்லது தவறாகப் பயன்படுத்துதலை சரிசெய்யவோ அல்லது தவிர்க்கவோ மாநில மன்றத்திடம் கட்டளையிடலாம். மாநில மன்றம் அத்தகைய கட்டளை எதனையும் இணங்கத் தவறியிருப்பின், அரசு, மாநில மன்றத்தை கலைத்துக்கைகொள்ளலாம் மற்றும் ஒரு மருத்துவக் கல்லூரியின் தலைவர் படிநிலைக்கு குறையாத அரசு அலுவலர் ஒருவரை ஆறு மாதங்களுக்கும் மிகாத ஒரு காலஅளவுக்கு மாநில மன்றத்தின் அதிகாரங்களையும் செயற்பணிகளையும் ஆற்றுவதற்கு நியமனஞ்செய்யலாம்.

(2) அதன் பின்னர், அரசு, கூறப்பட்ட ஆறு மாத காலஅளவு காலாவதியாவதற்குள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கிணங்க, மாநில மன்றத்தை மறு அமைத்துருவாக்கம் செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

33. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்பாடு ஏதேனும் எழுமானால், அரசு அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாமல் அந்த இடர்பாட்டை நீக்குவதற்குத் தேவையான அல்லது உகந்ததாக அதற்குத் தோன்றுகின்ற, அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

வரம்புரையாக, இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டாண்டு காலஅளவு முடிவடைந்த பின்னர், அத்தகைய அறிவிக்கை எதுவும் வெளியிடப்படுதல் கூடாது.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

**34.** (1) அரசானது, அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது எதனையும் நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது ஒழுங்குமுறை விதிகள் மற்றும் வழங்கப்பட்ட அறிவிக்கைகள் அல்லது ஆணைகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின் கீழ், செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும் அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு அத்தகைய விதி அல்லது அறிவிக்கை ஏதொன்றிலும் மாறுதல் எதையும் பேரவை செய்யுமாயின் அல்லது அந்த விதி அல்லது அறிவிக்கை செய்யப்படுதலோ அல்லது பிறப்பிக்கப்படுதலோ ஆகாது என சட்டமன்றப் பேரவை முடிவுசெய்யுமாயின் அந்த விதி அல்லது அறிவிக்கையானது அதன் பின்னர் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப, நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும் அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் எதுவும் அந்த விதி அல்லது அறிவிக்கைபடி முன்னதாகச் செய்யப்பட்ட செயல் எதனின் செல்லுந்தன்மைக்கு குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

ஒழுங்குறுத்தும் விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

**35.** (1) மாநில மன்றமானது, அரசின் முன் ஒப்புதலுடன், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் மற்றும் அதன் விதிகளுக்கு முரணாக இல்லாத ஒழுங்குமுறை விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாக, மேற்கூறிய அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்கு குந்தகமின்றி,——

(a) மாநில மன்றம் மற்றும் செயற்குழுவின் கூட்டங்களை கூட்டுதல் மற்றும் நடத்துதல்;

(b) கூட்டத்தின் அலுவலை நடத்தும் முறை;

(c) மாநில மன்றத்தின் குழுக்களை அமைத்தல்;

(d) மாநில மன்றத்தின் கணக்குகளை பராமரித்தல் மற்றும் இருப்புநிலை ஏடுகளைத் தயார் செய்தல்;

(e) மாநில மன்றத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஆளெடுப்பு முறை, பணி நிபந்தனைகள், ஊதியம் மற்றும் படித்தொகைகள் ஒழுங்குக் கட்டுப்பாடு மற்றும் நடத்தை;

(f) உரிமத்தைப் பதிவு செய்தல், உரிமத்தைப் புதுப்பித்தல் மற்றும் உரிமத்தை மாற்றம் செய்தல் மற்றும் கூடுதல் தகுதிகளை பதிவு செய்தல் ஆகியவற்றுக்காக வசூலிக்கப்படும் கட்டணம்;

(g) மாநில மன்றத்தின் செயற்பணிகளை மேற்கொள்வதற்கான நடைமுறை; மற்றும்

(h) ஒழுங்குமுறை விதிகளில் வகைசெய்யப்பட வேண்டிய அல்லது வகை செய்யப்படலாகிற ஏதேனும் பிற பொருட்பாடு போன்ற அனைத்து அல்லது ஏதேனும் பொருட்கூறுகளுக்கு ஒழுங்குமுறை விதிகளைச் செய்யலாம்.

நீக்கறவு மற்றும் காப்புரை.

**36.** (1) 1914 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பதிவுச் சட்டம் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது. தமிழ்நாடு சட்டம் IV/1914.

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறிருப்பினும், அந்த நீக்கறவு,–

(a) இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு, அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட எதனையும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனையும் பாதிக்காது;

(b) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட சட்டத்தின்கீழ், ஈட்டப்பட்டுள்ள, சேர்ந்துள்ள அல்லது உள்ளான உரிமை, சிறப்புரிமை, கடமைப்பொறுப்பு அல்லது கடப்பாடு எதனையும் பாதிக்காது;

(c) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட சட்டத்திற்கு எதிராக செய்யப்பட்ட எந்தவொரு குற்றத்தையும் பொறுத்து உள்ளான எந்தவொரு அபராதம், தண்டத்தொகை, பறிமுதல் அல்லது தண்டனையையும் பாதிக்காது; அல்லது

(d) மேற்கூறப்பட்டவாறான அத்தகைய உரிமை, சிறப்புரிமை, கடப்பாடு, அபராதம், தண்டத்தொகை, பறிமுதல் அல்லது தண்டனை எதனையும் பொறுத்து விசாரணை, சட்ட நடவடிக்கை அல்லது தீர்வைப் பாதிக்காது; மற்றும் இந்தச் சட்டம் நீக்கறவு செய்யப்படாதது போன்று அத்தகைய விசாரணை, சட்ட நடவடிக்கை அல்லது தீர்வு தொடங்கப்படலாம், தொடரப்படலாம் அல்லது செயல்படுத்தப்படலாம்; மற்றும் அத்தகைய அபராதம், தண்டத்தொகை, பறிமுதல் அல்லது தண்டனை விதிக்கப்படலாம்;

தமிழ்நாடு சட்டம் IV/1914.

(3) 1914 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவ தொழிலாற்றுநர்கள் மற்றும் அந்தச் சட்டத்தின்கீழ் மருத்துவ பதிவேட்டில் பெயர்கள் காணப்படும் அனைத்து நபர்களும், இந்தச் சட்டத்தின் துவக்க தேதியன்று, இந்தச் சட்டத்தின்கீழ் பதிவு பெற்றதாகவும் மாநிலப் பதிவேட்டில் அவர்கள் பெயர்கள் உள்ளீடு செய்யப் பெற்றதாகவும் கொள்ளப்படுதல் வேண்டும்.

## நோக்கக் காரண விளக்கவுரை

தமிழ்நாடு மருத்துவ மன்றம் என்பது, 1914 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ பதிவுச் சட்டத்தின் வகைமுறைகளின்கீழ் (தமிழ்நாடு சட்டம் IV/1914) நிறுவப்பட்ட ஒரு சட்டமுறையான அமைப்பு ஆகும். கூறப்பட்ட சட்டம் சுதந்திரத்திற்கு முந்தையச் சட்டமாகும். மேலும், இது மொழிவாரியாக மாநிலங்களை மறுசீரமைக்கப்படுதவற்கு முன்பு, சென்னை மாகணமாக இருந்தபோது இயற்றப்பட்டது.

2. மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் நீதிப் பேராணை எண்கள். 28649/2022 மற்றும் 31454/2022 இல், 06.12.2022 தேதியிட்ட அதன் பொதுவான ஆணையில், கூறப்பட்ட இயற்றுச் சட்டம், அத்துடனான விதிகள் பழமையானவை மற்றும் அவை முழுமையாக புதுப்பிக்கப்பட வேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளது, மேலும் தேர்தல் நடவடிக்கைகளில் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவது குறித்து பரிசீலிக்குமாறு அரசிற்கு பணிப்புரை செய்துள்ளது.

3. மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் IV/1914 ஐ நீக்கறவு செய்யவும் அதற்கு மாற்றீடாக ஒரு புதிய சட்டத்தினை மீண்டும் இயற்றவும் அரசு முடிவு செய்துள்ளது.

4. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**மா. சுப்பிரமணியன்,**
*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்டமுன்வடிவின் 1(3), 3(1), 4(1) மற்றும் (2),12 (3), 13(3), 14,16,29, 32, 33, 34 மற்றும் 35 ஆகிய கூறுகள், அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, நேர்விற்கேற்ப, அறிவிக்கைகள் அல்லது பணிப்புரைகள் அல்லது ஆணைகளை வெளியிடுவதற்கு அல்லது விதிகளை அல்லது ஒழுங்குமுறை விதிகளை செய்வதற்கு, அரசுக்கும் தமிழ்நாடு மருத்துவ மன்றத்திற்கும் அதிகாரமளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி மற்றும் தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**மா. சுப்பிரமணியன்,**
*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2024 பிப்ரவரி 21.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2024

## 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பும், தொடக்கமும்

1. (1) இந்தச் சட்டம், 2024–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டம் என அழைக்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 22/1959.

26–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின் 26–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், (e) கூறில் ''அல்லது தொழுநோயினால் அல்லது பிற அருவெறுக்கத்தக்க நோய் எதனாலும் துன்புறுவாராயின்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

53–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 53–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவில், (f) கூறில் ''அல்லது தொழுநோயினால் அல்லது வேறு அருவெறுக்கத்தக்க நோயினால் துன்புறுவாராயின்'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

66–ஆம் பிரிவிற்கான நீக்குதல்.

4. முதன்மைச் சட்டத்தின் 66–ஆம் பிரிவில் (1)–ஆம் உட்பிரிவில், (j) கூறானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**நோக்க — காரண விளக்கவுரை.**

அருவெறுக்கத்தக்க நோயாக கருதப்படும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களைச் சமமாகப் பாவிக்க வேண்டும் என்றும், அத்தொழுநோய் தொடர்பான விதிகளை ரத்து செய்ய உச்ச நீதிமன்றத்தால் நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண் 767/2014 என்ற வழக்கில் 05.07.2018—அன்று மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டது.

2. தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959—ல், பிரிவு—26(1)(e)—இல் தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர் சமய நிறுவனங்களில் அறங்காவலர்களாக நியமிக்க தகுதியற்றவர் ஆவார், மேற்படி சட்டத்தின் பிரிவு—53(2)(f)—இல் தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர் அறங்காவலர்களாக நியமனம் செய்திருப்பின் தகுதியின்மை அடிப்படையில் அவர்களை இடைநீக்கம் செய்யலாம், நீக்கலாம் அல்லது விலக்கலாம். மேலும், பிரிவு—66(1)(j)—ன்படி தொழுநோயால் துன்புறுகிறவர்களுக்காகத் தனியே காப்பகங்களை நிறுவி பேணிவரலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

3. மாண்பமை உச்சநீதிமன்றம் 05.07.2018 அன்று பிறப்பித்த உத்தரவின்படி, அருவெறுக்கத்தக்க நோயாக கருதப்படும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களைச் சமமாகக் கருத, தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959—ல் உள்ள பிரிவுகள் 26(1)(e), 53(2)(f)—ல் திருத்தம் செய்யவும் மற்றும் 66—ஆம் பிரிவின், (1) ஆம் உட்பிரிவின் கூறு (j)—யை நீக்கறவு செய்யவும் அரசு முடிவு செய்துள்ளது.

4. மேற்கண்ட முடிவைச் செயல்படுத்த இம்மசோதா விழைகிறது.

**பி. கே. சேகர்பாபு,**
*இந்து சமயம் மற்றும்*
*அறநிலையத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை—9,
2024 பிப்ரவரி 21.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

**2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2024**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டு செயல் திட்டத்தை தயாரித்தல், ஒப்புதல் செய்தல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் மேலும் தமிழ்நாடு மாநிலத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டுக்கு அவர்களின் மக்கள்தொகை விகிதாச்சாரத்திற்கு குறையாத வகையில், நிதியை குறித்தொதுக்குவதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்கான ஒரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**அத்தியாயம் — I.**

**முன்னுரை.**

1. (1) இந்தச் சட்டம் 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல் திட்ட சட்டம் என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது தமிழ்நாடு மாநிலம் முழுவதும் அளாவி நிற்கும்.

(3) இது மாநில அரசு அறிவிக்கையின் மூலம் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,— பொருள் வரையறை.

(a) ''மேம்பாட்டு செயல் திட்டம்'' என்பது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக மாநில மன்றத்தால் ஒப்புதல் பெற்ற மேம்பாட்டு செயல் திட்டம் என்று பொருள்படும்;

(b) ''அதிகாரமளிக்கப்பட்ட குழு'' என்பது, 5-ஆம் பிரிவின் கீழ் அமைத்துருவாக்கப்பட்ட குழு என்று பொருள்படும்;

(c) ''விலக்களிக்கப்பட்ட செலவினம்'' என்பது ஊதியம், சம்பள உதவித்தொகை, ஓய்வூதியம், நிர்வாக செலவினம் மற்றும் மூலதன செலவினம், அசல் திருப்பிச் செலுத்துதல், வட்டி செலுத்துதல் மற்றும் அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் நிர்வாகத் தன்மையிலான ஏதேனும் பிற செலவினம், மேலும் ஒன்றிய அரசின் திட்டங்கள் மற்றும் ஒன்றிய அரசின் பங்களிப்புடன் கூடிய திட்டங்களுக்கு ஒன்றிய அரசால் விடுவிக்கப்படாத அல்லது குறைவாக விடுவிக்கப்பட்டதன் காரணமாக செலவளிக்க இயலாத தொகையையும் உள்ளடக்கும்;

(d) ''மேம்பாட்டில் உள்ள இடைவெளிகள்'' என்பது, மாநில சராசரியுடன் ஒப்பிடுகையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொடர்பாக, வகுத்துரைக்கப்பட்ட மேம்பாட்டு குறியீடுகளின் பற்றாக்குறை என்று பொருள்படும்;

(e) ''பொது திட்டங்கள்'' என்பது, மாநிலத்தில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உள்ளடங்கலான அனைத்து சமூக குழுக்களுக்கும் நலன் பயக்கும், நலத்திட்ட செலவினங்கள் குறித்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட திட்டங்கள் என்று பொருள்படும்;

(f) ''ஆதிதிராவிடர்'' மற்றும் ''பழங்குடியினர்'' என்பது இந்திய அரசியலமைப்பின் 366—ஆம் உறுப்பின், முறையே (24) மற்றும் (25) ஆம் கூறுகளில் அவற்றிற்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(g) ''சிறப்பு திட்டங்கள்'' என்பது, மாநிலத்தில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு மட்டுமே நலன் பயக்கும் நலத்திட்ட செலவினங்களை விவரக்குறிப்பில் உள்ளடக்கப்பட்ட திட்டங்கள் என்று பொருள்படும்;

(h) ''மாநிலம்'' என்பது, தமிழ்நாடு மாநிலம் என்று பொருள்படும்;

(i) ''மாநில மன்றம்'' என்பது, 3 ஆம் பிரிவின் கீழ் அமைத்துருவாக்கப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுக்கான தமிழ்நாடு மாநில குழு என்று பொருள்படும்;

(j) ''நலத்திட்டச் செலவினங்கள் குறித்த அறிக்கை'' என்பது நலத்திட்ட செலவினத்தின் துறைவாரியான சுருக்கத்தையும், பல்வேறு நலத்திட்டங்களுக்கான நிதிநிலை ஒதுக்கீடுகளையும் உள்ளடக்கியுள்ள அரசால் வெளியிடப்பட்டுள்ள விவரவுரை என்று பொருள்படும்;

(k) ''மாநிலத்தின் மொத்த நலத்திட்ட செலவினங்கள் ஒதுக்கீடு'' என்பது நலத்திட்ட செலவின் விவர அறிக்கையில் பட்டியலிடப்பட்ட திட்டங்களுக்காக, ஏற்படுத்தப்பட்ட நிதிநிலை ஒதுக்கீட்டின் முழுமொத்தத்தொகை என்று பொருள்படும்;

## அத்தியாயம் – II

### நிறுவனம் சார்ந்த ஒழுங்கமைவு.

மாநில மன்றம் அமைத்துரு– வாக்குதல்.

3. (1) அரசு, அறிவிக்கையின் மூலம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுக்கான தமிழ்நாடு மாநில மன்றம் என்று வழங்கப்பெறும் ஒரு மன்றத்தினை இந்தச் சட்டத்தின்கீழ் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் சார்ந்த பணிகள், மேற்கொள்ள அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(2) மாநில மன்றம் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:–

(a) முதலமைச்சர், பதவி வழித் தலைமையாளராக இருப்பார்;

(b) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையை பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சர், பதவி வழி;

(c) நிதித்துறையை பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சர், பதவிவழி;

(d) வனத்துறையை பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சர், பதவிவழி;

(e) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே இருந்து அரசால் நியமனம் செய்யப்பட வேண்டிய ஐந்து உறுப்பினர்கள், பதவி வழி;

(f) அரசு தலைமைச் செயலாளர், பதவி வழி;

(g) நிதித்துறையை பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவி வழி;

(h) திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையை பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவி வழி;

(i) சுற்றுச்சூழல், கால நிலை மாற்றம் மற்றும் வனத்துறையை பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவி வழி;

(j) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையை பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவி வழி உறுப்பினர் – செயலாளராக இருப்பார்; மற்றும்

(k) மாநிலத்தில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காகப் பணிபுரியும் நபர்களிடையே இருந்து அரசால் நியமனம் செய்யப்பட வேண்டிய ஓர் உறுப்பினர்.

(3) (2) ஆம் உட்பிரிவின் (e) கூறின்கீழ் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள், நேர்விற்கேற்ப, அவர்கள் சட்டமன்ற அல்லது நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் வரையில் பதவியில் இருக்கலாம்.

(4) (2) ஆம் உட்பிரிவின் (k) கூறின்கீழ் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் ஓர் ஆண்டு காலஅளவுக்கு பதவியில் இருக்கலாம்.

(5) அரசு, எந்நேரத்திலும் (2) ஆம் உட்பிரிவின் (e) கூறு அல்லது (k) கூறின்கீழ் செய்யப்பட்ட நியமனங்கள் எதனையும் இரத்து செய்யலாம் மற்றும் கூறப்பட்ட கூறுகளின்கீழ் புதிய நியமனங்களை செய்யலாம்.

(6) நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படித்தொகைகள் பெறத் தகுதியுடையவர்களாக இருப்பர்;

(7) மாநில மன்றம், ஓர் ஆண்டில் ஒரு முறையேனும் கூடுதல் வேண்டும்.

மாநில மன்றம் செயற்பணிகள்.

4. மாநில மன்றம், பின்வரும் செயற்பணிகளைப் மேற்கொள்ள வேண்டும்:——

(a) மேம்பாட்டு செயல் திட்டம் தொடர்புடைய கொள்கைப் பொருட்பாடுகளின் மீது அரசுக்கு ஆலோசனை வழங்குதல்;

(b) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டுக்கான திட்டங்களை திட்டமிடல் மற்றும் செயல்படுத்துதலுக்கு நடவடிக்கைகளை எடுத்துரைத்தல்;

(c) அதிகாரமளிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட மேம்பாட்டு செயல் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தல்;

(d) மேம்பாட்டு செயல் திட்டத்தை திட்டமிடுதல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தலில் அதிகாரமளிக்கப்பட்ட குழுவிற்கு தேவையான வழிகாட்டுதல்களை அளித்தல்; மற்றும்

(e) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற செயற்பணிகளை புரிதல்.

அதிகாரமளிக்கப்பட்ட குழுவினை அமைத்துருவாக்குதல்

5. (1) பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கிய மாநில மன்றத்தின் அதிகாரமளிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்,—

(a) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சர், பதவிவழித் தலைமையாளராக இருப்பார்;

(b) அரசு தலைமைச் செயலாளர், பதவிவழி;

(c) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையை பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவிவழி;

(d) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவிவழி;

(e) திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையை பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவிவழி;

(f) சுற்றுச்சூழல், கால நிலை மாற்றம் மற்றும் வனத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவிவழி;

(g) ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர், பதவிவழி நடத்துநராக இருத்தல் வேண்டும்;

(h) பழங்குடியினர் நலத்துறை இயக்குநர், பதவிவழி இணை நடத்துநராக இருத்தல் வேண்டும்;

(2) எந்தத் துறைகளுக்கு, செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நிதியானது குறித்தொதுக்கப்பட்டதோ அல்லது குறித்தொதுக்கப்பட முன்மொழியப்பட்டதோ அந்தந்த துறைகளின் அரசு செயலாளர்கள், அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக இருத்தல் வேண்டும்.

(3) அதிகாரமளிக்கப்பட்ட குழுவானது ஓர் ஆண்டில் குறைந்தது மூன்று முறை கூடுதல் வேண்டும்.

அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் செயற்பணிகள்.

6. அதிகாரமளிக்கப்பட்ட குழுவானது, பின்வரும் செயற்பணிகளைப் புரிதல் வேண்டும்.

(a) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டுக்கான உரிய திட்டங்களை வகுத்தல் மற்றும் வடிவமைத்தல்;

(b) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டுக்கான திட்டங்களை அந்தந்த துறைகளால் செயல்படுத்தப்படுவதை கண்காணித்தல் மற்றும் மறுஆய்வு செய்தல்;

(c) மேம்பாட்டு செயல் திட்ட வரைவினை மதிப்பீடு செய்து அதன் ஒப்புதலுக்கு மாநில மன்றம் முன் வைத்தல்

(d) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டுக்கான, அந்தந்த துறைகளின், நடப்பிலுள்ள திட்டங்களின் செயல்பாடு மற்றும் தாக்கத்தை மதிப்பீடு செய்து அதை மாநில மன்றத்திற்கு தெரிவித்தல்;

(e) ஒரு நிதியாண்டில் பல்வேறு துறைகளுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டுக்காக இந்தச் சட்டத்தின்படி ஒதுக்கப்பட்டு செலவிடப்படாத நிதியின் அளவை இறுதி செய்தல் மற்றும் வருகின்ற நிதியாண்டிற்கு அடுத்த நிதியாண்டிற்கு முன் கொண்டு செல்லப்படுதல் வேண்டும்;

(f) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற செயற்பணிகளைப் புரிதல் வேண்டும்.

முகமைத் துறையும் அதன் செயற்பணிகளும்.

7. (1) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையானது மேம்பாட்டு செயல் திட்டத்தை உருவாக்கி செயல்படுத்துதலுக்கு முகமைத் துறையாக இருக்கும்.

(2) முகமைத் துறையானது,——

(a) மேம்பாட்டு செயல் திட்ட வரைவினை தயாரித்து அதனை பரிசீலனைக்கும் ஒப்புதலுக்கும் அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் முன்பு வைத்தல் வேண்டும்.

(b) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டுக்கான திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை கண்காணித்தல் வேண்டும்.

(c) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுக்காக இந்தச் சட்டத்தின்கீழ் குறித்தொதுக்கப்பட்ட நிதியை திட்டமிடல், ஒதுக்கீடு மற்றும் பயன்பாட்டிற்குத் தேவைப்படலாகிற தரவுத்தளத்தை பேணுதல் வேண்டும்;

(d) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுக்கான திட்டங்களின் செயலாக்கத்தின் முன்னேற்றத்தை கண்டறிய பரிந்துரைக்கப்படும் விதத்தில் ஆராய்ச்சி, மதிப்பாய்வு மற்றும் புள்ளியியல் முறையில் ஆய்வை மேற்கொள்ளுதல்;

(e) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுக்கான அத்தகைய தகவலை தெரிவிப்பதற்கு ஒரு வலைவாயிலை பரிந்துரைக்கப்படும் வகையில் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் உருவாக்குதல்; மற்றும்

(f) மேம்பாட்டில் உள்ள இடைவெளிகளின் அடிப்படையில், மேம்பாட்டு செயல் திட்டத்தை செயல்படுத்துதலில் காலமுறையிலான விளைவுப் பகுப்பாய்வை மேற்கொள்ளுதல்.

8. (1) ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டக் கண்காணிப்புக் குழு ஒன்று இருத்தல் வேண்டும்; அது மாவட்டத்தில் மேம்பாட்டு செயல் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு பொறுப்புக் கொண்டதாக இருத்தல் வேண்டும். மாவட்டக் கண்காணிப்புக் குழு மற்றும் செயற்பணிகள்

(2) மாவட்டக் கண்காணிப்புக் குழுவானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்

(a) மாவட்ட ஆட்சித் தலைவர், பதவி வழித் தலைவராக இருப்பார்;

(b) மாவட்டத்தில் தொகுதி முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அமையப்பெற்ற, அரசால், நியமனம் செய்யப்பட வேண்டிய, முன்னுரிமையாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சேர்ந்த ஐந்திற்கும் மிகாத மாநில சட்டமன்ற அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்கள், பதவிவழி;

(c) திட்ட இயக்குநர் – மாவட்ட ஊரக மேம்பாட்டு முகமை, பதவி வழி;

(d) மாவட்ட வருவாய் அலுவலர், பதவி வழி;

(e) மாவட்ட வன அலுவலர், பதவி வழி;

(f) இணை இயக்குநர், வேளாண்மை, பதவி வழி;

(g) மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், பதவிவழி நடத்துநராக இருத்தல் வேண்டும்.

(h) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள மாவட்டத்தின் திட்ட அலுவலர் பதவிவழி இணை நடத்துநராக இருத்தல் வேண்டும்.

(3) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுக்கான மேம்பாட்டு செயல் திட்டத்தில் நிதி குறித்தொதுக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட முன்மொழியப்பட்ட அந்தந்த துறைகளின் மாவட்ட அளவிலான அலுவலர்கள், மாவட்டக் கண்காணிப்புக் குழுவின் கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக இருத்தல் வேண்டும்.

(4) (2) ஆம் உட்பிரிவின் (b) கூறின்கீழ் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள், நேர்விற்கேற்ப அவர்கள் சட்டமன்றப் பேரவை அல்லது நாடாளுமன்ற உறுப்பினராக பதவியில் இருக்கும் வரையில்.

(5) அரசு, எந்நேரத்திலும் (2) ஆம் உட்பிரிவின் (b) கூறின்கீழ் செய்யப்பட்ட நியமனங்கள் எதனையும் இரத்து செய்யலாம் மற்றும் கூறப்பட்ட கூறுகளின்கீழ் புதிய நியமனங்களை செய்யலாம்.

(6) நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படித்தொகைகள் பெறத் தகுதியுடையவர்களாக இருப்பர்.

(7) மாவட்டக் கண்காணிப்புக் குழுவானது மாவட்டத்தில் மேம்பாட்டு செயல் திட்டம் செயல்படுத்தப்படுவதை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்து, முகமைத் துறைக்கு ஒரு முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

## அத்தியாயம்-III

மேம்பாட்டு செயல் திட்டத்தை தயாரித்தல் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்தல்.

மேம்பாட்டு செயல் திட்டத்தை தயாரித்தல்.

9. (1) முகமைத் துறையானது, தொடர்புடைய துறைகளுடன் கலந்தாலோசித்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டில் உள்ள இடைவெளிகளை மதிப்பீடு செய்தும், அதன் பின்பு வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மேம்பாட்டு செயல் திட்டத்தின் வரைவு ஒன்றை தயாரித்தும் அதிகாரமளிக்கப்பட்ட குழுவிடம் ஒவ்வொரு நிதியாண்டின் தொடக்கத்திற்கு முன்பாக அதன் பரிசீலனைக்காகவும் அதன் ஒப்புதலுக்காகவும் அனுப்புதல் வேண்டும்.

(2) அதிகாரமளிக்கப்பட்ட குழுவானது, மேம்பாட்டு செயல் திட்டத்தின் வரைவை மதிப்பீடு செய்து, தாம் பொருத்தமெனக் கருதலாகும் மாற்றமைவுகளுடனோ அல்லது இல்லாமலோ மாநில மன்றத்திடம் அதன் ஒப்புதலுக்காக அனுப்புதல் வேண்டும்.

(3) மாநில மன்றமானது, மேம்பாட்டு செயல் திட்டத்தின் வரைவை ஆய்வு செய்து, தாம் பொருத்தமெனக் கருதலாகும் மாற்றமைவுகளுக்கிணங்க ஒப்புதல் அளித்தல் வேண்டும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டுக்கான நிதியத்தை குறித்தொதுக்குதல்.

10. (1) அரசு, ஒவ்வொரு நிதியாண்டிலும், மாநிலத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகையின் விகிதாச்சாரத்திற்கு குறையாத, மாநிலத்தின் மொத்த நலத் திட்ட செலவின ஒதுக்கீட்டின் ஒரு பகுதியிலிருந்து, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டுக்கான நிதியை குறித்தொதுக்குதல் வேண்டும்.

(2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டுக்காக, (1)—ஆம் உட்பிரிவின் கீழ் ஒரு துறைக்கு ஒரு குறிப்பிட்ட நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்படாத தொகையானது ஒதுக்கப்பட்ட நிதியத்தின் விலக்களிக்கப்பட்ட செலவினத்தைத் தவிர, வருகின்ற நிதியாண்டிற்கு அடுத்த நிதியாண்டிற்கு முன்கொண்டு செல்லப்படுதல் வேண்டும், ஆனால் அந்த ஆண்டிற்கும் அப்பால் முன்கொண்டு செல்லப்படுதல் கூடாது.

(3) அவ்வாறு முன்கொண்டு செல்லப்பட்ட நிதியிலிருந்து மூன்றில் இரண்டு பங்கு அதே துறைக்கு ஒதுக்கப்படுதல் வேண்டும் மற்றும் மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு தனி கணக்கின் கீழ் முகமைத் துறைக்கு ஒதுக்கப்படுதல் வேண்டும். அத்தகைய முன்கொண்டு செல்லப்பட்ட நிதியானது, அவ்வப்போது, அரசால் வழங்கப்படும் வழிகாட்டுதலுக்குட்பட்டு அந்தந்த துறைகளால் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) (1)—ஆம் உட்பிரிவின்படியான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டுக்கான நிதியானது, அரசின் ஆண்டு நிதிநிலை அறிக்கைக்கு இணங்க ஒவ்வொரு நிதியாண்டிற்கும் குறித்தொதுக்கப்படுதல் வேண்டும்.

குறித்தொதுக்கப்பட்ட நிதியில் செலவினம் உள்ளடக்கப்படுதல்.

11. 10—ஆம் பிரிவின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டுக்கான நிதியை ஒதுக்கீடு செய்யப்படும்பொழுது, பின்வரும் செலவினங்கள் அதில் உள்ளடக்கப்படலாம்,

(a) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு மட்டுமே பயனளிக்கும் சிறப்பு திட்டங்களைப் பொறுத்த வரையில், செலவினத்தின் நூறு விழுக்காடு அத்தகைய திட்டங்களுக்காக மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்

(b) பொது திட்டங்களைப் பொறுத்த வரையில், மாநிலத்தில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மக்கள் தொகையின் விகிதாச்சாரத்தில் அல்லது நேர்விற்கேற்ப ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான அத்தகைய திட்டங்களின் பயனாளர்களின் எண்ணிக்கையில் இதில் எது அதிகமோ, அதில் அத்தகைய திட்டங்களுக்கான ஒதுக்கீடு.

(c) பிரிக்கமுடியாத உள்கட்டமைப்புப் பணிகள் உள்ளடக்கிய திட்டங்களைப் பொறுத்த வரையில், அது பொருத்தமெனக் கருதலாகும் திட்ட செலவுத் தொகையின் ஒரு பகுதி.

திட்டங்களை முன்மொழிதல்

12. ஒவ்வொரு துறையும், மாநிலத்தில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டில் உள்ள இடைவெளிகளை வகுத்துரைக்கப்படும் முறையில் அளவீடு செய்து, ஒரு கலந்தாயத்தக்க நடைமுறையின் மூலம் அவர்களின் மேம்பாடு சார்ந்த தேவைகளுக்கு முன்னுரிமையளித்து திட்டங்களை முகமைத் துறையின் மூலமாக அதிகாரமளிக்கப்பட்ட குழுவிடம் முன்மொழிதல் வேண்டும்.

முன்மொழியப்பட்ட திட்டங்களின் மதிப்பீடு.

13. அதிகாரமளிக்கப்பட்ட குழுவானது, முகமைத் துறையால் முன்மொழியப்பட்டவை எவையேனுமிருப்பின், அத்திட்டங்களை மதிப்பீடு செய்து திட்டங்களை இந்தச் சட்டத்திற்கு இணங்கியிருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

## அத்தியாயம் — IV.

## பல்வகை.

வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புத் தன்மை.

14. (1) அரசானது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டுக்கான செயல் திட்டத்தின் செயல்படுத்துதலில், அதன் அனைத்து நிலைகளிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புத்தன்மையை உறுதி செய்தல் வேண்டும்.

(2) அரசு, மேம்பாட்டு செயல் திட்டத்தை செயற்படுத்தும் தகுநிலை ஆவணங்களை தொடர்புடைய புள்ளியியல் தரவுகளுடன் சேர்த்து இந்தச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட வலைவாயிலில் மற்றும் அரசால் அறிவிக்கப்படலாகும் பிற வலைவாயில் அல்லது பொது வெளி எதனிலும் வெளியிடுதல் வேண்டும்.

ஆண்டறிக்கை.

15. முகமைத் துறையானது, அந்த நிதியாண்டின் போது துறை வாரியான சாதனைகள் மற்றும் குறித்தொதுக்கப்பட்ட பயன்படுத்தப்படாத நிதிகளின் தகுநிலை அடங்கிய மேம்பாட்டு செயல் திட்ட செயல்படுத்துதலின் வெளிப்பாடு மற்றும் விளைவின் மீது ஒவ்வொரு நிதியாண்டைப் பொறுத்தும் ஓர் ஆண்டறிக்கையை சட்டமன்றத்தின் முன் வைத்தல் வேண்டும்.

இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

16. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்படுத்துவதில் இடர்பாடு ஏதேனும் எழுமாயின், அரசு, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட ஓர் ஆணையின் மூலம், இடர்பாட்டினை நீக்குவதற்கு தேவையானது அல்லது உகந்தது என அதற்கு தோன்றுகிறவாறு, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாதவாறு அத்தகைய வகையங்களைச் செய்யலாம்:

வரம்புரையாக, அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டு கால அளவு முடிவடைந்த பின்னர் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

17. (1) அரசானது, அறிவிக்கை மூலம், இந்தச் சட்டத்தின் அனைத்து அல்லது ஏதேனும் வகைமுறைகளைச் செயல்படுத்துவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாக மற்றும் முன்சென்ற அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றி, அத்தகைய விதிகள் பின்வரும் அனைத்து அல்லது ஏதேனும் பொருட்பாடுகளுக்கு வகைசெய்யலாம்,

(a) மேம்பாட்டில் உள்ள இடைவெளிகளை அளவிடுவதற்கான முன்னேற்ற குறியீடுகள் மற்றும் அத்தகைய அளவீட்டிற்கான முறை;

(b) மாநில மன்றம் மற்றும் மாவட்ட கண்காணிப்பு குழுவின் நியமன உறுப்பினர்களுக்கு செலுத்தத்தக்க படித்தொகைகள்;

(c) மாநில மன்றம் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் அத்தகைய பிற செயற்பணிகள்;

(d) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டுக்கான திட்டங்களை செயற்படுத்துவதன் முன்னேற்றத்தை கண்காணிக்க முகமைத் துறைகளால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி, மதிப்பாய்வு மற்றும் புள்ளியியல் முறையில் ஆய்வை மேற்கொள்ளுதல்;

(e) வலைவாயிலில் தெரிவிப்பதற்கு தகவலின் வகைகள் மற்றும் அத்தகைய தெரிவித்தலின் முறை;

(f) மேம்பாட்டு செயல் திட்டத்தை தயாரிக்கும் முறை;

(g) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டுக்காக 10–ஆம் பிரிவின் கீழ் நிதியை குறித்தொதுக்கும் முறை; மற்றும்

(h) இந்தச் சட்டத்தின்கீழ் வேண்டுறுத்தப்படக்கூடிய அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய ஏதேனும் பிற பொருட்பாடுகள்.

(3) (a) இந்தச் சட்டத்தின் கீழ் வகுக்கப்படும் அனைத்து விதிகளும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்ட ஒரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட அனைத்து அறிவிக்கைகளும், அவை குறிப்பிட்ட ஒரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின் படி வகுக்கப்படும் விதி அல்லது அறிவிக்கை அல்லது பிறப்பிக்கப்படும் ஆணை ஒவ்வொன்றும் அது வகுக்கப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட பின்னர், கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடரோ அதை அடுத்து வரும் கூட்டத்தொடரோ முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமாயின் அல்லது அந்த விதியோ அல்லது அறிவிக்கையோ அல்லது ஆணையோ வகுப்பப்படுதலோ பிறப்பிக்கப்படுதலோ கூடாது என சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமாயின், அதன் பின்பு அந்த விதியோ அறிவிக்கையோ அல்லது ஆணையோ அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே செயல் வடிவம் பெறுதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப செயல் வடிவம் பெறாது போதல் வேண்டும். எனினும் அவ்வாறு மாற்றியமைப்பது அல்லது செயல் வடிவம் பெறாது போகச் செய்வது எதுவும், அந்த விதியின்படியோ அறிவிக்கையின்படியோ அல்லது ஆணையின்படியோ முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கு குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

## நோக்கக் காரண விளக்கவுரை

இந்திய அரசியலமைப்பின் 46 ஆம் உறுப்பினை பின்பற்றியும், ஆண்டுத் திட்ட உருவாக்கத்தில் திட்ட ஆணையம் மற்றும் நிதி ஆயோக் வழங்கியுள்ள வழிகாட்டுதல்களை திறம்பட செயல்படுத்துவதற்கும், இது தொடர்பாக சட்டமன்ற பேரவைக் கூட்டத்தில் செய்யப்பட்ட அறிவிப்புகளைக் கருத்தில் கொண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டிற்கு ஒரு செயல் திட்டத்தைத் தயாரிப்பதற்கும், மாநிலத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மக்கள் தொகை விகிதாச்சாரப்படி அவர்களின் மேம்பாட்டிற்கு மாநிலத்தின் மொத்த நலத் திட்ட செலவின ஒதுக்கீட்டின் ஒரு பகுதியை குறித்தொதுக்குவதற்கும், குறித்தொதுக்கப்பட்ட நிதியங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்கு செலவிடப்படுவதை உறுதி செய்வதற்கும் ஒரு சட்டமியற்றலை மேற்கொள்வது அவசியமாகிறது. அதற்கிணங்க, மேற்சொன்ன நோக்கத்திற்காக, ஒரு சட்டமியற்றலைச் செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**என். கயல்விழி செல்வராஜ்,**
*ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்டமுன்வடிவின் 1(2), 2(c), 3(6), 4(e), 6(f), 7(2) (d), 7(2) (e), 8(6), 9(1), 10(1), 12, 14(2), 16 மற்றும் 17(1) ஆகிய கூறுகள், அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, நேர்விற்கேற்ப, அறிவிக்கைகள் அல்லது ஆணைகளை வெளியிடுவதற்கு அல்லது விதிகளை செய்வதற்கு, அரசுக்கு அதிகாரமளிக்கின்றது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி மற்றும் தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**என். கயல்விழி செல்வராஜ்,**
*ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.*

## நிதி பற்றிய குறிப்பு

இச்சட்ட முன்வடிவானது சட்டமாக இயற்றப்படும் போது மாநிலத் தொகுநிதியத்திலிருந்து செலவு செய்ய நேரிடும். எனினும் இந்நிலையில், முன்மொழியப்பட்ட சட்டத்தின் விளைவாக மாநிலத் தொகு நிதியத்திலிருந்து ஏற்படக்கூடிய செலவினத்தை மிகத் துல்லியமாக எந்த கோணத்திலும் மதிப்பிட இயலாது.

**என். கயல்விழி செல்வராஜ்,**
*ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2024 பிப்ரவரி 21.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

**2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2024

**2023–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், மாநிலத் தொகுநிதியத்திலிருந்து மேலும் குறிப்பிட்ட சில தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு.

1. இந்தச் சட்டம், 2024–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டம் என வழங்கப்பெறும்.

2023–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் மாநிலத் தொகுநிதியத்திலிருந்து துணை நிதி ஒதுக்கம் செய்தல்.

2. மாநில அரசு, 2023–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் தேவைப்படுகிற முப்பதாயிரத்து முந்நூற்று ஐம்பத்து ஐந்து கோடியே முப்பத்தொரு இலட்சத்து எழுபத்து ஓராயிரம் ரூபாய்க்கு மேற்படாத மேலுமானதொரு தொகையை–

(a) இணைப்புப் பட்டியலின் (3)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காகத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட துணை மானியங்களையும்;

(b) இணைப்புப் பட்டியலின் (4)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காக மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்ட துணைச் செலவினத்தையும்;

எதிர்கொள்வதற்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்யலாம்.

**இணைப்புப் பட்டியல்.**
(2–ஆம் பிரிவைக் காண்க).

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 001 | மாநில சட்டமன்றம் | வருவாய் | 6,000 | *1,35,82,000* | 1,35,88,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 002 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | வருவாய் | 8,20,03,000 | *2,14,64,000* | 10,34,67,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 003 | நீதி நிருவாகம் | வருவாய் | 308,01,16,000 | *53,96,72,000* | 361,97,88,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 004 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | வருவாய் | 13,000 | *10,68,51,000* | 10,68,64,000 |
| | | மூலதனம் | 315,97,45,000 | ... | 315,97,45,000 |
| | | கடன் | 30,09,000 | ... | 30,09,000 |
| 005 | வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை | வருவாய் | 1,09,000 | *4,82,000* | 5,91,000 |
| | | மூலதனம் | 117,24,34,000 | ... | 117,24,34,000 |
| | | கடன் | 91,54,17,000 | ... | 91,54,17,000 |
| 006 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) | வருவாய் | 53,000 | *12,53,000* | 13,06,000 |
| | | மூலதனம் | 4,000 | ... | 4,000 |
| | | கடன் | 53,73,000 | ... | 53,73,000 |
| 007 | மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) | வருவாய் | 46,40,78,000 | ... | 46,40,78,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 008 | பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) | வருவாய் | 27,12,33,000 | ... | 27,12,33,000 |
| | | மூலதனம் | 33,00,02,000 | ... | 33,00,02,000 |
| | | கடன் | 150,00,00,000 | ... | 150,00,00,000 |
| 009 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | வருவாய் | 268,42,52,000 | ... | 268,42,52,000 |
| | | மூலதனம் | 4,000 | ... | 4,000 |
| | | கடன் | 9,99,000 | ... | 9,99,000 |
| 010 | வணிகவரிகள் (வணிகவரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 79,19,22,000 | ... | 79,19,22,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 60,00,000 | ... | 60,00,000 |
| 011 | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிகவரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 27,28,48,000 | *6,64,000* | 27,35,12,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 012 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 1,078,99,49,000 | ... | 1,078,99,49,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 42,43,000 | ... | 42,43,000 |

| கோரிக்கை எண் (1) | பணிகளும் நோக்கங்களும் (2) | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது (3) (ரூ.) | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* (4) (ரூ.) | மொத்தம் (5) (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 013 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | **வருவாய்** | 463,49,80,000 | ... | 463,49,80,000 |
| | | **மூலதனம்** | 1,000 | ... | 1,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 014 | எரிசக்தித் துறை | **வருவாய்** | 15,695,73,78,000 | ... | 15,695,73,78,000 |
| | | **மூலதனம்** | 58,46,45,000 | ... | 58,46,45,000 |
| | | **கடன்** | 1,000 | ... | 1,000 |
| 015 | சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை) | **வருவாய்** | 3,000 | ... | 3,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | 2,97,65,000 | ... | 2,97,65,000 |
| 016 | நிதித் துறை | **வருவாய்** | 41,72,57,000 | *2,50,000* | 41,75,07,000 |
| | | **மூலதனம்** | 1,000 | ... | 1,000 |
| | | **கடன்** | 2,000 | ... | 2,000 |
| 017 | கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | **வருவாய்** | 289,71,39,000 | ... | 289,71,39,000 |
| | | **மூலதனம்** | 111,50,00,000 | ... | 111,50,00,000 |
| | | **கடன்** | 36,99,000 | ... | 36,99,000 |
| 018 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | **வருவாய்** | 5,49,33,000 | ... | 5,49,33,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 019 | மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை | **வருவாய்** | 578,78,75,000 | *14,76,000* | 578,93,51,000 |
| | | **மூலதனம்** | 87,17,23,000 | ... | 87,17,23,000 |
| | | **கடன்** | 96,31,000 | ... | 96,31,000 |
| 020 | உயர்கல்வித் துறை | **வருவாய்** | 69,33,47,000 | ... | 69,33,47,000 |
| | | **மூலதனம்** | 4,000 | ... | 4,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 021 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | **வருவாய்** | 41,22,23,000 | *9,47,000* | 41,31,70,000 |
| | | **மூலதனம்** | 28,000 | *253,14,04,000* | 253,14,32,000 |
| | | **கடன்** | 10,00,000 | ... | 10,00,000 |
| 022 | காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 274,32,44,000 | ... | 274,32,44,000 |
| | | **மூலதனம்** | 1,000 | ... | 1,000 |
| | | **கடன்** | 1,000 | ... | 1,000 |
| 023 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 21,43,15,000 | *27,76,000* | 21,70,91,000 |
| | | **மூலதனம்** | 1,000 | ... | 1,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 024 | சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 53,95,12,000 | ... | 53,95,12,000 |
| | | **மூலதனம்** | 7,10,22,000 | ... | 7,10,22,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 025 | இயக்கவூர்திகள் குறித்த சட்டங்கள் – நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 11,44,11,000 | ... | 11,44,11,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 026 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | வருவாய் | 13,000 | ... | 13,000 |
| | | மூலதனம் | 1,399,99,97,000 | ... | 1,399,99,97,000 |
| | | கடன் | 3,000 | ... | 3,000 |
| 027 | தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை | வருவாய் | 14,000 | ... | 14,000 |
| | | மூலதனம் | 154,59,72,000 | ... | 154,59,72,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 028 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 22,26,98,000 | *1,97,000* | 22,28,95,000 |
| | | மூலதனம் | 6,05,000 | ... | 6,05,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 029 | சுற்றுலா – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | வருவாய் | 2,09,04,000 | ... | 2,09,04,000 |
| | | மூலதனம் | 6,000 | ... | 6,000 |
| | | கடன் | 43,68,000 | ... | 43,68,000 |
| 030 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 6,000 | ... | 6,000 |
| | | மூலதனம் | 13,91,52,000 | ... | 13,91,52,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 031 | தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை | வருவாய் | 17,80,83,000 | ... | 17,80,83,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 032 | தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை | வருவாய் | 135,61,16,000 | ... | 135,61,16,000 |
| | | மூலதனம் | 2,000 | ... | 2,000 |
| | | கடன் | 1,50,00,000 | ... | 1,50,00,000 |
| 033 | சட்டத் துறை | வருவாய் | 9,47,26,000 | ... | 9,47,26,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 25,00,000 | ... | 25,00,000 |
| 034 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | வருவாய் | 18,000 | ... | 18,000 |
| | | மூலதனம் | 9,000 | ... | 9,000 |
| | | கடன் | 2,000 | ... | 2,000 |
| 035 | மனிதவள மேலாண்மைத் துறை | வருவாய் | 5,13,21,000 | *5,000* | 5,13,26,000 |
| | | மூலதனம் | 1,42,59,000 | ... | 1,42,59,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 036 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | வருவாய் | 6,000 | *14,97,000* | 15,03,000 |
| | | மூலதனம் | 50,43,74,000 | ... | 50,43,74,000 |
| | | கடன் | 1,30,30,000 | ... | 1,30,30,000 |
| 038 | பொதுத் துறை | வருவாய் | 46,40,02,000 | ... | 46,40,02,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | 12,00,00,000 | ... | 12,00,00,000 |
| 039 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | வருவாய் | 29,54,78,000 | *26,05,000* | 29,80,83,000 |
| | | மூலதனம் | 14,000 | ... | 14,000 |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 040 | நீர்வளத் துறை | **வருவாய்** | 198,93,17,000 | *5,00,000* | 198,98,17,000 |
| | | **மூலதனம்** | 50,000 | *43,75,23,000* | 43,75,73,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 041 | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | **வருவாய்** | 374,26,90,000 | *9,25,000* | 374,36,15,000 |
| | | **மூலதனம்** | ... | *38,90,16,000* | 38,90,16,000 |
| | | **கடன்** | 45,00,000 | ... | 45,00,000 |
| 042 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | **வருவாய்** | 587,64,68,000 | ... | 587,64,68,000 |
| | | **மூலதனம்** | 802,33,66,000 | ... | 802,33,66,000 |
| | | **கடன்** | 76,00,000 | ... | 76,00,000 |
| 043 | பள்ளிக் கல்வித் துறை | **வருவாய்** | 913,82,05,000 | ... | 913,82,05,000 |
| | | **மூலதனம்** | 3,000 | ... | 3,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 044 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | **வருவாய்** | 76,29,00,000 | ... | 76,29,00,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | 1,000 | ... | 1,000 |
| 045 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | **வருவாய்** | 1,05,000 | ... | 1,05,000 |
| | | **மூலதனம்** | 6,000 | ... | 6,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 046 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | **வருவாய்** | 9,68,58,000 | ... | 9,68,58,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | 62,89,000 | ... | 62,89,000 |
| 047 | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | **வருவாய்** | 42,57,25,000 | ... | 42,57,25,000 |
| | | **மூலதனம்** | 3,64,99,000 | ... | 3,64,99,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 048 | போக்குவரத்துத் துறை | **வருவாய்** | 159,12,24,000 | ... | 159,12,24,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | 8,000 | ... | 8,000 |
| 049 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | **வருவாய்** | 228,15,62,000 | ... | 228,15,62,000 |
| | | **மூலதனம்** | 1,99,98,000 | ... | 1,99,98,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 050 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | **வருவாய்** | 26,000 | *31,54,73,000* | 31,54,99,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 051 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | **வருவாய்** | 3,183,47,01,000 | *4,79,000* | 3,183,51,80,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 052 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | **வருவாய்** | 20,000 | ... | 20,000 |
| | | **மூலதனம்** | 5,29,42,000 | ... | 5,29,42,000 |
| | | **கடன்** | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 053 | சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை | வருவாய் | 1,056,17,80,000 | ... | 1,056,17,80,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 054 | வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை) | வருவாய் | 36,000 | *15,05,000* | 15,41,000 |
| | | மூலதனம் | 17,000 | ... | 17,000 |
| | | கடன் | ... | ... | ... |
| | கடன் செலவுகள் | வருவாய் | ... | *89,000* | 89,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| | பொதுக் கடன்–திருப்பிச் செலுத்துதல் | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | *6,000* | 6,000 |
| | **மொத்தம்** | **வருவாய்** | **26,488,82,01,000** | ***101,26,92,000*** | **26,590,08,93,000** |
| | | **மூலதனம்** | **3,164,18,87,000** | ***335,79,43,000*** | **3,499,98,30,000** |
| | | **கடன்** | **265,24,42,000** | ***6,000*** | **265,24,48,000** |
| | **பெருமொத்தம்** | | **29,918,25,30,000** | ***437,06,41,000*** | **30,355,31,71,000** |

**நோக்க–காரண விளக்கவுரை.**

இச்சட்ட முன்வடிவானது––

(a) 2023– ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டிற்காக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட துணை மானியங்களையும்;

(b) அந்த ஆண்டிற்காக, மாநிலத் தொகுநிதியத்தின்மீது சாட்டப்பட்ட துணைச் செலவினத்தையும்,

எதிர்கொள்வதற்குத் தேவைப்படும் தொகையை அந்நிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்காக, அரசமைப்புச் சட்டத்தின் 204–ஆம் உறுப்பின் (1)– ஆம் கூறுடன் இணைத்துப் பொருள் கொள்ளப்பட வேண்டிய 205–ஆம் உறுப்பினையொட்டி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

**தங்கம் தென்னரசு,**
**நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர்.**

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2024 பிப்ரவரி 21.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.